விலை : 20.00
பக்கங்கள்: பதினாறு + பதினாறு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

SPEED
PURIFIED DRINKING WATER
சுத்தமான குடி தண்ணீர்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள
மங்கல நிகழ்வுகள், விடுதிகள்,
ஹோல்கள் (Hall)
விசேட விலைக்கழிவு
வழங்கப்படும்.
ஸ்ரீமுருகன்
தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 5392
(C-8284)

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 வைகாசி 17 ஞாயிற்றுக்கிழமை (31.05.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 163

# கட்சி மாறும் அரசியல்வாதிகள் தேர்தலில் போட்டியிட முடியாது!



## மைத்திரி-ரணில் இணக்கம்

(கொழும்பு)

தேர்தலில் போட்டியிடும் நோக்கில் இரண்டு பிரதான அரசியல் கட்சிகளில் இருந்து அணி மாறும் எந்த அரசியல்வாதிக்கும் எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிட வாய்ப்பு வழங்குவதில்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளனர்.

நாட்டில் புதிய அரசியல் கலாசாரம் ஒன்றை ஆரம்பிக்கும் நோக்கில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரான ஜனாதிபதியும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான பிரதமரும் இந்த இண

16ஆம் பக்கம் பார்க்க

## ரணிலுக்கு எதிரான பிரேரணை

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக முன்னெடுக்கப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணையால் தேர்தல் சீர்திருத்த யோசனையான 20ஆவது திருத்தம் பாதிக்கப்படாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்

பிரதமர் என்பவர் அரசியல் அமைப்பின் கீழ் ஜனாதிபதியினால் நியமிக்கப்படுகின்ற ஒருவர் என்ற அடிப்படையில் அவருக்கு எதிராகவே

15ஆம் பக்கம் பார்க்க

## பிளவுபட்டுள்ளது சுதந்திரக் கட்சி

### சந்திரிகா கவலை

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தற்போது இரண்டாக பிளவுபட்டுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

கண்டி, மேல்நாட்டு கலை சங்க மண்டபத்தில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசும்போதே அவர் இதனை கூறியுள்ளார். ஸ்ரீலங்கா சுதந்திரக்



16ஆம் பக்கம் பார்க்க

## யாழில் வன்முறைகளில் ஈடுபட்ட நால்வர் பொலிஸாரால் கைது

### சி.சி.ரிவி மூலம் சிக்கினர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நகரப் பகுதியில் வன்முறையில் ஈடுபட்ட சந்தேகத்தில் மேலும் நால்வரை நேற்று கைது செய்துள்ளதாக யாழ்பாணம் பொலிஸார் தெரிவித்தனர். கைதான நால்வரும் ஓட்டுமடம் பகுதியினை சேர்ந்தவர்கள் என பொலிஸார் கூறினர்.

புங்குடுதீவு மாணவி வித்தியாவின் படுகொலைக்கு எதிர்ப்பு தெரிவித்து ஆங்காங்கே ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றிருந்தன.

இதன்போது வர்த்தக நிலைய உரிமையாளர்களை அச்சுறுத்தியமை, வங்கிகளுக்குள் புகுந்து அதன் செயற்பாடுகளுக்கு பங்கம்விளைவித்தமை, தனியார் கட்டடங்கள் மீது கல்வீசி தாக்கியமை போன்ற குற்றங்களில் ஈடுபட்டவர்களையே இவ்வாறு கைது செய்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

கைதான நால்வரையும்பொலிஸ்

16ஆம் பக்கம் பார்க்க

## உள்ளே...

வலம்புரி சங்குநாதம்



தமிழரை நெகிழவைத்த

ஜனாதிபதி மைத்திரி



உங்கள் சங்குநாதத்தில் அரசியல் · அறிவியல் · ஆன்மிகம் ...

## பாடசாலை மாணவர்கள் மீதான பாலியல் துஷ்பிரயோகம் அதிகரிப்பு

### கல்வி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

போர் நடந்த வடக்கு மாகாணத்தில் அண்மைக்காலமாக பாடசாலை மாணவர்கள் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்படும் சம்பவங்கள் குறித்த முறைப்பாடுகள் அதிகரித்துள்ளதாக கல்வி இராஜாங்க அமைச்சர் வீ.இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

போர் முடிந்த பின்னர் அங்கு யாழ்ப்பாணம் உட்பட வட மாகாணத்தின் பல மாவட்டங்களிலும் இருந்து பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்களாலும் பிறராலும் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளான சம்பவங்கள் குறித்து தமது அமைச்சுக்கு பல முறைப்பாடுகள் கிடைத்திருப்பதாகவும்அவர் கூறினார்.

பல சந்தர்ப்பங்களில் பெற்றோர் பொலிஸில் முறைப்பாடு செய்வதை தவிர்த்த அவை குறித்து கல்வி

15ஆம் பக்கம் பார்க்க

## மகிந்தவுக்கு தேர்தல் வாய்ப்பை பெற அரசியல் தலைவர்கள் கூட்டுமுயற்சி

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு போட்டியிட வாய்ப்பளிப்பதா இல்லையா என்ற தீர்மானத்தை முன்னணியின் நிறைவேற்றுச் சபைக்கு கொண்டு செல்வது தொடர்பில் முன்னணியின் தலைவர்கள் இணக்கத்திற்கு வந்துள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கீழ் போட்டியிட வாய்ப்பை வழங்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மறுத்துள்ள நிலையில், முன்னணியின் தலைவர்கள் இந்த தீர்மானத்திற்கு வந்துள்ளனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவர்களுக்கும் இடையில் ஜனாதிபதி செயலகத்தில் கடந்த 27ஆம் திகதி நடைபெற்ற சந்திப்பின் போது, மகிந்தவை பிரதமர் வேட்பாளராக நிறுத்த மறுப்பு தெரிவித்துள்ள ஜனாதிபதி, பிரத

16ஆம் பக்கம் பார்க்க

SONY 32" SONY வட்டி இல்லை விசேட விலை ரூ.54,999
SAMSUNG SMUA32H4100 32" SAMSUNG வட்டி இல்லை விசேட விலை ரூ.54,999
SINGER® 32" வட்டி இல்லை விசேட விலை ரூ.49,999
TCL 32" The Creative Life விசேட விலை ரூ.39,999
SISIL WORLD
இச் சலுகை சிசில் வேல்ட் இடம் இருந்து
இலவசம் Dialog DISH
TCL 28" விசேட விலை ரூ.35,999
TCL 24" வட்டி இல்லை விசேட விலை ரூ.26,999
இல.106, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.0212219291
இல.125, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம் தொ.பே.0212242335 (சி-1129)
இல.17/3 கண்டி வீதி, கிளிநொச்சி. தொ.பே.0212283755
இல.106, கண்டி வீதி, வவுனியா. தொ.பே.0778561406
மூன்று வருட உத்தரவாதம் இலவசம்
நிபந்தனைக்கு உட்பட்டது

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பு வாசகர்களே !

01.06.2015 முதல் உங்கள் வலம்புரியில்

**செல்ஃ(f)பி**

சிறந்த செல்ஃ(f)பி அனுப்புபவர்களுக்கு வாராந்தம் பரிசில்கள் உண்டு.

நீங்கள் அனுப்ப வேண்டிய மின்னஞ்சல்
photosofvalampurii@gmail.com

## அதிரடிச் சலுகை

வலம்புரியின் அதிரடிச் சலுகை

- மரண அறிவித்தல்கள்
- கண்ணீர் அஞ்சலிகள்
- நினைவு கூருதல்

ஆகியவற்றுக்கு
01.06.2015 முதல்

மேலதிக விபரங்களுக்கு இன்றே வலம்புரி காரியாலயத்தை நாடுங்கள்...

தொடர்புகளுக்கு :-
021 221 7603, 021 321 0815
021 567 1543

Valampuriijaffna@gmail.com

## மனோதத்துவ வைத்தியம்

மனோதத்துவ நிபுணர் (General Psyohotheraphy)

**Dr.P.ஆறுமுகம்**

**T.P :- 0777 569 205**

01.06.2015 முதல் 08.06.2015 வரை
8 நாட்கள் மட்டுமே இருப்பார்
பதிவுக் கட்டணம் ரூபா 300/=



மீண்டும் யாழில்

ஆண்களுக்கு ஏற்படும் விந்து உயிரணுக்குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்தின் மூலம் யாழ்ப்பாணத்தில் பலருக்கு குழந்தைகிடைத்தமைக்கு எம்மிடம் ஆதாரங்கள் உண்டு.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறப்பில் ஆண்மைக்குறைவை தவிர) எந்தமோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவ ரீதியிலும் மிகத்திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம்.

ஆரம்ப மனநோய், நீரிழிவு நோய், ஆஸ்துமா, மாதவிடாய் கோளாறுகள், தலையிடி, முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு இயற்கை மூலிகை மருந்துகன் மூலம் சிகிச்சை.

இளைஞர்கள் ஞாபகத் திறன் குறைவு கல்வியில் நாட்டம் குன்றி பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளை திருத்தி வாழ்வில் வெற்றிபெற

இவை அனைத்துக்கும் மனோ தத்துவ் நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

(C-1112)

**நாதன் இன்**

(பழைய கமல் டொச்) 392 / A மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். (சிவதர்சன் எலற்ரிக்கல் கடைக்கு அருகில்) பெருமாள் கோவிலுக்கும் வெலிங்டன் சந்திக்கும் இடையில்.


# மைத்திரி அரசாங்கத்தினால் தமிழர்களுக்கு நன்மையில்லை

## வடக்கு முதலமைச்சர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரசு தமிழர்களுக்கு எந்த ஒரு உதவியோ நன்மையோ செய்யவில்லை என வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தொலைபேசி மூலம் வெளிநாட்டு நிருபர்களுக்கு பேட்டி அளித்த போதே இவ்வாறு கூறியதாக, த ஹிந்து செய்தி வெளியிட்டுள்ளது. அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

வட மாகாணத்தில் இராணுவம் தமிழர்களிடம் கையகப்படுத்தி வைத்திருந்த வளமான பூமி தற்போது வளமற்ற களர் நிலமாக திருப்பி வழங்கப்பட்டுள்ளது.

அதை மீண்டும் வளமான பூமியாக மாற்றி தரப்படும் என்று அரசு அறிவித்தது. அதன்படி வழங்கவில்லை.

மேலும் வட மாகாணத்தில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்த ஹோட்டல்கள் மீண்டும் மாகாண அரசிடம் ஒப்படைக்கப்படும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்தார்.

ஆனால் ருவான் விஜேவர்தன கூறும் போது, அது குறித்து அரசு இன்னும் முடிவு எதுவும் மேற்கொள்ளவில்லை என முரண் பட்ட கருத்துக்களை தெரிவித்துள்ளார்.

மேலும் வட மாகாணத்தில் முகாமிட்டுள்ள இராணுவம் வெளியேற வேண்டும் என அனைவரும் தெரிவித்து வருகின்றனர்.

ஆனால் இதுவரை இராணுவ வீரர்கள் வெளியேற்றப்படவில்லை. அதை அரசு கண்டு கொள்ளவில்லை.

மொத்தத்தில் ஜனாதிபதி சிறிசேன அரசு தமிழர்களுக்கு எந்த ஒரு உதவியோ நன்மையோ செய்யவில்லை. இவற்றை நடைமுறைப் படுத்த சர்வதேச நாடுகள் இலங்கைக்கு நெருக்கடி தர வேண்டும் என்றார். (எ-11)

# கசிப்பு உற்பத்தி இடம் காரைநகரில் முற்றுகை

## ஒருவர் கைது; பலர் தப்பியோட்டம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து காரைநகர் ஐயனார் கோயிலடிப்பகுதியில் கசிப்பு உற்பத்தி செய்யும் இடமொன்று முற்றுகையிடப்பட்டு ஒருவர் கைது செய்யப்பட்டதுடன் கசிப்பு மற்றும் உற்பத்தி பொருட்கள் உள்ளிட்டவையும் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நீண்டநாட்களாக குறித்த பகுதியில் கசிப்பு உற்பத்தி இடம்பெறுகின்றது என வட்டுக்கோட்டை மற்றும் ஊர்காவற்றுறை பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்ட போதும் எதுவித நடவடிக்கையினையும் பொலிஸார் மேற்கொள்ள வில்லை என பொது மக்கள் குற்றம் சாட்டியிருந்தனர்.

இதனையடுத்து நேற்றைய தினம் யாழ்ப்பாண பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் குறித்தபகுதிக்கு சென்ற பொலிஸார்.

குறித்த பகுதியைச் சேர்ந்த ஒருவரைக் கைது செய்ததுடன் 250 லீற்றர் கசிப்பு பரல் 04 , 30 லீற்றர் கசிப்பு பரல் 2 மற்றும் கசிப்பு உற்பத்திசெய்வதற்கு தேவையான உபகரணங்களும் மீட்கப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர் ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளையும் ஊர்காவற்றுறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

நாளைய தினம் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதே வேளை இக்கசிப்பு நிலையம் யாழ்.பொலிஸாரால் முற்றுகையிடப்பட்ட போது சிலர் அங்கிருந்து தப்பி சென்றுள்ளதாகவும் அவர்களையும் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை தாம் மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-4)

# ஊடகவியலாளர் கைது சட்டவிரோதமானது! - நீதிவான்

(யாழ்பாணம்)

ஊடகவியலாளர் கைது செய்யப்பட்டமை சட்டவிரோதமானது என பருத்தித்துறை மாவட்ட நீதிவான் மா.கணேசராஜா தீர்ப்பளித்துள்ளார்.

சுயாதீன ஊடகவியலாளர் லோகதயாளன், பொலிஸார் ஒருவர் பாடசாலை மாணவியை துஷ்பிரயோகத்துக்குள்ளாக்கியதாக செய்தி வெளியிட்டமை தொடர்பாக கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டு பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

இதுதொடர்பான வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே நீதிவான் இவ்வாறு தீர்ப்பளித்துள்ளார்.

செய்தி ஒன்றுக்காக செய்தியாளரை கைது செய்யும் அதிகாரம் பொலிஸாருக்கு உண்டா என்பது தொடர்பில் கேள்வி எழுகிறது.

மேலும் ஊடகவியலாளர் கைது செய்யப்பட்டிருப்பதானது உள்நாட்டு மற்றும் சர்வதேச சட்டவரையறைகளை மீறுவதாக மன்று கருதுகிறது.

இவ்வாறான கைதுகள் சட்ட ஆட்சியை கேள்விக்குட்படுத்தும் என்ற காரணத்தினாலும் குறித்த எதிரிக்கு எதிராக குற்றச்சாட்டு எதுவும் சுமத்தப்படாத காரணத்தினாலும் பொலிஸாருக்கு மன்று போதிய காலஅவகாசம் வழங்கியும் எதிரிக்கு எதிராக போதுமான குற்றச்சாட்டுக்கள் மன்றில் சமர்ப் பிக்கப்படாத நிலை யிலும் மன்று எதி ரியை விடுதலை செய் கிறது.

எவ்வாறாயினும் ஜனநாயகத்தின் 4 ஆவது தூணாக கருதப்படும் பத்திரிகை ஒன்று செய்தியைப் பிரசுரிக்கும்போது தீர ஆராய்ந்துசெய்தியை பிரசுரிக்க வேண்டுமென மன்று கருதுகிறதுஎன்றும்நீதிவான் தீர்ப்பளித்துள்ளார்.

இதேவேளை செய்தியாளர் சட்டத்தரணி மூலமாக பகிரங்க மன்னிப்புக் கோரி வழக்கு ஏட்டில் கையொப்பமிட்டிருந்தார். (எ-3,60)


## காணி விற்பனைக்கு

மட்டுவில் தெற்கு, பருத்தித்துறை வீதியில் துர்க்கை அம்மன் கோவில் பாதை ஆரம்பத்தில் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு : 077 8730 129

## பதவி வெற்றிடம்

கிளிநொச்சி ஆனந்தபுரத்தில் உள்ள வலம்புரியின் உப அலுவலகத்தில் பணியாற்றுவதற்காக பின்வரும் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு இடம்பெறவுள்ளது.

- அலுவலக உத்தியோகத்தர் (ஆண்)
- கணனி இயக்குநர் (ஆண்)
- அலுவலகப் பணியாளர் (ஆண்)

**தகைமை**

- கல்வித் தகைமை: க.பொ.த உயர்தரத்தில் சித்தி
- வயது: 25-35
- உப அலுவலகம் அமைந்துள்ள இடத்திற்கு அண்மையாக இருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

பொருத்தமானவர்கள் தங்கள் சுயவிபரம் அடங்கிய விண்ணப்பத்தை

**பிரதம ஆசிரியர்,**
**வலம்புரி**
**இல.03, 2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.**

-பொது முகாமையாளர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகுக்கலை பயிற்சி

யாழ் பியூட்டி அக்கடமி மற்றும் ஒரிபிளேம் யாழ்.சேவை நிலையம் இணைந்து மிக குறைந்த கட்டணத்தில்...

- Certificate in Basic Beauty Course (ஒரு மாத கால அழகுக்கலை)
- Dip in Beauty Culture & Hair Dressing (மூன்று மாத கால டிப்ளோமா அழகுக்கலை)
- Cake Decoration Classes (கேக் ஐசிங்)

அனைத்து பயிற்சிகளும் கூடுதலான செய்முறை விழக்கத்துடன் இடம் பெற்று மேற்படி பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

கிழமை நாள் புதிய பிரிவுகள் 05.06.2015 அன்று 10.00 மணிக்கு
சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் 07.06.2015 அன்று 10.00 மணிக்கு

YARL BEAUTY ACADEMY

மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும் அலுவலக நேரத்தில் வருகைதரவும்...

ORIFLAME SWEDEN (யாழ்.சேவை நிலையம்)

இல.616 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(வேம்படி சந்தியில் மஞ்சள் கடவையின் முன்)


## வாழும் கலைப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

பூஜ்ய ஸ்ரீஸ்ரீரவிசங்கர் குருஜியினால் வடிவமைக்கப்பட்ட யோகாசனம், பிரணாயாமம், சக்திவாய்ந்த சுதர்சனக்கிரியா அடங்கிய வாழும் கலைப்பயிற்சி பாகம் I நாளை திங்கட்கிழமை முதல் எதிர்வரும் 7 ஆம் திகதி வரை பி.ப.5 மணிமுதல் இரவு 7 மணிவரை நடைபெறவுள்ளது.

நல்லூர் சட்டநாதர் ஆலய தெற்கு வீதியில் அமைந்துள்ள திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் பெங்களூர் ஆச்சிரம ஆசிரியர் டிசாயி ராம்ஜி பயிற்சிகளை வழங்குவார். (3)


## பணிப் பெண் தேவை

ஐந்து பேர் கொண்ட குடும்பத்திற்கு சமையல் செய்வதற்கு பெண் தேவை.

முகவரி: கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
T.P. 077 3611282
(1123)

## தேவை

கொழும்பை அண்மித்த பிரதேசங்களில் ஜேம்/ டொபி/ பிஸ்கட்/ கோடியல்/ பால்மா/Pvc/ சொக்லெட்/ காமென்ட்.... போன்ற பல தொழிற்சாலைகளில் உற்பத்தி/ லேபல்/ பொதியிடல் பிரிவுகளுக்கு 17-50 வயது ஆண், பெண் தேவை. சம்பளம் 18000/= , 38000/= உணவு தங்குமிடம் குறைந்த விலைகளில் நண்பர்கள் குழுக்கள் தம்பதியினர் ஒரே தொழிற்சாலையில் வருகை அன்றே வேலை.

(சி- 1116) 077 817 6234

கரைச்சி தெற்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ-து) கிளிநொச்சி.

## பகிரங்க ஏல விற்பனை

பாரவூர்திகளும், மூன்று சில்லு மோட்டார் சைக்கிளும்

கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமான 47-7905,68-7206, 42-9325 இலக்க பழைய பாரவூர்திகளும் QY-2732 இலக்க நல்ல நிலையிலுள்ள மூன்று சில்லு பெட்டி மோட்டார் சைக்கிளும் 06.06.2015 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப.10மணிக்கு சங்க தலைமைக் காரியாலயத்தில் வைத்து பகிரங்க ஏல விற்பனை செய்யப்படும்.

மேற்படி வாகனங்களை வேலை நாட்களில் காலை 8.30மணி தொடக்கம் மாலை 5மணிவரை சங்க தலைமைக்காரியாலயத்தில் பார்வையிடலாம்.

| வாகனம் | வாகனம் இலக்கம் | வாகன வகை | ஆரம்பவிலை |
|---|---|---|---|
| பாரவூர்தி | 47-7905 | ASHOK LEYLAND | 300,000.00 |
| பாரவூர்தி | 68-7206 | ASHOK LEYLAND | 300,000.00 |
| பாரவூர்தி | 42-9325 | ASHOK LEYLAND | 300,000.00 |
| மூன்று சில்லு மோட்டார்சைக்கிள் | QY-2732- | STREAM (150CC பெட்டிச்சைக்கிள்) | 230,000.00 |

வாகனத்திற்கான கேள்வி கோரலில் பங்கு பற்றுவோர் மீளளிக்கப்படாத தொகையாக ரூபா500.00 தொகையும், கேள்விவைப்புப்பணமாக ரூபா 3,000.00 (மீளளிக்கப்படக்கூடியது) தொகையினை செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்று கேள்விக்கு சமுகமளிக்கவும்.

குறிப்பு:- தெரிவு செய்யப்படும் கேள்வியாளர் மூன்று வேலை நாட்களுக்குள் முழுமையாக பணத்தினை செலுத்தி வாகனத்தினை வெளியேற்றல் வேண்டும்.


தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இல:-021 228 5752

பொது முகாமையாளர்
கரைச்சி தெற்கு
ப.நோ.கூ.சங்கம்,
கிளிநொச்சி.

டிப்போ வீதி, கனகபுரம்,
கிளிநொச்சி.

(சி- 1107)


# 3ம் ஆண்டு நினைவஞ்சலி




## அமரர் விவேகானந்தன் கமலரேகா

திதி:- திரயோதசி (31.05.2015)

ஆண்டு மூன்று ஆனதுவோ
ஆனாலும் ஆறவில்லை எம்துயரம்
மாறாத நினைவுகளால்
மனம் வெந்து மாய்க்கின்றோம்
யாருக்கும் கிடைத்திடாத அம்மா- நீ
இவ்வுலகில் நாம் அறிந்திடாத அம்மா- நீ
எமக்கு கிடைத்த கடவுள் தந்த வரமே...
அந்த அன்பு இன்றி நாம் எப்படி வாழ்வோம் அம்மா
அம்மா நீங்கள் மறைந்ததை உணர்கின்றோம்
நீங்கள் பிரிந்ததாய் உணரவில்லை
ஏழேழு ஜென்மமும் - உங்கள்
பாசமும் எங்கள் நேசமும் தொடரும் தாயே...
அம்மா உங்கள் ஆத்ம சாந்திக்காய்
இறைவனை வேண்டுகின்றோம்

அருந்தியார் வளவு
அல்வாய் மேற்கு,
திக்கம்.

என்றும் உங்கள்
நினைவுகளோடு
பிள்ளைகள்

# இராசி பலன்

31.05.2015
(வைகாசி 17, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.54 மணிக்கு
திரயோதசி முன்னிரவு 9.35 மணிவரை
சுவாதி மாலை 6.14 மணிவரை
இராகுகாலம் 4.42-5.52 மணிவரை
சுபநேரம் 8.52-10.22 மணிவரை
பிரதோச விரதம்

வளவன்

**மேடம்:** குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறலாம், கடன் பிரச்சி னையை சாமர்த்தியமாகப் பேசி சமாளிப்பீர்கள், வாழ்க்கைத் துணை வழியே மகிழ்ச்சிக்குரிய செய்திகள்வந்து சேரலாம்.

**இடபம்:** தொழில் சம்பந்தமாக முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், சுவாரஸ்யமான நாள், உள்ளம் மகிழும் விதத்தில் உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும்.

**மிதுனம்:** அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், உறவினர் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், பிள்ளைகள் வழியில் சுப செலவுகள் செய்து மகிழ் வீர்கள்.

**கடகம்:** மதிப்பும் மரியாதையும் உயர் வடையும் நாள், குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, மனதில் இனம் புரியாத சந்தோசம் குடிகொள்ளும்.

**சிம்மம்:** சிந்தித்துச் செயற்படவேண்டிய நாள், அரசியல் செல்வாக்கு மேலோங்கும், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், பயணங்களால் பலனுண்டு.

**கன்னி:** திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வாக்கு மேன்மையுண்டு, தொழில் வளர்ச்சி கருதி புதிய திட்டங்கள் வகுப்பீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**துலாம்:** உடல் நலனில் அதிக அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, சுப செலவுகள் அதிகரிக்கும் நாள், பயணத்தால் பலன் கிடைக்கும்.

**விருச்சிகம்:** தொழில் ரீதியாக எடுத்த முயற்சிகள் வெற்றி தரும், எடுத்த காரியத்தை முடிப்பதில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும். மனச்சஞ்சலங்கள் கூடும் நாள்.

**தனுசு:** தித்திக்கும் செய்திகள் வந்து சேர லாம், பயணங்கள் கைகூடுவ தற்கான வாய்ப்புண்டு, விலை யுயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், போசன சுகமுண்டு.

**மகரம்:** தொட்ட காரியங்கள் வெற்றி பெறும், நண்பர்கள் சந்திப்பால் மகிழ்ச்சி கூடும், எதிர்பாராத நேரத் தில் பெரிய மனிதர்களின் உதவி கிடைக்கும் வாய்ப்புண்டு ஆரோக்கியமான நாள்.

**கும்பம்:** நேற்றைய பணி ஒன்று இன்றும் தொடரலாம். தொலைபேசி வழித் தகவல் மனக்குழப்பத்தை அகற் றும் புதிய திட்டங்கள் எளிதில் கை கூடும். வழிபாட்டால் சிறப் படைய வேண்டிய நாள்.

**மீனம்:** வரவும் செலவும் சமமாகும். குடும்பத்தில் சிறு வாக்குவா தம் ஏற்படலாம் பிறருடைய வேலைகளை நீங்கள் எடுத்துச் செய்யும் சூழ்நிலை உருவா கும். பிரயாண பயம் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. தூங்குகிறது

## அமைச்சர் றிசாத் குற்றச்சாட்டு

(கொழும்பு)

மியன்மாரில் நடைபெறும் அரக்கர்களின் கொடூர தாக்கதல்களினால் அப்பாவி முஸ்லிம்கள் கொல்லப்படுவதைப் பார்த்துக் கொண்டு ஐ.நா. சபை தூங்குகிறது என அமைச்சர் றிசாத் பதியுதீன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அப்பாவி முஸ்லிம்கள் மீது மியன்மாரில் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள காடைத்தனங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து, நேற்று முன்தினம் ஜும்ஆ தொழுகையின் பின்னர் கொழும்பில் இடம்பெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட அமைச்சர் றிசாத், ஊடகவியலாளர் மத்தியில் உரையாற்றும்போதே மேற்படி குற்றச்சாட்டினை தெரிவித்தார்.

"மியன்மாரிலுள்ள அப்பாவி முஸ்லிம்கள் மீது அந்நாட்டு இராணுவ ஆட்சியாளர்களும் அரக்கர்களும் கொடூரமான முறையில் தாக்குதல்களை மேற்கொண்டு அவர்களை கொன்று குவித்து வருகிறது. இதனைப் பார்த்துக் கொண்டு ஐ.நா. சபை தூங்கிக் கொண்டிருக்கிறது.

இந்தக் கொலையினை கண்டித்து துருக்கி அரசாங்கம் மட்டுமே குரல்கொடுத்து வருகிறது. அதற்காக இலங்கை மக்கள் சார்பில் அந்நாட்டு ஜனாதிபதிக்கும் அரசாங்கத்துக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஏனைய நாடுகள் அனைத்தும் வாய்மூடி மௌனிகளாக இருக்கின்றன.

ஆகையினால், இந்தக் கொடூரத்துக்கு எதிராக உலக முஸ்லிம் நாடுகள் அனைத்தும் ஒன்று திரள வேண்டும் என இலங்கை வாழ் முஸ்லிம்கள் சார்பில் வேண்டுகோள் விடுக்கின்றோம். அதே போல் இலங்கையிலுள்ள மியன்மார் தூதரகத்துக்கும் எமது எதிர்ப்பினை தெரிவித்து மகஜர் கையளித்திருக்கிறோம்.

எனவே, இந்த அடாவடித்தனம், படுகொலைகள் உடனடியாக நிறுத்தப்படாவிட்டால் இலங்கையிலுள்ள முஸ்லிம்கள் மட்டும ல்ல, பௌத்த, இந்து, கிறிஸ்தவ மக்கள் அனைவரும் ஒன்றிணை ந்து நாடளாவிய ரீதியில் போராட்டங்களை முன்னெடுப்போம் என்பதை எச்சரிக்கையாக அவர்களுக்கு சொல்லிவைக்க விரும்புகின்றோம்" என அமைச்சர் றிசாத் பதியுதீன் மேலும் தெரிவித்தார். (இ-5)

# மீண்டும் பயங்கரவாதம் தலைதூக்கும் அபாயம்

## பீதியடைந்துள்ள மகிந்த

(கொழும்பு)

**தமிழீழ விடுதலை புலிகள் மீண்டும் தலை தூக்கும் அபாயம் காணப்படுவதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

விடுதலைப் புலிகளை கடந்த 2009 ஆம் ஆண்டு யுத்தத்தின் போது தோற்கடித்த போதிலும், அவர்கள் மீண்டும் நாட்டில் செயற்படுவதற்கான தூண்டுதல்கள் வழங்கப்பட்டு வருவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

எனினும் அவ்வாறான ஒரு சூழ்நிலை மீண்டும் வரக் கூடாது என தாம் வேண்டிக் கொள்வதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, பல்வேறு அழுத்தங்களுக்கு மத்தியிலேயே நேற்று முன்தினம் புதிதாக அமைச்சர்கள் பதவியேற்று கொண்டார்கள் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கருத்து வெளியிட்டுள்ளார். (இ-5)

### நீதி கிடைக்கக்கோரி மௌன நிகழ்வு

புங்குடுதீவு மாணவி கூட்டு வன்புணர்வின்பின்னர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்திற்கு நீதிக்கிடைக்கக் கோரி கிளிநொச்சிபெண்கள் செயற்பாட்டு அமைப்பின் ஏற்பாட்டில் நாளை திங்கட்கிழமை காலை 9மணி தொடக்கம் 10மணி வரை வாயினை கறுப்பு துணியினால் கட்டி மௌனமாக கிளிநொச்சி புதிய மாவட்ட செயலகம் முன்பாக ஒன்று கூடி தமது கண்டனத்தை வெளிப்படுத்தவுள்ளனர்.

எனவே கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (2-277)

### வைகாசி விசாகத் திருவிழா

யாழ்ப்பாணம் சுட்டிபிராய் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் வைகாசி விசாகத் திருவிழா நாளை முதலாம் திகதி திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு அபிஷேக ஆராதனைகளைத் தொடர்ந்து திருவூஞ்சல் இடம்பெற்று அம்பாள் வீதியுலாவரும் காட்சி இடம்பெறவுள்ளது.அன்றுகாலைபொங்கல் நிகழ்வு இடம்பெறும். (இ-136)




# சிறைக்கு அனுப்பிய நல்லாட்சிக்கு நன்றி

## ஜோன்ஸ்டன் தெரிவிப்பு

தனது 25 வருட அரசியல் வாழ்க்கையில் சிறைச்சாலை அனுபவத்தை வழங்கியமை தொடர்பில் நல்லாட்சிக்கு எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன் என முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

பிணை மூலம் விடுதலையாகிய பின்னர் ஊடகவியலாளர்களை சந்தித்து கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

செய்யாத தவறுக்கு என்னை விளக்கமறியலுக்கு அனுப்பினார்கள். நாட்டின் இன்றைய நிலைமையை பார்க்கும் போது மிகவும் மன வேதனையடைகிறேன்.

வன சட்டத்தை அமுலாக்குவதாக மகிந்த ராஜபக்ஷ ஆட்சியில் தெரிவிக்கப்பட்டது. ஆனால் அக்காலத்தில் வன சட்டம் அமுலாக்கப்படவில்லை. அக்காலத்தில் மகிந்த சிறந்த முறையில் சட்டங்களை நடைமுறைப்படுத்தினார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆட்சியில் 10, 11 மணி வரை நீதிமன்றத்தை திறந்து வைத்து எதிரிகளை சிறைச்சாலைக்கு அனுப்பவில்லை. ஆனால் இன்று நாட்டில் வன சட்டமே அமுலாக்கப்படுகின்றது. இன்று முழுமையாக சட்டமற்றவர்கள் அரசராகியுள்ளனர்.

எனது 25 வருட அரசியல் வாழ்க்கையினுள் முதல் தடவையாக நான் சிறையில் வைக்கப்பட்டேன். எனினும் இதன்மூலம் வாழ்க்கையில் பல்வேறு அனுபவங்களை நான் பெற்றேன். சிறைச்சாலை வாழ்க்கையில் நல்ல ஒரு புரிந்துணர்வை பெற்றுக்கொண்டேன்.

இது தொடர்பான அனைத்து விசாரணைகளுக்கும் முகம் கொடுக்க நான் தயாராகவே உள்ளேன். எனது பெயர் கூட இல்லாத ஒரு சம்பவத்திற்கு என்னை விளக்கமறியல் படுத்தியமை குறித்து நான் வருத்தமடைகிறேன்.

நான் விளக்கமறியல் சென்ற நாள் முதல் இன்று வரை என்னை வெளியே கொண்டு வருவதற்கு கஷ்டப்பட்ட அனைத்து சட்டத்தரணிகளுக்கும் எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# முஸ்லிம்களின் படுகொலையை பார்த்து கொண்டிருக்க முடியாது

## அமைச்சர் இராதாகிருஷ்ணன் சீற்றம்

(கொழும்பு)

மியன்மார் நாட்டில் முஸ்லிம்கள் படுகொலை செய்யப்படுவதை உடனடியாக நிறுத்துவதற்கு அந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கான அழுத்தத்தை இலங்கை அரசாங்கம் மியன்மார் அரசாங்கத்திற்கு கொடுக்க வேண்டும். இன ரீதியாக முஸ்லிம்கள் படுகொலை செய்யப்படுவதை பார்த்துக் கொண்டிருக்க முடியாது என கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

மியன்மார் நாட்டில் முஸ்லிம்கள் காட்டுமிராண்டித்தனமாக கொலை செய்யப்படுவதை மலையக மக்கள் முன்னணி சிறுபான்மை மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் கட்சி என்ற வகையில் அதனை வன்மையாக கண்டிக்கின்றது. எந்த ஒரு [illegible] இன்னொரு இனத்தால் அழிக்கப்படுவதை அனுமதிக்க முடியாது.

அந்த வலியையும் வேதனையையும் இலங்கையின் அனைத்து மக்களும் நன்கு அறிவார்கள். அதிலும் குறிப்பாக இலங்கையின் சிறுபான்மை மக்கள் அதன் வேதனையை கடந்த 30 வருடங்களுக்கு மேலாக உணர்ந்தவர்கள். அந்த வகையில் அதன் வலியும் வேதனையும்எமக்கு நன்கு தெரியும்.

இந்த விடயம் தொடர்பாக உலகம் முழுவதும் இருக்கின்ற அனைத்து மக்களும் மனிதாபிமான ரீதியாக இணைந்து குரல் கொடுக்க முன் வரவேண்டும்.

இந்த விடயத்தில் இலங்கையில் இருக்கின்ற முஸ்லிம்கள் தார்மீக ரீதியாக எடுக்கும் அத்தனை செயற்பாடுகளுக்கும் எனது முழுமையான ஒத்துழைப்பை வழங்க நான் தயாராக இருக்கின்றேன்.

இதற்கான அமைதிப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்து உலக நாடுகளுக்கு இந்த செய்தியை கொண்டு செல்ல அனைத்து வழிகளிலும் முஸ்லிம்களுடன் இணைந்து செயற்பட தயாராக இருக்கின்றேன்.எனவே இந்த விடயம் தொடர்பாக எமது இலங்கை அரசாங்கம் உடனடியாக மியன்மார் நாட்டுடன் தொடர்பு கொண்டு முஸ்லிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும்.

இன்று இலங்கையில் இருக்கின்ற முஸ்லிம் அமைச்சர்கள் எடுக்கின்ற அத்தனை நடவடிக்கைகளுக்கும் எனது பூரண ஆதரவை வழங்க நான் தயாராக உள்ளேன் எனவும் அவர் அந்த செய்தியில் தெரிவித்துள்ளார். (இ-5)

# வாசுதேவவின் வார்த்தைப் பிரயோகம் வன்மையாகக் கண்டிக்கத்தக்கதே

## மனித உரிமை செயற்பாட்டாளர் தெரிவிப்பு

மனித உரிமைகள்செயற்பாட்டாளரான நிமல்கா பெர்னாண்டோ தமது சக மனித உரிமைகள் செயற்பாட்டு பங்காளரான நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார மீது குற்றம் சுமத்தியுள்ளார்

அண்மையில் நாடாளுமன்றத்தில் வைத்து வாசுதேவ நாணயக்கார, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை "பக்கயா" என்ற கெட்டவார்த்தையால் ஏசினார்.

இதனையடுத்து கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது இதற்காக தாம் ரணிலிடம் மன்னிப்புக்கோரப்போவதில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இந் நிலையில் மனித உரிமைகள் செயற்பாட்டாளரான வாசுதேவவின் கருத்து கண்டிக்கதக்கது என்று நிமல்கா தெரிவித்தார்.

வாசுதேவ இந்த வார்த்தையை பயன்படுத்தியபோது நாடாளுமன் றத்தில் மாணவர்கள் அமர்ந்திருந் தனர்.

எனவே அவர்களிடம் வாசுதேவ மன்னிப்புக் கோரவேண்டும்.

ஒரு சிறந்த மூத்த அரசியல்வாதியான வாசுதேவவின் இந்த நடவடிக்கை கண்டிக்கத்தக்கது என்றும் நிமல்கா தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியை மாற்றுவதற்கு இவ்வாறான செயற் பாடுகளும் காரணமாக இருந்[illegible] நிமல்கா சுட்டிக்காட்டியுள்ளார். (இ-5)

### மணவாளக்கோல திருவிழா

நீர்வேலி அருள்மிகு ஸ்ரீ அரசகேசரிப்பிள்ளையார் கோவில் மணவாளக் கோலத்திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு சங்காபிஷேகம் ஆரம்பமாகி இடம்பெறும். இரவு 7 மணிக்கு விசேட பூஜை ஆராதனைகள் இடம்பெற்று எம்பெருமான் அழகிய பூந்தண்டிகையில் வலம்வரும் நிகழ்வு இடம்பெறவுள்ளதாக பரிபாலனசபையினர் அறிவித்துள்ளனர். (இ-136)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிந்தவின் பெயர் இனிமேல் உச்சரிக்கப்படாது!

# ஜனநாயகத்தை சீரழிக்க இடமளிக்கவேமாட்டோம்

## பிரதமர் ரணில் உறுதி



(கொழும்பு)

**இலங்கையின் எதிர்கால அரசியலில் மகிந்த ராஜபக்ஷ என்ற பெயர் இனி ஒருபோதும் உச்சரிக்கப்படாது. இந்த நாட்டில் ஜனநாயகம் என்ற வார்த்தை மட்டுமே உச்சரிக்கப்படும். அதையும் மீறி யாரேனும் ஜனநாயகத்தை சீரழிக்க முயற்சித்தால் அதற்கு ஒருபோதும் நாம் இடமளிக்கமாட்டோம் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

ஜனநாயகத்தை வென்றெடுக்கும் போராட்டத்தை மாதுலுவாவே சோபித தேரர் ஆரம்பித்திருக்காவிடின் இன்று நாட்டில் மாற்றம் ஒன்று ஏற்பட்டிருக்காது. நாட்டில் ஜனநாயகத்தை தொடர்ந்தும் தக்கவைக்க வேண்டுமாயின் மாதுலுவாவே சோபித தேரரின் ஒத்துழைப்பு அவசியம் எனவும் அவர் தெரிவித்தார்.

மாதுலுவாவே சோபித தேரரின் ஜனன தினத்தை முன்னிட்டு சமூக நீதிக்கான மக்கள் இயக்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் கலந்துகொண்டிருந்த போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாதுலுவாவே சோபித தேரரின் ஜனநாயகப் போராட்டம் இன்னொரு யுத்தத்துக்கு சமமானதாகும். நாட்டின் விடுதலையை வென்றெடுக்க அன்று ஆயுதம் மூலம் போராடியதைப் போல இன்று நாட்டின் ஜனநாயகத்தை கட்டியெழுப்ப வார்தைகள் மூலமாகவும் அஹிம்சாவளியின் மூலமாகவும் போராடி எமக்கு ஜனநாயகத்தை வென்று கொடுத்துள்ளார்.

சமூக நீதிக்கான மக்கள் இயக்கத்தினூடாக கடந்த சில ஆண்டுகளாக சோபித தேரர் மக்களுக்காக போராடியிருந்தார். இந்த போராட்டமே இன்று நாட்டில் மூவின மக்களையும் ஒன்றுபடுத்தியுள்ளது.

நாட்டில் விவாதம் செய்வதற்கும், கட்சிகளை விமர்சிக்கவும், மூவின மக்களும் தமது உரிமைகளை வென்றெடுக்கவும் இந்த போராட்டம் சாதகமாக அமைந்துவிட்டது. நாம் அனைவரும் கட்சி சார்பில் பிரிந்திருந்தாலும் ஜனநாயகத்தை வென்றெடுக்கும் போராட்டத்தில் ஒன்றிணைய மாதுலுவாவே சோபித தேரரே காரணமாகும்.

அதேபோல் எமது தேசிய அரசாங்கத்துக்கான போராட்டத்தில் மைத்திரிபால சிறிசேன எனும் நல்ல மனிதர் எமக்கு கிடைத்துள்ளார். இதுவரை எந்தத் தலைவரும் செய்ய விரும்பாத தியாகத்தை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செய்துள்ளார். அவரின் மூலமாகவே எமக்கு இன்று நல்லாட்சி மலர்ந்துள்ளது.

அதேபோல் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உள்ளிட்ட முக்கியமான சிலரின் உதவியும் நாட்டுக்காக அவர்கள் செய்த தியாகமும் மிக முக்கியமானதாகும். எனினும் நாட்டில் ஜனநாயகத்தை உருவாக்க மாதுலுவாவே சோபித தேரர் போராட்டத்தை ஆரம்பித்திருக்காதிருந்தால் இன்று நாம் இந்த விடுதலைக் காற்றை சுவாசித்திருக்க முடியாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)




# வைகாசி விசாக பொங்கல் விழா

நீர்வேலி வாய்க்கால் தெரு பிள்ளையார் கோவிலுக்கு முன்பாக அமைந்துள்ள காளியம்மன் கோயிலில் பல அற்புதங்கள், அதிசயங்கள் நடந்து வருகின்றன வைகாசி விசாகத்திற்கு சிறப்பு பொங்கல் பூசைகள் 01.06.2015 திங்கட்கிழமை அன்று நடைபெறும். பக்தர்கள் அனைவரையும் இதில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

வருக! அம்மன் அருள் பெறுக!

ஆலய நிர்வாகம்

(616)



# மக்கள் வங்கி

கொடிகாமம் கிளை

வாடிக்கையாளர்களுக்கு மேலும் சிறந்த சேவையை வழங்கும் நோக்குடன் நவீன வசதிகள் நிறைந்த மக்கள் வங்கியின் சாவகச்சேரி கிளையுடன் இணைந்த கொடிகாமம் கிளை

மக்கள் வங்கியின் பிரதான நிறைவேற்று அதிகாரி/ பொது முகாமையாளர்

**திரு.என்.வசந்தகுமார் அவர்களின்**

அழைப்பின் பேரில் மக்கள் வங்கியின் தலைவர்

**திரு.ஹேமசிறி பெர்னாண்டோ அவர்களினால்**

2015 ஜுன் மாதம் 1 ஆம் திகதி

மு.ப.11.30 மணிக்கு

அமையும் சுபவேளையில் திறந்து வைக்கப்படவுள்ளது என்பதனை விசேடமாக இப்பிரதேச மக்களுக்கு மகிழ்வுடன் அறியத் தருவதோடு, இந்நிகழ்வில் கலந்துகொள்ளுமாறும் உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள் மனமறிந்த வங்கி

மக்கள் வங்கி

இங்ஙனம்:
பிராந்திய முகாமையாளர்
பிராந்திய தலைமைக் காரியாலயம்,
யாழ்ப்பாணம்.

(சி-1115)



கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>கி.பா: 11<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: O/L/ சொந்த தொழில்<br>தொ.இ: B/4585 | பிறப்பு: 1973 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 37 3/4<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: ஆசிரியர்<br>தொ.இ: G/1289 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 17<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: QS/ அரச தொழில்<br>தொ.இ: B/4586 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 24 1/4 செவ் 12 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ: G/1291 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 08<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: BSC/ தனியார் தொழில்<br>தொ.இ: B/4587 | பிறப்பு: 1977 RC<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 50<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்<br>தொ.இ: G/1292 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை<br>கி.பா: 55 செவ் 1 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BA/ ஆசிரியர்<br>தொ.இ: B/4589 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம் அனுசம்<br>கி.பா: 64 செவ் 7 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: ஆசிரியர்<br>தொ.இ: G/1293 |

# கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுத்தல் அளவீட்டு உபகரணங்களை மட்டுமே பயன்படுத்த வேண்டும்

## யாழ்.வணிகர் கழகம் அறிவுறுத்து

ஒவ்வொரு வர்த்தகர்களும் தங்கள் வர்த்தக நிலையங்களில் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுத்தல் அளவீட்டு உபகரணங்களை மட்டுமே பயன்படுத்த வேண்டும் என யாழ்.வணிகர் கழகம் அறிவுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக வணிகர் கழகம் விடுத்துள்ள அறிக்கையில்,

ஒவ்வொரு வர்த்தகரும் தங்களால் பயன்படுத்தப்படும் ஒவ்வொரு நிறுத்தல் அளவீட்டு உபகரணங்களையும் ஒவ்வொரு பன்னிரண்டு மாதங்களுக்கு ஒருமுறை அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தினால் முத்திரையிடப்பட்டதையே பயன்படுத்த வேண்டும்.

ஒவ்வொரு வாரத்திலும் புதன்கிழமைகளில் அளவீட்டு அலகுகள் நியமங்களுக்கான மற்றும் சேவைகள் திணைக்களத்தில் நிறுத்தல் அளவீட்டு உபகரணங்களுக்கு முத்திரையிடலாம்.

ஒவ்வொரு வர்த்தக ஸ்தாபனத்திலும் பாவனையாளர்கள் தாங்கள் கொள்வனவுசெய்யும்நுகர்வுப்பொருட்களின் நிறுத்தல் அளவையை சரிபார்க்க கூடிய வகையில் பாவனையாளர்கள் பாவனைக்காக முத்திரையிடப்பட்டதும் அங்கீகரிக்கப்பட்டதுமான நிறுத்தல் அளவைகள் உபகரணத்தை தெளிவாக தெரியக் கூடிய வகையில் பொருத்தி வைத்திருத்தல் வேண்டும்.

அனைத்து பொதியிடப்பட்ட பொருட்களின் மேலுறைகளிலும் உற்பத்தியாளரின் பெயர், நிறை, அளவு, உற்பத்தி திகதி மற்றும் காலாவதியாகும் திகதி என்பன காணப்படல் வேண்டும்.

தேவைக்கதிகமாக பொருட்களை கொள்வனவு செய்து நீண்டகாலம் வர்த்தக ஸ்தாபனங்களில் தேக்கிவைத்திருத்தலை வர்த்தகர்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும். ஒரு வாரம் அல்லது ஒரு மாதத்திற்கு தேவையான பொருட்களை களஞ்சியப்படுத்தி வைத்திருத்தல் பிரச்சினைகளை தவிர்க்க உதவும். காலாவதியான பொருட்களை உற்பத்தியாளர்களோ வழங்குநர்களோ மீண்டும் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் சம்பந்தப்பட்டவர்களுடன் இறுக்கமான தொடர்புகளை மேற்கொள்ள வேண்டும். அங்கீகாரம் இல்லாத நிறுவனங்களிலிருந்து பொருட்கள் கொள்வனவு செய்தல் தவிர்க்கப்படல் வேண்டும்.

சிகரெட், மதுபானம் போன்றவற்றை இருபத்தொரு வயதுக்குட்பட்டவர்களுக்கு விற்பதை முற்றாக நிறுத்த வேண்டும். மேலும் பொது இடங்களில் சிகரெட் புகைத்தல் மற்றும் மது பாவிப்பது என்பன தடை செய்யப்பட்டுள்ளமையை வர்த்தகர்கள் உறுதி செய்து கொள்ளவேண்டும்.

அரசாங்கத்தினால் வர்த்தமானியில் அறிவித்த கட்டுப்பாட்டு விலைகளுக்கு மேலதிகமாக பொருட்களினை விற்பனை செய்வதை வர்த்தகர்கள் நிறுத்தல் வேண்டும். கட்டுப்பாட்டு விலைகள் தொடர்பில் ஏதேனும் சந்தேகங்கள் இருப்பின் யாழ். வணிகர் கழகத்துடன் தொடர்பு கொண்டு விபரங்களை பெற லாம்.


பொதியிடப்பட்ட பொருட்களின் லேபிள்களில் ஒருபோதும் எந்தவொரு மாற்றங்களையும் ஏற்படுத்தக் கூடாது.

உற்பத்தியாளரால் உறுதிப்படுத்திய பொருட்களின் உத்தரவாதத்தை வர்த்தகர்கள் பாவனையாளருக்கு உறுதிசெய்யவேண்டும்.

அரசாங்க வர்த்தமானி அறிவித்தல்களையும் அனுசரித்து தங்கள் கவனத்திற்கு யாழ்.வணிகர் கழகத்தால் மேற்படி நடைமுறைகள் சமர்ப்பிக்கப்படுகிறது என யாழ். வணிகர் கழகம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. (இ-3)




## கொக்குவில் பொதுநூலகத்தின் சிறுவர் பத்திரிகை வெளியீடு



நல்லூர் பிரதேச சபையின் கொக்குவில் பொது நூலகத்தினரால் மொட்டுக்களின் மொழிகள் என்ற பெயரில் சிறுவர் பத்திரிகை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

இதன் வெளியீட்டு விழா நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் ப.வசந்தகுமார் தலைமையில் கடந்த வியாழக்கிழமை பிரதேச கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.இந்திய உதவித் தூதுவராலயத்தின் நிர்வாக உத்தியோகத்தர் ஆர்.செல்வமும் சிறப்பு விருந்தினர்களாக நல்லூர் பிரதேச சபையின் செயலாளர் திருமதி தி.அன்னலிங்கம், மக்கள் வங்கி பல்கலைக்கழகக் கிளை முகாமையாளர் ஆ.சத்தியமூர்த்தி, தேசிய சேமிப்பு வங்கியின் திருநெல்வேலிக்கிளை முகாமையாளர் சித்திரா தயானந்தன், பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவர் ரவீந்திரதாசன், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் த.மலர்மகள், இந்திய உதவித் தூதுவராலயக் கலாசார உத்தியோகத்தர் பிரபாகரன், யாழ். பல்கலைக்கழக உதவி நூலகர் திருமதி சந்திரசேகரம், முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் க.விமலநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் சஞ்சிகைக்கான வெளியீட்டுரையை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை பிரதி அதிபர் ச.லலீசன் ஆற்றினார். மதிப்பீட்டுரையை யாழ். பல்கலைக்கழக கல்வியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணி வழங்கினார்.

நிகழ்வில் வரவேற்புரையை நல்லூர் பிரதேச சபையின் அபிவிருத்தி உதவியாளர் அ.கமலேஸ்வர சர்மாவும் நன்றியுரையை கொக்குவில் பொது நூலகத்தின் நூலகர் கி.அனிதாவும் நிகழ்த்தினர். (இ-3)

## பெண்களுடன் தகாதமுறையில் நடக்கமுற்படும் இளைஞர்களைக் கைது செய்யுமாறு உத்தரவு

நெல்லியடிப் பகுதியில் மாணவிகள் மற்றும் பெண்களுடன் தகாதமுறையில் நடக்கமுற்படும் இளைஞர்களை உடனடியாக கைது செய்யுமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிபதி மா.கணேசராஜா உத்தரவிட்டுள்ளார்.

புங்குடுதீவு மாணவி கொலையைத் தொடர்ந்து மேலும் அசம்பாவிதங்கள் பெண்பிள்ளைகள் தொடர்பில் நடைபெறாது இருக்கவேண்டுமென்ற நோக்கில் பருத்தித்துறை நீதிமன்ற நியாயாதிக்கத்திற்கு உட்பட்ட பிரதேசங்களில் மாணவிகள் மற்றும் பெண்களுடன் நெல்லியடிப் பகுதியில் கல்வி நிலையங்கள், மகாத்மா தியேட்டர், Phone Shopping Centre (கையடக்க தொலைபேசி விற்பனை நிலையங்கள்) ஆகியவற்றுக்கு அருகாமையில் பெண்பிள்ளைகளினை கேலி செய்து பெண்பிள்ளைகளின் தொலைபேசி இலக்கங்களைக் கேட்பது மற்றும் தொப்பிகளை களைவது தொடர்பில் மேலும் அருவருக்கத்தக்க விதங்களில் நடந்து கொள்வது போன்ற செயல்களில் ஈடுபடுவோரை உடனடியாக கைது செய்து மன்றில் நிறுத்துமாறு பருத்தித்துறை நீதிமன்ற எல்லைக்குட்பட்ட பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

பொதுமக்களினால் நீதிமன்றுக்கு இவ்வாறான நடவடிக்கை தொடர்பில் புகைப்படங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்குமாறும் பொதுமக்களினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-3-60)

## மணவாளக் கோல திருவிழா

நீர்வேலி அருள்மிகு ஸ்ரீ அரசேகரிப்பிள்ளையார் கோவில் மணவாளக்கோலத்திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு சங்காபிஷேகம் ஆரம்பமாகி இடம் பெறும்.

இரவு 7 மணிக்கு விசேட பூஜை ஆராதனைகள் இடம்பெற்று எம்பெருமான் அழகிய பூந்தண்டிகையில் வலம்வரும் நிகழ்வு இடம் பெறவுள்ளதாக பரிபாலனசபையினர் அறிவித்துள்ளனர்.

## சப்பறத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

கந்தரோடை அருளானந்தப் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இதன் சப்பறத் திருவிழா இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் சிறப்பம்சமாக விசேட மங்கள வாத்தியங்கள் முழங்க, அலங்கரிக்கப்பட்ட சப்பறத்தில் எம்பெருமான் ஆரோகணித்து அடியார்களுக்கெல்லாம் அருள்பாலிக்க உள்ளார்.

இந்நிகழ்வில் கண்டியில் இருந்து வரவழைக்கப்பட்ட யானை பவனியும் சப்பறத்திருவிழாவில் சுவாமி வீதியுலாவின் போது இடம்பெறவுள்ளது. நாளை தேர்த்திருவிழாவும் நாளை மறுதினம் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (இ-5)

## யாழ்.பொதுநூலக நினைவு நாளும் தாவீது அடிகளின் நினைவு நாளும்

(யாழ்ப்பாணம்)

நாளை திங்கட்கிழமை காலை 9.15 மணியளவில் யாழ்ப்பாணப் பொது நூலகத்தில் வண.பிதா தாவீது அடிகள் நினைவும் பொது நூலகம் பற்றிய உண்மை நிகழ்வுகளின் தொகுப்பு என்ற நூலும் வெளியிடப்படவுள்ளது.

இந்நிகழ்வில் நூலகத்தின் அங்கத்தவர்களையும் வாசிப்பதில் ஈடுபாடு கொண்டவர்களையும் சனசமூக நிலையங்கள், நூலகங்கள் போன்றவற்றின் பிரதிநிதிகளையும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

மத்திய இலவச வாசிக சாலை என்ற அமைப்பை முதலில் உருவாக்கிய நூலகத்தின் ஸ்தாபகர் புத்தூர் சக்கடத்தார் க.மு.செல்லப்பாவின் எண்ணத்தின் அடிப்படையில் நிறுவனங்களின் பிரதிநிதிகள் தமது அமைப்பை உறுதிசெய்யும் கடிதத்தை வழங்கி நூலின் பிரதியை இலவசமாகப் பெற்றுக் கொள்ளவும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ

## யாழில் 47 வர்த்தக நிலையங்களுக்கெதிராக இம்மாதம் வழக்குகள் பதிவு செய்யப்பட்டன

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் சட்டத்துக்கு முரணான வகையில்செயற்பட்ட வர்த்தக நிலையங்களுக்கு எதிராக இந்த மாதம் 47 வழக்குகள் நீதிமன்றங்களில் பதிவு செய்யப்பட்டு 2 இலட்சத்து 58 ஆயிரத்து 500 ரூபாய் தண்டப்பணமாக அறவிடப்பட்டுள்ளதாக பாவனையாளர் அதிகார சபையின் யாழ்.மாவட்ட இணைப்பதிகாரி த.வசந்தசேகரம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.பாவனையாளர் அதிகார சபையினரால் யாழ்ப்பாணத்திலுள்ள வர்த்தக நிலையங்களில் சோதனை நடவடிக்கை மேற் கொண்டிருந்தனர்.

அதில் விலைப்பட்டியல் காட்சிப் படுத்தாமை, காலாவதியான பொருட்களை விற்பனை செய்தமை, நிறைகுறைந்த பாண் விற்பனை உள்ளிட்ட 47 குற்றச் செயல்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

குற்றங்களுக்கு எதிராக அந்தந்த நீதிமன்றங்களில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு வர்த்தக நிலைய உரிமையாளர்கள் குற்றத் தினை ஒப்புக் கொண்டதையடுத்து தண்டப் பணம் அறவிடப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (3-9)

## வகுப்புக்கள் நடைபெறும்

யாழ்.சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா சுவாமிகள் 28.04.2015 ஆம் திகதி முதல் இந்தியத் தலயாத்திரைசென்றிருந்தமையால் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்த வெள்ளிக்கிழமைகளில் நல்லூர் வடக்கு வீதி மகேஸ்வரன மணிமண்டபத்தில் நடத்தப்பட்டு வந்த சத்சங்கம் மற்றும் இல.9, செட்டித்தெரு ஒழுங்கை நல்லூர் எனும் முகவரியில் சின்மய ஞானவேல் ஆச்சிரமத்தில் நடத்தப்பட்டு வந்த விவேக சூடாமணி, உபநிடதம், ஸ்ரீமத் பகவத் கீதை ஆகிய வகுப்புகள் யாவும் மீண்டும் வழமை போன்று குறித்த தினங்களில் தொடர்ந்து நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 7ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணி முதல் 7.30 மணிவரை கேன உபநிடதம் மற்றும் 7.45 மணி முதல் 8.45 மணி வரை ஸ்ரீமத் பகவத் கீதை அத்தியாயம்-6 ஆகியன ஆரம்பமாக உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்கள் மீதான அடக்குமுறைகள் நாளுக்குநாள் தொடர்ந்த வண்ணமுள்ளன

## வைத்திய கலாநிதி சிவமோகன் சாடல்

தமிழர்கள் தமிழர்களாக இருக்க பழகிக் கொள்ளவேண்டும். இல்லாதவரை எமது மக்கள் மீதான அடக்கு முறைகளும் தொடர்ந்து கொண்டு தான் இருக்கும் என வடக்கு மாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி சி.சிவமோகன் தெரிவித்துள்ளார்.

பொதுத்தேர்தல் நெருங்கிவர வர தமிழர்கள் மீதான அடக்குமுறைகளை வெளிப்படுத்த முற்படுகின்றனர். சிங்கள அரசியல் வாதிகள் இராணுவத்தை விலக்க மாட்டோம், அரசியல் கைதிகளை விடுதலை செய்ய மாட்டோம். இராணுவ காணி அபகரிப்புகளில் தலை யிடமாட்டோம். போர்க்குற்றங்களை ஏற்கமாட்டோம். இனப்படுகொலை செய்தவர்களை காட்டிக்கொடுக்க மாட்டோம், ஐ.நா. சபையை வரவிடமாட்டோம் சர்வதேச விசாரணையை செய்ய விடமாட்டோம் என கூக்குரல் இட்டு வருகிறது சிங்கள அரசியல்வாதிகள். இனவாத சிந்தனையுடன் முழுக்க முழுக்க செயற்பட்ட ராஜபக்ஷ அரசுக்கு என்ன நடந்தது என்பதை தற்சமயம் இவர்களும் சிந்திக்க தொடங்க வேண்டும். இல்லையேல் அவர்களின் தீய எண்ணங்களுக்கு அவர்களே தீமையை அறுவடை செய்யவேண்டிவரும்.

ஒரு வித்தியாவின் பிரச்சினையை வைத்துக்கொண்டு திரைமறைவில் சிலரால் உருவாக்கிவிட்ட வன்முறையை காரணமாக்கி மீண்டும் இராணுவத்தின் கைகளில் யாழ்ப்பாணம் முடக்கப்பட்டு. இதன்மூலம் தனது கெட்டிக்காரத்தனத்தை பறை சாற்றியாம். மக்களின் மீதான தமது அடக்குமுறை சிந்தனையை வெளிப்படுத்தி சிங்கள தேசத்திற்கு தேர்தல் நேரத்தில் ஒரு செய்தியை சொல்ல முயல்கிறதா இந்த நல்லாட்சி அரசு என சந்தேகம் கொள்ள வைக்கிறது.

வடமாகாணத்தின் பாதுகாப்புக்கு பொறுப்பதாரியாக ஒரு பகுதியேனும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட முதலமைச்சர் உள்ளபோது அவரிடம் எந்த விதப்புரைகளும் பெறப்படாது இந்த அரசு செயற்படுவிதம் ஏற்கக்கூடியதல்ல. மாறி மாறி வரும் அரசுகளும் எமது மக்களின் மீது தமது மேலாதிக்கத்தை நிலை நிறுத்த முற்படுகின்றனர். தமிழர்கள் தமிழர்களாக இருக்க பழகிக் கொள்ள வேண்டும். இல்லாதவரை எமது மக்கள் மீதான அடக்குமுறைகளும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கும் என தெரிவித்துள்ளார்.(2)

# முள்ளியவளை காட்டா விநாயகர் ஆலய பொங்கல் நிகழ்வு இன்று

(முள்ளியவளை)

வரலாற்றுச் சிறப்புமிக்க முள்ளியவளை காட்டா விநாயகர் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக நடைபெறவுள்ளது.


வைகாசி விசாகத்தில் நடைபெறும் வற்றாப்பளை கண்ணகை அம்மன் கோவில் பொங்கலிற்கு முதல் நாளே காட்டா விநாயகர் ஆலயப் பொங்கல் நடை பெறுவது வழமையாகும்.

அத்துடன் இந்தக் கோவிலில் ஞாயிற்றுக்கி ழமை விசேட பூசை வழிபாடுகள் நடை பெற்று நள்ளிரவு 12 மணிக்கு வள ந்து நேற்று பொங்கல் நடைபெற்று பின்னர் அதிகாலை 3 மணியளவில் இவ் வாலயத்திலிருந்து வற்றா ப்பளை ஆலயம் நோக்கி மடைப் பண்டங்கள் எடுத்துச்செல்லப்பட்டு அங்கும் பொங்கல் நிகழ்வுகள் ஆரம் பமாகும் வற்றாப்பளை பொங்க லுக்கு ஒருவாரத்திற்கு முன்னர் சிலாவத்தை பெருங்கடலில் எடுக் கப்படும் உப்பு நீர் கடற் தீர்த்தத்தில் தொடர்ச்சியாக ஏழு நாட்களும் இவ்வா லயத்திலேயே விளக்கெ ரியும் அற்புத நிகழ்வு இடம்பெறு வது குறிப்பிடத்தக்கது.

வருடாவருடம் இப்பொங்கலுக்கு பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தருவது வழமையாகும். இவ்வருடமும் பக்தர்கள் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. (2-302)

# திருக்கேதீச்சரம் ஆலயத்திற்கு சுவாமிநாதன் நேற்று விஜயம்

## தேவைகள் குறித்து ஆராய்ந்தார்



புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் இந்துமத விவகார அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் நேற்று சனிக்கிழமை மன்னார் திருக்கேதீச்சரம் ஆலயத்துக்கு சென்று நிலைமைகளை ஆராய்ந்துள்ளார்.

திருக்கேதீச்சரம் ஆலயத்திற்கு சென்ற அவர் நேற்றுக் காலை 9 மணியளவில் வழிபாடுகளில் ஈடுபட்டார்.

இதன்போது ஆலயத்தின் தேவைகள் குறித்தும் பாதுகாப்பு தொடர்பாகவும் ஆலய நிர்வாகிகளுடன் கலந்துரையாடினார்.

இதன்போது ஆலய நிர்வாகிகள் ஆலயத்தின் பல்வேறு தேவைகள் தொடர்பாக அமைச்சர் சுவாமிநாதனுக்கு விளக்கம் ளித்தனர்.

அதனைத் தொடர்ந்து ஆலயத்தை சுற்றிப் பார்வையிட்ட அமைச்சர். குறித்த ஆலயத்திலுள்ள முக்கியத்துவம் வாய்ந்த விக்கிரகங்களை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஆலய நிர்வாக சபையின ரிடம் கோரிக்கை விடுத்தார்.

இதேவேளை, இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் திருக்கேதீஸ்வரம் ஸ்ரீ சபாரத்தின சுவாமிகள் தொண்டர் சபை ஏற்பாடு செய்திருந்த ஆன்மீகப் பெருவிழாவும் நிகழ்வில் பிரதம விருந்தினராக அமைச்சர் கலந்துகொண்டார்.

குறித்த நிகழ்வில் கௌரவ விருந்தினராக இந்திய துணைத் தூதுவர் என்.நடராஜன் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.(2)




# தனியார் பேருந்து முச்சக்கரவண்டியை மோதித் தள்ளியதில் நால்வர் படுகாயம்!

(முள்ளியவளை)

புதுக்குடியிருப்பு சிவன் கோவிலுக்கு முன்பாக இடம்பெற்ற வாகன விபத்தில் நால்வர் படுகாயம் அடைந்த நிலையில் புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் வைத்து முதலுதவி சிகிச்சை வழங்கப்பட்ட நிலையில் மாஞ்சோலை வைத்திய சாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டு தீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டனர்.

அதனைத்தொடர்ந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை 5மணியளவில் நடைபெற்றது.

இதில் சுபாஸ்கரன்(வயது-21), வனிதா(வயது-21),கிறிஸ்டி(வயது-6),டேவிட் (வயது-2) ஆகியோரே படுகாயம் அடைந்தவர்களாவர்.

சிறுவர்களில் இருவர் தலையில் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் அனுமதிக்கப்பட்டனர் என மாஞ்சோலை வைத்தியசாலை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

முல்லைத்தீவிலிருந்து புதுக்குடியிருப்பு நோக்கி பயணித்த இ.போ.ச.பேருந்தும் தனியார் பேருந்தும் ஒன்றையொன்று முந்திச் செல்ல வேகமாக சென்றவேளை புதுக்குடியிருப்பு சிவன்கோவில் பகுதியை அண்மித்தவேளை எதிரே வந்த முச்சக்கரவண்டியை மோதித் தள்ளியது தனியார் பேருந்து.

இதில் முச்சக்கரவண்டியில் பயணித்த நால்வரும் படுகாயம் அடைந்த நிலையில்,மேற்படி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

சம்பவம் அறிந்த புதுக்குடியிருப்பு பொலிஸார் அவ்விடத்திற்கு விரைந்தது மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர். (2-302)

# டொவொஸ்கோ இல்ல சிறுவர்களுக்கு பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன

வவுனியா டொவொஸ்கோ இல்லத்தில் அருட் சகோதரிகளின் பராமரிப்பின் கீழுள்ள சிறுவர்களுக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு, நேற்று முன்தினம் இடம்பெற்றது.

வன்னி யுத்த காலப்பகுதியில் விடுதலைப்புலிகளின் பராமரிப்பில் பெற்றோரின் ஆதரவின்றியிருந்த பிள்ளைகளில் 77 பேர், தற்போது வவுனியா டொவொஸ்கோ இல்லத்தில் அருட்சகோதரிகளின் பராமரிப்பின் கீழ் பாதுகாப்பாக இருந்து வருகின்றனர். அங்கு வசிக்கும் பிள்ளைகளுக்கு அத்தியாவசியமாக தேவைப்படும் அடிப்படை வசதிகள் ஏற்படுத்தி கொடுப்பதற்கு போதுமான நிதி இன்மையால் பல்வேறுபட்ட சிரமங்களை எதிர்கொண்டு வருவதாக இல்லத்துக்கு பொறுப்பான அருட்சகோதரி, நம்பிக்கை ஒளி நிறுவனத்துக்கு கடிதம் மூலம் உதவிகோரியிருந்தார்.

இதற்கமைவாக, லண்டனைத் தளமாகக் கொண்டு இயங்கும் நம்பிக்கை ஒளி தன்னார்வ நிறுவனத்தின் இணை நிறுவனமாக, தாயகத்தில் இயங்கும் இணைக்கும் இதயங்கள் அறக்கட்டளையின் ஊடாக குறித்த பிள்ளைகளின் நிலை அறிந்து அவர்களுக்கு தற்போது அத்தியாவசியமாக தேவைப்படும் பொருட்களான பாதணிகள், தேவையான ஆடைகள், படுக்கை விரிப்புக்கள், தலையணைகள், குடைகள், தேநீர் கோப்பைகள் மற்றும் கல்வி மேம்பாட்டுக்கான கணனிகள் வழங்கிவைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் மற்றும் இணைக்கும் இதயங்கள் அறக்கட்டளையின் தலைவர் கே.சிவகாந்தன் மற்றும் நம்பிக்கை ஒளி நிறுவனம் சார்பாக பஞ்சலிங்கம் சுபாஸ்கரன் உட்பட இந்நிறுவனத்தின் ஊழியர்களும் கலந்து கொண்டு, ஆதரவின்றி இருக்கும் 77 பிள்ளைகளுக்கு அத்தியாவசியமாக தேவைப்படும் பொருட்கள் கையளிக்கப்பட்டன. (2)

# வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலய பொங்கலையொட்டி பேருந்து சேவைகள்

வற்றாப்பளை கண்ணகி அம்மன் வருடாந்த பொங்கல் விழாவிற்கு இலங்கை போக்குவரத்துச் சபை வடபிராந்தியத்திலுள்ள யாழ்ப்பாணம், பருத்தித்துறை, காரைநகர், கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய ஏழு சாலையினாலும் விசேட பேருந்து சேவைகள் செயலற்ற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண இ.போ.ச.சாலை முகாமையாளர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

அன்றையதினம் யாழ்ப்பாணம், பருத்தித்துறை, காரைநகர் ஆகிய பகுதிகளில் இருந்து வற்றாப்பளை அம்மன் ஆலயம் செல்லும் அடியவர்கள் யாழ். மத்திய பேருந்து நிலையத்திலும் பருத்தித்துறை, காரைநகர் சாலைகளிலும் (டிப்போ) முற்பதிவினை மேற்கொள்ள முடியும்.

கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் இருந்து செல்லும் அடியவர்கள் கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு சாலைகளிலும் (டிப்போ) முற்பதிவினை மேற்கொள்ள முடியும்.

அத்துடன் கிராமப் புறங்களில் இருந்து வற்றாப்பளை செல்லும் அடியவர்களுக்கு போக்குவரத்தினை இலகுவாக்கும் முகமாக 40பேர்களுக்கு மேல் செல்ல இருக்கும் பட்சத்தில் அருகிலுள்ள சாலைக்கு (டிப்போ) சென்று கோரிக்கை விடுக்கும் பட்சத்தில் தமது பிரதேசத்தில் இருந்து சென்று வருவதற்கு பேருந்தினை நியாயமான கட்டண அடிப்படையில் வழங்குவதற்கு இலங்கை போக்குவரத்துச் சபை தயாராகவுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலதிக தொடர்புகளுக்கு: யாழ். சாலை-021 222 2207, பருத்தித்துறை சாலை-021226 3266, காரைநகர் சாலை-021 320 75 93, முல்லைத்தீவு-021229 0139, யாழ். மத்திய பேருந்து நிலையம்-021 222 2281, கிளிநொச்சிசாலை- 021228 3737, வவுனியா சாலை- 024 222 3449, மன்னார் சாலை- 023 222 2281 ஆகியவற்றிக்கான தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு தகவல் களைப் பெறமுடியுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.(2)

# வாழ்வின் எழுச்சி பயனாளிகளினால் சிரமதானப்பணி நேற்று முன்னெடுப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கண்ணகைபுரம் கிராமத்தில் வாழ்வின் எழுச்சி பயனாளிகளினால் சிரமதானப் பணிகள் பரவலாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.



இதன் அடிப்படையில் கண்ணகைபுரம் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தரின் ஏற்பாட்டில் கண்ணகைபுரம் மத்தியில் அமைந்துள்ள திலீபன் முன்பள்ளி, பொதுநோக்கு மண்டபம், கண்ணகைபுரம் அ.த.க. பாடசாலை, குடியிருப்பு பகுதியிலுள்ள பொதுநோக்கு மண்டபம், கிழக்கில் அமைந்துள்ள வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கி வளாகம், மேற்கிலுள்ள இலங்கை மெதடிஸ்த திருச்சபை வளாகம் ஆகியவையே சிரமதானப்பணி மூலம் துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் நேற்றைய தினம் கண்ணகைபுரம் மத்தி திலீபன் முன்பள்ளி, கண்ணகைபுரம் அ.த.க.பாடசாலை, கிழக்கிலுள்ள வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கி வளாகம் என்பன சிரமதானப்பணி மூலம் துப்புரவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-272)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமற்போன ஊடகவியலாளர்கள் தொடர்பில் பாரபட்சமற்ற விசாரணை அவசியம் நடத்தப்படும்

ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)



**நாட்டில் கடந்த காலங்களில் காணாமற் போயுள்ள ஊடகவியலாளர்கள் தொடர் பான விசாரணைகளை எவ்வித பாரபட் சமுமின்றி முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**

மூடி மறைக்கப்பட்டுள்ள 'பைல்கள்' மீள திறக்கப்பட்டு முறையானதும் பாரபட்சமற்றதுமான விசாரணைகளை முன்னெடுப்பதற்கு வழிகாட்டல்களை வழங்கியுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

சட்டத்தரணிகள் சங்க நிகழ்வொன்றில் நேற்று முன்தினம் உரையாற்றிய ஜனாதிபதி நல்லாட்சிக்கான வழி திறக்கப்பட்டுள்ளதாகவும், இந்த நீண்ட தூர பயணத்தில் சகல தரப்பினதும் ஒத்துழைப்பு கிட்டும் என்ற நம்பிக்கை தமக்குள்ளதாகவும் தெரிவித்தார்.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தில் இடம்பெறும் மிக முக்கிய நிகழ்வொன்றில் கலந்து கொள்வதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். ஜனாதிபதியொருவர் சட்டத்தரணிகள் சங்க தலைமைப் பணிமனைக்கு வருகை தந்த முதலாவது சந்தர்ப்பம் இது என்பதால் நான் மகிழ்ச்சியடைகிறேன். அதற்கான வாய்ப்பைத் தந்த சங்கத்தினருக்கும் எனது நன்றிகள்.

நாட்டில் சட்டத்தின் ஆதிக்கத்தினை பாதுகாப்பதற்கு அர்ப்பணிப்புடன் பணிபுரிந்தவர் என்ற வகையில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவர் உபுல் ஜயசூரியவுக்கு சர்வதேச விருது கிடைத்துள்ளதில் நாம் பெருமையடைகிறோம். எமது நாட்டின் சட்டத்துறை சார்ந்த அனைவரும் அரசாங்கமும் பெருமைப்படும் விடயம் இது.

மற்றொரு விதத்தில் இந்த விருது பொதுநலவாய நாடுகள் அமைப்பினால் வழங்கப்பட்டுள்ளதால் பொதுநலவாய நாடுகள் அமைப்பின் தலைவர் என்ற வகையிலும் நான் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். இந்த நாட்டின் சட்டத்துறையில் பிரபலமான உபுல் ஜயசூரிய போன்றவர்கள் இத்தகைய விருதுக்காக தேர்ந்தெடுக்கப்பட்டமையும் பெருமைக்குரியது. அரசாங்கம் என்ற ரீதியில் நாம் செயற்படுகையில் சட்டத்தின் ஆதிக்கத்தைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் பொறுப்பு அரசாங்கத்தினுடையதாகும். அந்த சுதந்திரம் பெற்றுக்கொடுக்கப்படவேண்டும். சட்டத்தின் ஆதிக்கத்தைப் பாதுகாக்கின்ற அதிகாரிகளுக்கு அவர்களின் கடமைகளை சுதந்திரமாக மேற்கொள்வதற்கு சந்தர்ப்பம் இருக்க வேண்டும்.

இப்போது ஜனாதிபதி மாளிகையிலிருந்தோ ஜனாதிபதி செயலகத்திருந்தோ ஜனவரி 8 ஆம் திகதிக்குப் பின் புதுக்கடைக்கு தொலைபேசி மூலமாக அழுத்தங்கள் வருவதில்லை. இப்போது முழுமையான சுதந்திரம் உள்ளது. சட்டத்துறை மற்றும் நீதிமன்ற செயற்பாடுகளுக்கு உட்பட்டுள்ள அனைவருக்கும் சுதந்திரமாக செயற்பட முடிகிறது.

கடந்த ஜனவரி 8 ஆம் திகதிக்குப் பின்னர் நாட்டில் நல்லாட்சி இடம் பெறுவதாக பலரும் தெரிவிக்கின்றனர். நான் அதனை முழுமையாக ஏற்றுக்கொள்ளமாட்டேன்.

நாட்டில் நல்லாட்சிக்கான வாசல் திறக்கப்பட்டுள்ளது.

நல்லாட்சிக்குப் பயணிக்கும் பிரவேசம் உருவாகியுள்ளது. ஒரு ஆரம்பம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

வடக்கு மாகாணத்தில் கல்வித் திணைக்களத்தால் கல்வி வலயங்களில் காணப்படும் மாகாண, வலய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பக் கல்வி நிலையங்களின் (PIC TEC,CRC) போதனாசிரியர் (ஆசிரிய ஆலோசகர் வகுதியினுள்) பதவிக்கான வெற்றிடங்களுக்கு இலங்கை ஆசிரியர் சேவையைச் சேர்ந்தோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பதவிக்கு விண்ணப்பிக்கும் ஆசிரியர்கள் இலங்கை ஆசிரியர் சேவை 1,2-1 ஆகிய தரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் தங்கள் வலயக்கல்வி அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப்படிவங்களையும் தகைமைகளையும் நிபந்தனைகளையும் பெற்றுக்கொள்ளலாம் என்பதனை அறியத்தருகின்றேன்.

விண்ணப்பப்படிவங்களை வலயக்கல்விப் பணிப்பாளரூடாக 2015. 06.30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு வடக்கு மாகாணக் கல்வி பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (இ-5)

# 05.2015 31 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1223 - செங்கிஸ் கானின் மங்கோலியப் படைகள் கிப்சாக்கியரை சமரில் தோற்கடித்தனர்.
- 1889 - பென்சில்வேனியாவில் ஜோன்ஸ்டவுன் நகரில் அணைக்கட்டு ஒன்று உடைந்ததில் 2,200 பேர் கொல்லப்பட்டனர்.
- 1900 - பிரித்தானியப் படைகள் ரொபேர்ட் பிரபு தலைமையில் ஜோகார்னஸ்பேக் நகரைக் கைப்பற்றின.
- 1902 - தென்னாபிரிக்காவில் இரண்டாவது போவர் போர் முடிவுற்றது. தென்னாபிரிக்கா பிரித்தானியாவின் முழுமையான ஆட்சியின் கீழ் வந்தது.
- 1910 - தென்னாபிரிக்க ஒன்றியம் அமைக்கப்பட்டது.
- 1911 - டைட்டானிக் கப்பல் வெள்ளோட்டம் விடப்பட்டது.
- 1921 - ஐக்கிய அமெரிக்காவில் ஓக்லஹோமா, துல்சா என்ற இடத்தில் இடம்பெற்ற இனக் கலவரங்களின் போது 39 பேர் கொல்லப்பட்டனர்.
- 1931 - பாகிஸ்தானின் குவெட்டா என்ற இடத்தில் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் 40,000 பேர் கொல்லப்பட்டனர்.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: ஜப்பானிய கடற்படையின் நீர்மூழ்கிக் கப்பல்கள் சிட்னி நகரைத் தாக்கின.
- 1961 - தென்னாபிரிக்கா பொதுநலவாய அமைப்பிலிருந்து விலகியது. தென்னாபிரிக்கக் குடியரசு அமைக்கப்பட்டது.
- 1962 - மேற்கிந்தியத் தீவுகளின் கூட்டமைப்பு கலைக்கப்பட்டது.
- 1970 - பெருவில் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் யூங்கே என்ற நகர் முழுமையாகப் புதையுண்டதில் 47,000 பேர் கொல்லப்பட்டனர்.
- 1997 - கனடாவில் நியூ பிரன்ஸ்விக்கையும் பிரின்ஸ் எட்வர்ட் தீவையும் இணைக்கும் கூட்டமைப்புப் பாலம் (Confederation Bridge) திறக்கப்பட்டது.
- 1981 - யாழ்ப்பாணம் பொது நூலகம் நள்ளிரவு நேரம் இலங்கை காவல் துறையினரால் எரிக்கப்பட்டது.
- 2004 - வீரகேசரி பத்திரிகை நிருபரும் பத்திரிகையாளருமான ஐயாத்துரை நடேசன் மட்டக்களப்பில் சுட்டுக்கொல்லப்பட்டார்.
- 2005 - இலங்கையின் புலனாய்வுத்துறை உயர் அதிகாரி மேஜர் நிசாம் முத்தாலிப் கொழும்பில் சுட்டுக்கொல்லப்பட்டார்.
- 2007 - டொராண்டோ தமிழியல் மாநாடு ஆரம்பமானது.

பிறப்புகள்

- 1819 - வால்ட் விட்மன், அமெரிக்கக் கவிஞர் (இ. 1892)
- 1852 - ஜூலியஸ் ரிச்சர்டு பெட்ரி, ஜேர்மனிய நுண்ணுயிரியலாளர் (இ. 1921)
- 1928 - பங்கஜ் ராய், இந்தியத் துடுப்பாளர் (இ. 2001)
- 1931 - நீலாவணன், ஈழத்துக் கவிஞர் (இ. 1975)
- 1945 - லோரண்ட் பாக்போ, ஐவரி கோஸ்ட்டின் 4 ஆவது அரசுத்தலைவர்
- 1966 - ரொசான் மகாநாம, இலங்கைத் துடுப்பாளர்

இறப்புகள்

- 1809 - ஜோசப் ஹேடன், மேற்கத்திய இசையறிஞர் (பி. 1732)
- 1832 - எவரிஸ்ட் கால்வா, பிரெஞ்சு கணிதவியலர் (பி. 1811)
- 1910 - எலிசபெத் பிளாக்வெல், ஆங்கிலேய-அமெரிக்க மருத்துவர் (பி. 1821)
- 1962 - அடோல்வ் ஏச்மென், ஜேர்மானிய கேணல் (பி. 1906)
- 1976 - ஜாக்குவஸ் மோனாட், நோபல் பரிசு பெற்ற ஜேர்மனிய உயிரியலாளர் (பி. 1910)
- 1987 - ஜான் ஆபிரகாம், திரைப்பட இயக்குநர் (பி. 1937)
- 2002 - சுபாஸ் குப்தே, இந்தியத் துடுப்பாளர் (பி. 1929)
- 2004 - ஐயாத்துரை நடேசன், இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர்
- 2009 - மில்வினா டீன், மூழ்கிய டைட்டானிக் கப்பலின் கடைசியாக உயிருடன் இருக்கும் ஒரே ஒரு பயணி (பி. 1912)

சிறப்பு நாள்

- புகையிலை எதிர்ப்பு நாள்

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி | சுன்னாகம் | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 120 | 70 | 100 | 110 | 100 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 110 | 100 | 110 | 100 |
| பச்சைமிளகாய் | 60 | 40 | 50 | 100 | 60 | 50 |
| தக்காளி | 100 | 60 | 100 | 80 | 70 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 60 | 60 | 50 | 50 |
| கோவா | 160 | 120 | 70 | 100 | 100 | 100 |
| கரட் | 200 | 160 | 120 | 200 | 160 | 150 |
| பூசணி | 30 | 30 | 40 | 40 | 40 | 40 |
| புடோல் | 140 | 80 | 50 | 80 | 120 | 70 |
| வாழைக்காய் | 40 | 50 | 50 | 40 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 160 | 130 | 120 | 140 | 120 | 100 |
| பெரிய வெங்காயம் | 140 | 120 | 110 | 120 | 100 | 90 |
| பாகற்காய் | 220 | 160 | 110 | 120 | 160 | 150 |
| வெண்டிக்காய் | 160 | 140 | 60 | 100 | 100-120 | 120 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | — | 120 | 120 | 80 |
| பயற்றங்காய் | 160 | 120 | 120 | 100 | 100-120 | 100 |
| லீக்ஸ் | 240 | 150 | 150 | 200 | 160 | 160 |
| பீற்றூட் | 120 | 120 | 80 | 120 | 60 | 50 |
| கறிமிளகாய் | 160 | 140 | 80 | 140 | 100-120 | 90 |
| முருங்கைக்காய் | 350 | 500 | — | 400 | 500 | 450 |
| போஞ்சி | 200 | 200 | 140 | 200 | 220 | 160 |
| கத்தரிதம்புள்ள | 50 | 100 | 50 | 70 | — | 80 |
| கீரை - 1 பிடி | 40 | 40 | 40 | 50 | 50 | 30 |
| தேசிக்காய் | 120 | 120 | 140 | 120 | 80-100 | 180 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 60 | 40 | 40-60 | 60 | 50 |
| இராசவள்ளி | 200 | 120 | 150 | 140 | 140 | 120 |
| வெங்காயப்பூ | 350 | — | — | — | — | — |
| முள்ளங்கி | 100 | 100 | 50 | 100 | 50 | 50 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 40 | 30 | 30 | 30 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 20 | 10 | 20 |

## உலக புகையிலை எதிர்ப்பு நாள்



உலக புகையிலை எதிர்ப்பு நாள் உலகெங்கும் மே 31 ஆம் நாளன்று கொண்டாடப்பட்டு வருகிறது. உலக சுகாதார நிறுவனத்தின் உறுப்பு நாடுகள் சேர்ந்து இந்நாளை 1987 ஆம் ஆண்டில் சிறப்பு நாளாக அறிவித்தது.

உலகில் மனித இறப்புகளைத் தோற்றுவிக்கும் முக்கிய காரணிகளில் புகையிலை இரண்டாவது இடத்தை வகிக்கிறது. இச்சிறப்பு நாளின் அறிவிப்பு மூலம் உலக சுகாதார நிறுவனம் ஆண்டுதோறும் புகையிலை சம்பந்தமான சுமார் 3.5 மில்லியன் இறப்புகளைக் குறைக்க முடியும் என எதிர்பார்க்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்க்குற்ற விசாரணை

# சரத் பொன்சேகாவுக்கு உருத்திரகுமாரன் சவால்



பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, இலங்கை இராணுவத்தின் குற்றமிழைக்காத செயற்பாட்டை நிரூபிக்க வேண்டுமானால், சர்வதேச போர்க்குற்ற விசாரணைக்கு உடன்பட வேண்டும் என்று நாடு கடந்த தமிழீழத்தின் பிரதமர் உருத்திரகுமாரன் சவால் விடுத்துள்ளார்.

த காடியன் செய்தித்தாளுக்கு வழங்கிய செவ்வி ஒன்றில், தமிழ் பெண்கள் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டமை மற்றும் தமிழர்கள் கொல்லப்பட்டமையை சரத் பொன்சேகா மறுத்திருந்தார்.

போர்க்குற்ற விசாரணை ஒன்று வரும் போது தமது இராணுவத்தின் உண்மைத்தன்மையை நிரூபிக்கப்போவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதற்கு பதிலளித்துள்ள உருத்திரகுமாரன், எதிர்வரும் செப்டெம்பர் மாதம் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் செய்ட் ராட் அல் ஹுசைன் சமர்ப்பிக்கவுள்ள அறிக்கையில், இறுதிப் போரில் கொல்லப்பட்டவர்களின் விபரமும் அதற்கான நீதிப்பரிந்துரைகளும் சமர்ப்பிக்கப்பட வுள்ளன.

இதன்போது சரத் பொன்சேகா முன்வந்து தமது பதிலை வழங்க வேண்டும் என்று உருத்திரகுமாரன் கேட்டுள்ளார்.

இதேவேளை இறுதிப்போரின் போது பதில் பாதுகாப்பு அமைச்சராக இருந்த தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால, போர்க்குற்ற சர்வதேச விசாரணை தொடர்பில் எவ்வாறு நியாயப்படுத்தவுள்ளார் என்பதையும் வெளிப்படுத்த வேண்டும் என்றும் உருத்திரகுமாரன் கோரிக்கை விடுத்துள்ளார். (இ-5)

# நாட்டில் சர்வாதிகார ஆட்சியை மீண்டும் ஏற்படுத்த சிலர் சூழ்ச்சி

ஐ.தே.க. குற்றச்சாட்டு



(கொழும்பு)

**நாட்டில் மீண்டும் சர்வாதிகார ஆட்சியை ஏற்படுத்த சிலர் முயற்சித்து வருவதாகவும் பல சூழச்சி நடவடிக்கையில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர் எனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கபீர் ஹாசிம் தெரிவித்துள்ளார்.**

நடைபெற்று முடிந்த ஜனாதிபதி தேர்தலின் போது தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை தோற்கடிக்க முழு முயற்சி எடுத்த தரப்பினர், பொதுத் தேர்தல் நடத்தப்படுவதனை தடுக்க முயற்சிக்கின்றனர். மீண்டும் நாட்டில் சர்வாதிகார ஆட்சியொன்றை உருவாக்க சூழ்ச்சி செய்கின்றனர்.

20 ஆம் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவதாகக் கூறி எதிர்வரும் பொதுத் தேர்தலை காலம் தாழ்த்தக் கூடாது.

உடனடியாக பொதுத் தேர்தலை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். தற்போதைய அரசாங்கத்தை 100 நாட்களின் பின்னர் கலைக்காமல் விட்டதனால் கள்வர்களுக்காக கள்வர்கள் குரல் கொடுக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் மக்கள் அளித்த ஆணை நாடாளுமன்றிலும் பிரதிபலிக்க வேண்டும். தற்போதைய நாடாளுமன்றில் அந்த மக்கள் ஆணை பிரதிபலிக்கவில்லை.

எனவே புதிதாக நாடாளுமன்றம் ஒன்றை நிறுவ வேண்டியது அவசியமானது என கபீர் ஹாசிம் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகம் சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (இ-5)

# ஆஸியில் இலங்கை அகதியின் கொலைக்குற்றம் உறுதியானது

## ஜூலையில் தீர்ப்பு!

அவுஸ்திரேலியாவில் இலங்கை அகதி ஒருவரை மற்றுமொரு இலங்கை அகதி கொலை செய்தமை அந்த நாட்டின் உயர்நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

கேதீஸ்வரன் சிவபெருமான் என்ற 35 வயதான இலங்கையர் கடந்த ஆண்டு ஜனவரி மாதம் கத்தியால் குத்தி கொலை செய்யப்பட்டார்.

இது தொடர்பில் சதீஸ்வரன் சுப்பையா என்ற 31 வயதான இலங்கையர் கைது செய்யப்பட்டிருந்தார்.

இதற்கு முந்திய வழக்கு விசாரணையின் போது அவர் குற்றமற்றவர் என்றும், அவருக்கு அருகில் இருந்த மற்றுமொருவரே இந்த கொலையை புரிந்துவிட்டு தப்பியோடியதாகவும் வாதிடப்பட்டிருந்தது.

எனினும் நேற்று முன்தினம் விசாரணையின் போது அவரது குற்றம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

அவருக்கான தண்டனை எதிர்வரும் ஜூலை மாதம் அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# தாயின் சித்திரவதையை நாமல் உணர்கின்றாரா?

## ஷிராணியின் மகன் கேள்வி

கடந்த இரண்டரை வருடகாலத்தில் தமது தாய் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்ட போது தாம் எவ்வாறான உணர்வை கொண்டிருந்தேன் என்பதை நாமல் ராஜபக்ஷ தெரிந்துகொண்டாரா? என முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவின் மகன், சவீன் பண்டாரநாயக்க கேள்வி எழுப்பியுள்ளார்.

நாமல் ராஜபக்ஷவின் தாயாரான ஷிராந்தி ராஜபக்ஷவை விசாரணைக்கு வருமாறு நிதிமோசடி தவிர்ப்பு பொலிஸ் பிரிவு அழைத்துள்ளது.

இதனையடுத்து தமது தாயையும் சகோதரர்களையும் விட்டு விடுங்கள் என்ற வாசகத்தை நாமல் ராஜபக்ஷ, தமது முகநூலில் வெளியிட்டிருந்தார்.

இதற்கு பதிலளிக்கும் வகையிலேயே சவீன் தமது கருத்தை பதிவு செய்துள்ளார்.

இந்தநிலையில் தமது தாயும் தந்தையும் மாமாவும் அரசியல்வாதிகள் இல்லை. எனினும் உங்களுடைய ஆட்சியில் அவர்களை மானக்கேடாக நடத்திய போது நான் எந்தளவு கஷ்டப்பட்டிருப்பேன்.

ஊடகங்களில் அரசாங்கம் முற்றிலும் பொய்யான செய்திகளை வெளியிடும் போது நான் எவ்வளவு தாக்கத்துக்கு உள்ளாகியிருப்பேன் என்று கேள்வி எழுப்பியுள்ள சவீன், அனுதாபத்தை அல்லது ஆதரவை எதிர்ப்பார்க்கும் முன்னர் நீங்கள் ஒரு சட்டத்தரணி என்ற அடிப்படையில் "மறுப்பக்கத்தையும் கேளுங்கள்" என்று சவீன் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# மகிந்தவின் தோல்விக்காக என்மீது சேறுபூசப்படுகிறது

## சோதிடர் சுமணதாச

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தோல்விக்காக என் மீதே சேறு பூசப்படுகின்றது என மகிந்தவின் முன்னாள் பிரதம சோதிடர் சுமணதாச அபேகுணவர்தன சிங்கள பத்திரிகையொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ தேர்தலில் தோல்வியடைந்தமையினால், முன்னாள் அமைச்சர்கள் சிலர் என்மீது சேற்றை அள்ளி வீசி வருகின்றனர்.

முன்னாள் ஜனாதிபதியின் தோல்விக்கு நானே காரணம் என சில முன்னாள் அமைச்சர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

முன்னாள் ஜனாதிபதி மற்றும் அவரது குடும்பத்தினர் தமக்கு எவ்வித கெடுதலையும் செய்யவில்லை.

எங்கோ செல்பவர்களே என்னை துன்புறுத்தி சேறு பூசி வருகின்றனர் என சுமணதாச சிங்களப் பத்திரிகைக்கு தெரிவித்துள்ளார்.

இதேவேளை. சோதிடர் சுமணதாசவின் ஆலோசனையின் காரணமாகவே முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பதவிக் காலம் நிறைவடைய இரண்டு ஆண்டுகளுக்கு முன்னதாகவே ஜனாதிபதி தேர்தலை நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# வாரம் ஒரு தகவல்

## எது விரதம்

துறவியானவர் கடுமையான விரதங்களை மேற்கொண்டு வருப வர். அவர் சூரிய உதயத்தின் பின்னர் உணவு உண்பதையோ தண் ணீர் பருகுவதையோ செய்யமாட்டார். அவரது நெறி தவறாத தன்மையை போற்றும் வகையில் அண்ட வெளியில் பகல் வேளை யில் ஒரு விண்மீன் தோன்றியது.

இவ்வாறான சிறப்புக்கள் வொருந்திய அந்தத் துறவி ஒருநாள் அருகிலிருந்த ஒரு மலையின் உச்சிக்கு செல்ல வேண்டியிருந்தது.

அந்தத் துறவியுடன் அவ்வூரில் வசிக்கும் சிறுமி தானும் வருவ தாக அடம்பிடித்துக் கொண்டிருந்தாள்.

"சரி வா..." என அழைத்துக் கொண்டு இருவரும் பயணத்தை தொடங்கினார்கள்.

சிறிது தூரம் சென்றதும் வெயில் அதிகமாக இருந்ததனால் தாகம் எடுத்தது.

தண்ணீர் கேட்ட சிறுமிக்கு துறவி தண்ணீர் கொடுத்து பருகுமாறு கூறினார்.

நீங்கள் தண்ணீர் குடித்தால் தான் தானும் குடிப்பதாக சிறுமி கூறினாள்.

" அம்மா நான் விரதத்தில் இருக்கின்றேன். சூரிய உதயத்தின் பின் எதுவும் உட்கொள்வதில்லை எனத் துறவி கூறினார்.

அவற்றைப் பற்றிய சிந்தனையே இல்லாத சிறுமி துறவியிடம் நீங்கள் தண்ணீர் குடித்தேயாக வேண்டும் என அடம்பிடித்தாள்.

துறவிக்கு குழப்பம் ஏற்பட்டது.

ஒரு புறம் தம்முடைய விரதம். மறுபுறம் சிறுமியின் தாகம்.... எதைப் பார்ப்பது என்றே அவருக்கு புரியவில்லை.

சிறிது யோசனை செய்த பின்னர் துறவி தண்ணீரை எடுத்துப் பருகினார். சிறுமியும் தண்ணீரைப் பருகித் தாகத்தைத் தீர்த்தார்.

ஆனால் துறவியோ தலை குனிந்தபடியே ஆகாயத்தைப் பார்க்க துணிவில்லாமல் நடந்து சென்றார்.

"விரதத்தை விட்டு விட்டோமே... எனவே, வானில் காணப்பட்ட அந்த விண்மீனும் மறைந்து போயிருக்கும்" என நினைத்துக் கொண்டிருந்த துறவி, மலை உச்சிக்கு சென்ற பின் தற்செயலாக ஒருமுறை தலை நிமிர்ந்து வானைப் பார்த்தார்.

அங்கே... இரண்டு விண்மீன்கள் இவருக்காக ஒளி வீசிக் கொண் டிருந்தன.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மகிந்தவினது மீள்வருகையொன்றின் தவிர்க்க முடியாத விளைவுகள்



**மகிந்த ராஜபக்சவினது மீள்வருகையொன்றின் தவிர்க்க முடியாத விளைவுகள் எனும் தலைப்பில் சண்டே லீடரில் என்.சத்தியசீலன் எழுதிய ஆய்வுக்கட்டுரையின் தமிழாக்கம் இங்கே பிரசுரமாகிறது.**

தேர்தலுக்கு முந்திய அரசியல் பழிவாங்கல்கள் மற்றும் பொலிஸ் தொல்லைகள் போன்ற தனிப்பட்ட குற்றச்சாட்டுக்கள் குறிப்பிட்ட ஒரு காலத்திற்கப்பால் நிலைக்காது போகலாம். அதாவது தம்மீதான குற்றச்சாட்டுக்கள் பற்றிய பொதுமக்களது பரந்துபட்ட கருத்துக்களை தமது காலத்திற்குள்ளாகவே துடைத்துவிட ராஜபக்சக்களால் முடியாது போகுமானால் இவைகளுங்கூட இருபக்கத் தாக்கங்களை ஏற்படுத்துவதாகவேயிருக்கும்.

பெரும் எடுப்பிலான ஊழல் குற்றச்சாட்டுக்கள் மீதான கைது, வைத்தியசாலையில் அனுமதி, சிறைச்சாலைதனிமைவாழ்க்கையின் பயங்கரங்களை தாமதிக்கவோ அல்லது அவற்றிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கான பசில் ராஜபக்சவுடைய நடவடிக்கைகளை ஜனாதிபதி ராஜபக்சவுடைய தீவிர ஆதரவாளர்களோ, அனுதாபிகளோகூட ஒரு குறிப்பிட்டளவுக்கு மேல் சகித்துக் கொள்ளப் போவதில்லை.

கோத்தபாய ராஜபக்ஷவுடைய பதவி மற்றும் பங்களிப்புக்கள் போன்ற ஏதாவது இருக்குமானாலும் அதுபற்றிய பொதுமக்களது கருத்துக்களும் ராஜபக்சவுடைய தற்போதைய மாறுபட்ட சூழ்நிலைத் தாக்கத்தின் பிரதிபலிப்புக் காரணமாக கேள்விக்குரியதாகவே ஆகிவிடும். நாட்டின் கவனம் முழுவதையும் அவர்மீதே பதிய வைப்பதன் மூலம் அதனை துல்லியமான முறையில் சாதித்துக் கொள்வதற்கு புதிய அரசாங்கத்தினால் முடியாதிருப்பது அதற்கான ஒரு குறைபாடாகவே தோன்றுகிறது.

ஆனாலும் உள்ளூர் விடயங்களும் உள்ளூர் வேட்பாளர்களும் பாராளுமன்ற தேர்தல் ரீதியில் வெளிப்படுத்தப்போகும் சாதக பாதகங்களின் அடிப்படையிலேயே இது ஓரளவு தீர்மானிக்கப்படுவதாக இருக்கும். அண்மையில் அதிகாரத்திலிருந்து விலகியவர்களுக்கு மட்டுமே கடந்த காலம் என்ற ஒன்று இருக்கிறது என்பதல்ல. தவறிழைத்தவர்களுக்கெதிராக எடுக்கப்போவதாக உறுதியளிக்கப்பட்ட சட்டநடவடிக்கைகள் கடந்த கால தவறுகளையும் சேர்த்து உட்படுத்துவதாக அமைந்திருப்பது இருபக்கத் தாக்கத்திலும் பார்க்கக் கூடுதலான தாக்கத்தையே உருவாக்கும். முன்னர் எதிரணியில் இருந்தவர்களிலுங்கூட சிலரோ அல்லது தற்போது அதிகாரத்திலிருக்கும் பலரோ தமது கடந்த கால தவறுகளை எவருமே தமக்கு நினைவூட்ட, அதுவும் விரும்பத்தகாத ஒரு நேரத்தில் கிணற்றிலிருந்து கிளம்பும் பூதமாக வெளி வருவதை முற்றிலும் விரும்பாதவர்களாகவே உள்ளனர்.

அரசியல் பழிவாங்கலும் இருபக்கத் தாக்கங்களைக் கொண்டதாகவே இருக்கும் என்பதுடன் நீண்டகாலமாகவே பெட்டிகளில் மறைத்து வைக்கப்பட்ட தடயப் பொருட்களாக எஞ்சிய எலும்புத் துண்டுகளும் (யாரால், எவருக்காக தொடர்ந்தும் மர்மமாக இருக்க வேண்டும் என்ற வகையில்) இப்போது தொடர்ந்தும் விரைவாகவும் அடுத்தடுத்தும் வெளிவரப் போவதையிட்டு எவருமே திகைப்படையாதிருக்க முடியாது.

தற்போதைய அரசியல் பழிவாங்கல் மற்றும் பொலிஸ் தொல்லைகள் பற்றிய குற்றச்சாட்டுக்கள் எவ்வளவு வேகமாக வெளிவரத் தொடங்குகின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு மறைத்து வைக்கப்பட்டிருக்கும் எலும்புகள் பற்றிய மர்மங்களும் விரைவாகவே வெளிவரத் தொடங்கும். இங்கு நான்கூறும் எலும்புகள் என்பது, பல தசாப்தகால இனப்போரின் தீர்க்கமான இறுதிக்கட்ட அவலக் காட்சியின் எச்சங்களை மூடி மறைத்திருக்கும் மண்ணும் நந்திக்கடல் பிரதேசமும் கொண்டுள்ளமர்மஎலும்புகளைப்போன்றதல்ல.

தன்னிலங்கை பெரும்பான்மை சிங்களவர்களின் பெரும்பாலோர் தத்தமக்கே உரித்தான திருப்திகர மற்றும் குழப்பகர தேர்தல் நிலைமைகளில் மூழ்கியிருக்கும் வேளையில் முழு உலகத்தினதும் நினைவிற்கு வருவருடன் புலம்பெயர் தமிழர்கள் மற்றும் ஐ.நா. அதிகாரிகள் சிலரதும் நினைவுகளை நிறைத்திருக்கப்போவதும் இந்த அவலக்காட்சிகளேதான்.

ஜனாதிபதி தேர்தல் போல் அல்லாது, அரசியல் மற்றும் தேர்தல் தொகுதி ரீதியிலும் நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களைக் கொண்டுள்ளதும் பிரதானமான சிங்களப் பெரும்பான்மைப் பிரதேசங்களிலேயே இந்த பாராளுமன்ற தேர்தல் இடம்பெறுகிறது. முஸ்லிம்கள் மற்றும் மலைநாட்டுத் தமிழ்க்கட்சிகளுடன் ஏனைய சிங்கள- கத்தோலிக்க, கிறிஸ்தவ வாக்காளர்களது சிந்தனைகள் அல்லாடும் தேர்தல் களமும் இதுவேதான். இங்கு முன்னரிலும் பார்க்க இந்தத் தடவை இவர்களது சிந்தனை குழப்பகரமாகவே இருக்கும் எனலாம். பெரும்பான்மைப் பிரதேசங்களை விடுத்துப் பார்த்தால் எஞ்சியிருப்பது இலங்கைத் தமிழ் சமூகத்தினதும் அதன் 'TNA' தலைமையினதும் தனித்துவமான வடபுல அரசியல் களமாகும். ஆனாலும் தேர்தல் தொகுதி ரீதியில் தேர்தலுக்குப் பிந்திய பாரிய விளைவுகளை சந்திக்காத பிரதேசமும் இதுவேயாகும்.

### நம்பகத்தன்மையில் உருவாகியிருக்கும் இடைவெளிகள்

புதிய அரசுத் தலைமை, மக்கள் ஊடகங்களிடையே தன்னைப் பற்றி ஏற்படக்கூடிய நம்பகத்தன்மை குறைபாடுகளை மூலோபாய ரீதியில் அணுகுகிறதோ இல்லையோ, ராஜபக்சக்கள் அரசுத் தலைமையிலிருந்து வெளியேற்றப்பட்ட பின்னருங்கூட தொடர்ந்தும் மக்கள் ஊடகங்களில் ஏற்படுகின்ற 'அரசு-மக்கள்' உறவு விரிசல்களை பயன்படுத்தியே வருகின்றனர். புதிய அரசுத் தலைமைகள் இதுமட்டில் தம்மீது தாமே குற்றங்காண வேண்டியவர்களாக இருக்கின்றனர். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச வெளியேற்றப்பட்டது மட்டில், தான் தெரிந்து எடுத்துக் கொண்ட விடயம் பற்றிய திட்டத்தில் ஆரம்பித்த அரசு, அடுத்த நாட்களில் ஏற்படக்கூடிய- அரசியல் மாற்றங்கள், பிரபல்ய மதிப்பீடுகள் அல்லது காப்பாற்றப்பட வேண்டிய வாக்குறுதிகள் போன்றவை மட்டில் எந்தவித அக்கறையுடனும் செயற்படவில்லை.

ஏற்கனவே 'SLFP' கட்சி ஜனாதிபதி ஒருவரையும் (சந்திரிகா) 'UNP' கட்சிப் பிரதமர் ஒருவரையும் (ரணில்) கொண்ட இணையாட்சியில் (2001-2004) நாட்டு மக்களால் தெளிவான முறையில் வழங்கப்பட்ட ஆட்சி அதிகார ஆணையை ('Mandate') பயன்படுத்தத் தவறியமை தீர்வுக்கான நல்ல சந்தர்ப்பத்தை இழக்கச் செய்திருந்தது. இப்போது வாக்குறுதிகளின் அடிப்படையில் கூடுதல் இணக்கப்பாட்டுடன் ஏற்பட்டிருக்கும் இணையாட்சியில் இத்தவறு நிவர்த்திக்கப்பட வேண்டும். அதற்கு, பெரும் அவதானத்துடன் நேர்மையுடனுமே இவ்விடயம் கையாளப்பட வேண்டும். அப்படியில்லை என்றால் பிரச்சினை மேலும் ஆழமாகிவிடும்.

இப்போதைய தருணத்திற்கும் தேர்தல் தினத்திற்குமிடையில் வாக்களிப்பிற்கான தமது அழைப்பை ஏற்றுக் கொள்வதற்கான சாத்தியக்கூறுகள் பற்றியே வாக்காளர் சிந்திப்பர் என்பது பற்றி அரசியல் தலைமைகள் விழிப்பாயிருக்க வேண்டும். 'SLFP-UPFA' தலைமைத்துவத்தின் பொதுவான ஊடகங்கள் ஜனாதிபதி ராஜபக்ச பக்கம் ஈர்க்கப்பட்டதாக தோன்றுகிற அதேநேரம் வாக்காளர்கள் பிரதமர் ரணில் மற்றும் அவரது UNP கட்சியினதும் போக்குகளையும் அவதானித்துக் கொண்டிருப்பவர்களாகவும் இருக்கலாம்.

எதுவித விட்டுக்கொடுப்பிற்கும் இடமேயில்லாத 'எல்.ரி.ரி.ஈ'யுடன் நேர்வே அனுசரணையில் மேற்கொள்ளப்பட்டு வந்த, இராணுவ ரீதியில் உணர்ச்சிகரமானதும் அனைத்து முக்கியத்துவம் வாய்ந்ததுமான பேச்சுவார்த்தைகள் மட்டில் ஜனாதிபதி சந்திரிகாவை தெளிவற்றவிதமான இருளிலேயே விட்டு வைத்திருந்த பிரதமர் ரணிலது கடந்த கால தந்திரங்கள் பற்றிய பழைய நினைவுகள் தற்போது பாராளுமன்ற அதிகார முறைக்கு திரும்புவதற்கான அவர்களது தற்போதைய சொந்த அமைதியின்மைக்குள் தள்ளியிருந்தது.

அதாவது, தோல்வியில் முடிவடைந்திருந்த முன்னைய அதே இணையாட்சி முறையின் கீழ் மேலும் கூடுதல் குழப்பகரமான சிந்தனைப் போக்குகளுக்கே அது வழி கோலியிருந்தது. நம்பகத்தன்மையில் ஏற்பட்டிருக்கும் இந்த 'விரிசல்' என்ற இடைவெளியினை சிறிசேன- ரணில் தலைமைத்துவம், குறிப்பாக 'UNP' எப்படி இட்டுக்கட்டி நிறைவு செய்யப்போகிறது. அதுவும் எதிர்பார்த்திருக்கும் வாக்காளார் கண்களில் ஏற்புடையதாக செய்யப் போகிறது என்பது அதிஉச்ச ஆர்வத்துடனும் அக்கறையுடனும் நெருக்கமாக உற்று அவதானிக்கத்தக்கதேயாகும்.

மறுபக்கம், புதியவரான ஒருவர் உட்பட மூன்று ஜனாதிபதிகள் சம்பந்தப்பட்டதும் பிளவுபட்டதுமான 'SLFP' தலைமைத்துவத்தின் ஒன்றுபட்ட செயற்பாடு, பெருமளவில் நாட்டிற்கு அல்லது அனைத்து சிங்கள பெரும்பான்மைப் பிரதேசங்களுக்கும் ஏற்புடையதோ இல்லையோ எதுவாயினும் அது தரும் நற்பெறுபேறு பற்றிய நம்பிக்கையுடன் கூடிய எதிர்பார்ப்பொன்றும் உள்ளது. அதாவது, பாலங்களே கண்ணுக்குப் புலப்படாத விதமாக கரைபுரண்டோடும் ஆற்றுப்பெருக்கு வழிப் பயணம் போன்றதே இதுவாகும். அவர்கள் எல்லோருமே நீந்திக் கரையேற வேண்டியவர்களேயானாலும் ஒரு தசாப்த கால கண்மூடித்தனமான கொடுங்கோலாட்சி காரணமாக அநேகமாக அவர்களனைவரும் தமது முன்னைய நீச்சல் பாடங்களை தற்போது மறந்துவிட்டனர் என்பதே விளைவாகிற்று.

புதிய தலைமைத்துவமோ தலைமைத்துவங்களோ அவற்றுக்கிடையிலான நம்பகத்தன்மை நாளுக்கு நாள் குறைந்துகொண்டு போவதற்கு முக்கிய காரணங்களாய் அமையக்கூடிய பிரச்சினைகளை வெளியே தேடுவது மட்டுமல்லாது, பிரச்சினைகளை உருவாக்கும் சக்திகளையும் அடையாளங் கண்டு கொள்ள வேண்டியதாயுள்ளது.

சிறிசேனவின் விசுவாசியாக நன்கு அறியப்பட்டவரும் அமைச்சரவை பேச்சாளருமான டாக்டர் ராஜித சேனாரட்ன, அமைச்சரவைப் பெறுப்புக்கள் ஆரம்பித்து வைக்கப்பட்ட பெப்ரவரி 9 ஆம் திகதியன்றே முன்னாள் பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்ச குடும்பத்துடன் மாலைதீவுக்கு தப்பிச் சென்றுவிட்டதாகவும், பின்னர் விடுதலைப் புலிகளைச் சேர்ந்த கே.பி. (K.P) எனப்படும் குமரன் பத்மநாதன் நாட்டை விட்டு வெளியேறுவதற்கான வழமையான பாதுகாப்பு அனுமதிபெறாமலும் முறையான பாஸ்போட் வழிமுறை அனுமதி நடைமுறைகளுக்கு புறம்பான விதத்திலும் மிக முக்கிய நபர்களது விமான நிலைய வெளியேற்ற கலரி ஊடாக நாட்டை விட்டு வெளியேறிச் செல்ல அனுமதிக்கப்பட்டதாகவும் கூறியதற்கான பதிவுகள் உள்ளன.

சில நிமிடங்களுள் என்று செல்லிவிடக் கூடிய விதத்தில் சில மணித்துளிகளிலேயே அமைச்சுப் பேச்சாளரின் இவ்விரு கூற்றுக்களும் பிழையானவை என்று நிரூபணமாயிற்று. இதுபோன்ற செயற்பாடுகள் இன்று வரை நிறுத்திக் கொள்ளப்படவில்லை. அப்போது நிலவிய சூழ்நிலையில் இது தவிர்த்துக் கொள்ளப்பட முடியாத ஒன்றாகவே இருந்தது:

அதாவது, இலங்கையில் வரலாற்று ரீதியிலான நிகழ்வுகள் போன்ற ஜனாதிபதி தேர்தல்களுக்குப் பிற்பாடு வதந்திகள், திரிபுப் பேச்சுக்கள் போன்றவை, குறிப்பாக முன்னைய அரசாங்கம் செய்தது என்ன, செய்யாதது என்ன, இழைத்த தவறுகள் என்ன, அவர்களை எதிர்நோக்கியுள்ள தண்டனைகள் என்ன? போன்ற பேச்சுக்கள் தவிர்க்கப்பட முடியாதவையாகவே முன்னரும் இருந்து வந்திருக்கின்றன. இவ்விதமாக மிகச் சிறிய விடயங்கள் வதந்திகள் மூலம் ஊதிப் பெருப்பிக்கப்பட்ட நிலையில் கூடுதல் பாதிப்புக்களை ஏற்படுத்தக்கூடிய சந்தர்ப்ப சூழ்நிலைகளிருந்தும் அவ்விதம் எதுவும் நடைபெறவில்லை. ஆயினும் வதந்திகள் மக்களின் சமூக ஊடகங்களுடன் ஆரம்பிக்கப்பட்டு நாட்டின் அனைத்துப் பிரதான ஊடகங்களையும் தவிர்த்துவிடாத முறையில் பரப்பப்பட்டேவரும் நிலை காணப்படுகிறது.

எனவே, முன்னாள் ஜனாதிபதி ராஜபக்சவும் விரைவாகவே நகரமெங்கும் சுற்றித் திரிந்து தமக்கும் தமது குடும்பத்திற்கும் எதிரான பழிவாங்கல் பிரச்சாரங்கள் எவ்விதம் பிழையாகிப் போகின்றன என்ற சாதகமான விளம்பரத்தை மலிவான முறையில் பெற்று வருகிறார். எனவே, நாட்டின் அரசாட்சிக்கான மைய அரங்கத்திற்குள் மீளவும் பிரவேசிக்கும் மகிந்தவின் முயற்சி தெளிவான ஒன்றேதான். ஆகையால் ஒன்றுபட்ட விதமாகவோ அல்லது பிரிவுபட்ட விதமாகவோ இதனை எதிர்த்து நிற்கும் ஆட்சியாளர்கள் கற்றுக் கொள்ள வேண்டிய பாடமொன்று உள்ளது. அதாவது, வதந்திகளின் மட்டில் செயற்படாது அவற்றின் அடிப்படை, பின்னணிகளை ஆராய்ந்து செயற்பட வேண்டும் என்பதே அதுவாகும்.

தமிழில்: யோகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தண்டித்தபின் விசாரணை!

## மகிந்த குற்றச்சாட்டு



(கொழும்பு)

**வழக்கு விசாரணை செய்து தண்டிக்கப்பட்ட காலம் போய், தற்போது தண்டித்து அதன் பின்னர் வழக்கு விசாரணை நடத்தப்படும் ஓர் சூழ்நிலை உருவாகியுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

அதற்கான சிறந்த உதாரணமாக முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டனை குறிப்பிட முடியும்.

சிறையில் சில வாரங்கள் தடுத்து வைத்து உயர் நீதிமன்றின் ஊடாக பின்னர் விடுதலை செய்யப்படுகின்றனர். சட்டத்தரணி என்ற ரீதியில் இந்த நடவடிக்கைகளை நான் அனுமதிக்கமாட்டேன்.

நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். இவ்வாறேனும் உங்களை பார்த்து பேச முடிந்தமைக்காக.

உங்களுக்கு எல்லாம் நான் இதனை சந்தர்ப்பமாக பயன்படுத்தி நன்றி பாராட்டுகின்றேன். கடந்த காலங்களில் நாட்டில் அபிவிருத்தி பணிகள் அதிகரித்ததாக இல்லையா என்பதனை நீங்களே சிந்தித்து பாருங்கள்.

நல்லாட்சியையே நாம் எதிர்பார்க்கின்றோம். குரோதம், கோபமற்ற ஓர் ஆட்சியையே எதிர்பார்க்கின்றோம்.

குரோதத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு நாட்டின் தலைவர் செயற்பட்டால் சிறுவர்களுக்கு வழங்கும் முன்னுதாரணம் என்ன?

இதனை ஆபத்தான ஓர் சமூக நோயாகவே நான் கருதுகின்றேன்.

ராஜபக்ஷ குடும்பத்தை அழிப்பதாக சொல்லும் ஆட்சியாளர் சமூகத்திற்கு விடுக்கும் செய்தி என்ன? அது பற்றி நாம் அதிகம் பேச வேண்டியதில்லை.

நீதிமன்றம் மிகவும் நேர்மையானது. அதற்கு நாம் மரியாதை அளிக்கின்றோம்.

தீர்ப்பு அளிக்கப்பட்டதன் பின்னர் நாட்டு மக்கள் எவ்வாறு பேசுகின்றார்கள் என்பது பற்றியும் சிந்திக்க வேண்டும். கல்வி, நாட்டின் அபிவிருத்தி, பிள்ளைகளின் கல்வி போன்றன குறித்து அரசாங்கம் கூடுதல் கவனம் செலுத்த வேண்டுமென முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வாரியபொல பென்னிதவ ஸ்ரீ விமல பௌத்த மத்திய நிலையத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் இந்தக் கருத்துக்களை அவர் வெளியிட்டுள்ளார். (இ-5)

## இனவாதத்தைக் கட்டவிழ்த்து விடுவதில் ஞானசாரதேரரை வென்றுவிட்டார் மகிந்த

### சிறிதுங்க ஜயசூரிய தெரிவிப்பு

முன்னாள் ஜனாதிபதி மகிந்த காவி அணியாத பிக்குவாகி விட்டமையினால் இனவாதத்தினை கட்டவிழ்த்து விடுவதனாலும் ஞானசார தேரரையும் மிஞ்சிவிட்டார் என ஐக்கிய சோசலிஷ கட்சியின் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய தெரிவித்தார்.

வித்தியாவின் கொலையானது சிறுபான்மையினரை சில அரசியல்வாதிகள் இன்னும் அடிமைகளாகவே நடத்த முயற்சித்து வருகின்றனர் என்பதையே எடுத்துக்காட்டுகிறது எனவும் தெரிவித்தார்.

வெள்ளவத்தை தமிழ்ச் சங்கத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வித்தியாவுக்கான மலரஞ்சலி செலுத்தும் நிகழ்வில் பங்கேற்று உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், புங்குடுதீவு மாணவி வித்தியா கொடூரமாக கொலை செய்யப்பட்டமையினால் நாட்டின் அனைத்து இன மக்களும் மனம் நொந்து போயுள்ளனர்.

ஆனால் முன்னாள் ஜனாதிபதி மகிந்த இதனை அரசியலாக்கி விட்டது மட்டுமல்லாமல் இனவாதத்தையும் தோற்றுவிக்க முயற்சித்து வருகின்றார்.

வித்தியாவுக்கு நேர்ந்த கொடூரத்தினை சகித்துக்கொள்ள முடியாத காரணத்தினால் யாழ். மக்கள் தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தியதாலேயே யாழில்கலவரம்உண்டானது.

இதனை முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய காவி அணியாத பிக்குவுமான மகிந்த ராஜபக்ஷ தனது அரசியல் தேவைக்காக மீண்டும் ஆயுத குழுக்கள் உருவாகப் போகிறன என்று தெரிவித்துள்ளார்.

இப்போது அவர்விஹாரைகளையே தனது வசிப்பிடமாக்கிக் கொண்டுள்ளார். அதனால் வெள்ளைச் சாரம் அணிந்த துறவியாகவும் இனவாதத்தினை கட்டவிழ்த்து விடுவதனாலும் மகிந்த ஞானசார தேரரையும் மிஞ்சி விட்டார்.

இதுபோன்று தான் 2009 ஆம் ஆண்டு யாழ்.மக்களின் நினைவேந்தலுக்கு மகிந்த தடை விதித்தார். அது முற்றிலும் தவறான செயற்பாடாகும். வீரர்கள் உருவாவது மக்கள் மனங்களில் மட்டுமேயாகும். மாறாக நாட்டின் ஜனாதிபதி பரிந்துரை செய்கின்றவரை வீரனாக ஏற்றுக்கொள்ள முடியாது.

அதேவேளை வடக்கின் இனவாதம் பற்றி பேசுகின்ற முன்னாள் ஜனாதிபதி மகிந்த, தெற்கில் அவரின் ஆதரவு கூட்டணிகள் கட்டவிழ்த்து விடும் இனவாதம் பற்றி ஒரு போதும் பேசுவதில்லை.

அத்துடன் வித்தியாவின் கொலை சம்பவத்தை அரசியலாக்கும் மகிந்த போன்ற இனவாத அரசியல்வாதிகளின் நோக்கம் சிறுபான்மை இனங்களை தொடர்ந்தும் அடிமைகளாக வைத்திருப்பது என்பதையே காண்பிக்கிறது.

எவ்வாறாயினும் அரசாங்கம் வடக்கு, தெற்கின் நல்லிணக்கத்துடன் முன்செல்லும் முயற்சியை முன்னெடுக்க வேண்டும். அத்துடன் மகிந்த போன்ற இனவாத தரப்புக்களுக்கு இனி ஒருபோதும் தேர்தலில் போட்டியிட ஜனாதிபதி இடமளிக்கக் கூடாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## ஐக்கிய தேசியக் கட்சியே தேர்தலில் வெற்றியீட்டும்

### கெஹலிய ரம்புக்வெல ஆரூடம்

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி நிச்சயம் வெற்றியீட்டும்என முன்னாள் ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். தேர்தல் வெற்றியின் பின்னர் அரசாங்கம் அமைக்க சிறு கட்சிகளின்ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள வேண்டும். அரசியல் கசந்து விட்டது.

எதிர்காலத்தில் எவ்வாறான தீர்மானம் ஒன்றை எடுக்க வேண்டும் என்பதனை நான் இன்னமும் முடிவு செய்யவில்லை என அவர் கொழும்பு பத்திரிகை ஒன்றுக்கு நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொள்ளுமாறு தமக்கு அழைப்பு விடுக்கப்பட்டதாகவும்தாம்அந்த அழைப்பினை நிராகரித்ததாகவும்அண்மையில் கெஹலிய குறிப்பிட்டிருந்தார்.

எனினும், இந்த கருத்து பிழையானது எனவும், மூன்று தடவைகள் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொள்ள கெஹலிய முயற்சித்த போதிலும் அதற்கு இடமளிக்கப்படவில்லை என கட்சியின் பொதுச் செயலாளர் கபீர் ஹாசீம் தெரிவித்திருந்தார். ஜனாதிபதி தேர்தலின் பின்னர் பிரதமரை சந்தித்து கட்சியில் இணைந்து கொள்ளுமாறு கெஹலிய கோரியிருந்தார் என கபீர் ஹாசீம் தெரிவித்திருந்தார்.

இதேவேளை, இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் பெருந்தொகை இரும்புக் கம்பிகளை சட்ட விரோதமான முறையில் விற்பனை செய்ததாக கெஹலிய மீது குற்றம் சுமத்தி வழக்குத் தொடரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## மகிந்த பௌத்த விஹாரைகளை அரசியல் மேடையாக்கி வருகிறார்

### ஜே.வி.பி.குற்றச்சாட்டு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பௌத்த விஹாரைகளை அரசியல் மேடையாக்கி வருவதாக ஜே.வி.பி.யின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தங்காலையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டமொன்றில் பங்கேற்று உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்தார்.

மகிந்த ராஜபக்ஷ ஐயா தற்போது விஹாரைகள் நோக்கி அரசியலை நகர்த்தி வருகின்றார். எமக்குத் தெரியும் விஹாரைகள் அரசியல் பேதமற்ற ஓர் பொது இடமாகும்.

அனைவரும் விஹாரையின் பீடாதிபதியிடம் சென்று கட்சி பேதமின்றி ஆலோசனை பெற்றுக்கொள்வர். அனைவரும் அதே விஹாரையிலேயே போதி பூஜை வழிபாடுகளை செய்வார்கள்.

எனினும் இன்று மகிந்த ராஜபக்ஷ என்ன செய்து வருகின்றார்? நாட்டின் அரசியலை மிகவும் அழுக்கான ஓர் நிலைக்கு இட்டுச்செல்கின்றார்.

பௌத்த விஹாரையில் போதனை செய்யும் மகிந்த அரசியல் மடுவமாக மாற்றியுள்ளார், மகிந்தவின் இந்த நடவடிக்கைகளுக்கு நாட்டின் அனைத்து மக்களும் எதிர்ப்பை வெளியிட வேண்டுமென அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (இ-5)

## பிரிவுத்துயர் பகிர்வு

### திருமதி நடராஜா தங்கபூபதி



சங்கானை நாகலிங்கம் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா தங்கபூபதி கடந்த 2ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப.11மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் சங்கானை கரைச்சி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### கந்தையா கனகலிங்கம்



கல்வியங்காட்டை பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கனகலிங்கம் கடந்த 27ஆம் திகதி புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### திருமதி சதாசிவம் இராசமணி



அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் இராசமணி கடந்த 27ஆம் திகதி புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை காலை 9.30 மணி தொடக்கம் மு.ப 11.30 மணிவரை Chapel Ridge Funeral Home, 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada என்னும் முகவரியில் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும்.

### திருமதி ஜேசுதாசன் புஸ்பராணி



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி, லண்டன் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட ஜேசுதாசன் புஸ்பராணி கடந்த 28ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் திருப்பலி எதிர்வரும் புதன்கிழமை 03ஆம் திகதி நண்பகல் 12 மணி தொடக்கம் பி.ப 1.30 மணிவரை St.Peters Church, Shelley Rd, Hove, BN3 5FQ, United Kingdom என்னும் முகவரியில் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும்.

### செல்லமுத்து விஜயரத்தினம்



பிரான்பற்றைப் பிறப்பிடமாகவும் கனடா Toronto ஐ வசிப்பிடமாகவும் கொண்ட செல்லமுத்து விஜயரத்தினம் கடந்த 28ஆம் திகதி வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியை எதிர்வரும் புதன்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் மு.ப11.30 மணிவரை Chapel Ridge Funeral Home, 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூத வுடல் தகனம் செய்யப்படும்.

### திருமதி இராமலிங்கம் ஞானலட்சுமி



சண்டிலிப்பாய் சீரணியைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் ஞானலட்சுமி கடந்த 28ஆம் திகதி வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை நண்பகல் 12 மணியளவில் Werrenweg 71543, Neuhutten, Germany என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல்தகனம் செய்யப்படும்.

### திருமதி பாலசிங்கம் அன்னலட்சுமி



ஆனைப்பந்தியைப் பிறப்பிடமாகவும் லண்டன் Harrow ஐ வசிப்பிடமாகவும் கொண்ட பாலசிங்கம் அன்னலட்சுமி கடந்த 26ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை திங்கட்கிழமை பி.ப.1 மணி தொடக்கம் பி.ப3 மணி வரை J A Massey & Sons Funeral Directors, 142 Stati on Rd, London HA1 2RH, United Kingdom என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களுக்கு எதிரான அநீதி இலங்கையில் குறையவேயில்லை

## கருணாநிதி கவலை

(சென்னை)

**இலங்கையில் ஜனாதிபதி மாறியும் தமிழர்களுக்கு எதிரான அநீதி குறைய வில்லை. அங்கே ஆட்சி மாறியது; ஆனால் காட்சி மாறியதா? என்று தி.மு.க.தலைவர் கருணாநிதி கேள்வி எழுப்பியுள்ளார்.**

இதுகுறித்து நேற்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "இலங்கையின் புதிய ஜனாதிபதியாகப் பதவியேற்ற மைத்திரிபால சிறிசேன டில்லிக்கு வந்து இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை சந்திக்கவிருந்த வேளையில், நான் இந்தியப் பிரதமருக்கு 13-02-2015 அன்று விரிவான கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தேன்.

அந்தக் கடிதத்தில், "இலங்கையில் வாழும் தமிழர்களின் பேராதரவைப் பெற்றே மைத்திரிபால சிறிசேன, 2015 ஜனவரி மாதம் நடைபெற்ற தேர்தலில், இலங்கை ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார். தாங்கள் நீண்ட நெடுங்காலமாக அனுபவித்து வரும் அரசியல் சட்டத்திற்குப் புறம்பான பாகுபாடு மற்றும் மனிதநேய மின்மை ஆகியவற்றை முடிவுக் குக் கொண்டு வருவார் என்று பெரிதும் நம்பியே



இலங்கைத் தமிழர்கள் மைத்திரி பாலசிறிசேனவுக்கு விரும்பி வாக்களித்தார்கள்.

இலங்கையில் தமிழர்கள் வாழும் பகுதிகளில் இராணுவ ஆக்கிரமிப்பு தொடர்ந்து நீடித்து வருகிறது என்றும், ஆறு தமிழர்களுக்கு ஒரு இராணுவ வீரர்என்ற வகையில் சுமார் 1.60 இலட்சம் இராணுவ வீரர்கள் அங்கு தங்கியிருக்கின்றனர் என்றும் அந்த ஆய்வு தெரிவித்துள்ளது.

தமிழர்களிடமிருந்து பறிக்கப்பட்ட நிலங்கள் அவர்களிடம் திருப்பி ஒப்படைக்கவில்லை என்றும், அந்த நிலங்களை இராணுவ நிர்வாகம் வியாபார நோக்கில் பயன்படுத்தி வருவதாகவும் அந்த அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

மேலும், தமிழர் பகுதிகளில் போர் நினைவு வெற்றிச் சின்னங்களும், புத்த மடாலயங்களும் அமைக்கப் பட்டு வருவதோடு, தமிழர்களின் கலாசாரத்தை அழிப்பதற்குப் பல்வேறு வகைகளிலும் முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு வருவதாகவும் அந்த ஆய்வறிக்கை சுட்டிக்காட்டுகிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக, இறுதிப் போரின்போது மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்படும் 57வது படைப்பிரிவின் தளபதி ஜகத் டயஸ் என்பவர் இராணுவத் தலைமை அதிகாரியாகத் தற்போது நியமிக்கப்பட்டிருப்பது புதிய அரசின் நம்பகத்தன்மையை கேள்விக்குறியாக்கியுள்ளது என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நான் ஏற்கனவே இந்தியப் பிரதமருக்கு அனுப்பியிருந்த கடிதத்தில் விரிவாகச் சுட்டிக்காட்டியவாறு, உடனடியாக நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட வேண்டும்என்று மீண்டும்மீண்டும் வலியுறுத்துகிறேன். இப்போது வெளிவந்துள்ள ஆக்லேண்டு ஆய்வு அறிக்கை இலங்கையில் ஜனாதிபதி மாறியும் தமிழர்களுக்கு எதிரான அநீதி குறையவில்லை என்பதையே எடுத்துக்காட்டுகிறது. அங்கே ஆட்சிமாறியது ஆனால் காட்சிமாறியதா?" என் கருணாநிதி தெரிவித்துள்ளார். (இ-5)

# சவுதி அரேபியாவில் மீனவர் சுட்டுக்கொலை

## கடற்கொள்ளையர்கள் வெறிச்செயல்

(ரியாத்)

சவுதி அரேபியாவின் கடல் எல்லையில் மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர் ஒருவர் கடற்கொள்ளையர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

கன்னியாகுமரி மாவட்டம் பொழிகரையைச் சேர்ந்த மதிவளன் என்ற மீனவர் மீன்பிடி தொழில் செய்ய சவுதி சென்றிருந்தார்.

கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது கடற்கொள்ளையர்களால் மதிவளன் சுட்டுக் கொல்லப்பட்டதாக அவரது குடும்பத்துக்கு தகவல் கிடைத்துள்ளது.

அவரது உடலை தாயகம்கொண்டு வர மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவரது உறவினர்கள் கண்ணீர் மல்க கோரிக்கை வைத்துள்ளனர். (இ-5)

# பாகிஸ்தானில் கடத்தப்பட்ட 19பயணிகள் சுட்டுக்கொலை

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில் தீவிரவாதிகளால் கடத்தி செல்லப்பட்ட 19 பயணிகள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

தீவிரவாதிகள் ஆதிக்கம் நிறைந்த மாஸ்டங் மாவட்டம் குவேட்டாவில் இருந்து கராச்சிக்கு நேற்று இரவு இரண்டு பேருந்துகள் சென்று கொண்டிருந்தன. காத்கோசாய் என்ற இடத்தில் அந்த பேருந்துகளை வழிமறித்த தீவிரவாதிகள் துப்பாக்கி முனையில் கடத்தினர். சுமார் 35 பேர் வரை கடத்தி செல்லப்பட்டிருக்கலாம் என்றும், அவர்களில் 19 பேரை சுட்டுக் கொன்றுள்ளதாகவும் உள்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்த கடத்தல் சம்பவம் பற்றி தகவல் அறிந்ததும் பாதுகாப்பு படையினர் சம்பவ இடத்திற்குச் சென்று தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர். அங்கு தீவிரவாதிகளுடன் கடும் துப்பாக்கிச் சண்டை நடந்து வருகிறது.

பலத்த பாதுகாப்புடன் அம்புலன்ஸ் வாகனங்களும் மீட்புக் குழுவினரும் சம்பவ இடத்திற்குச் சென்றுள்ளனர். அருகில் உள்ள மலைப் பகுதியில் கிடக்கும் உடல்களை மீட்கும் பணி நடைபெற்று வருகிறது. (இ-

# இலங்கைத்தமிழர் பிரச்சினையில் மௌனம் கலைக்கப்பட வேண்டும்

## இந்திய அரசிடம் வேல்முருகன் கோரிக்கை

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் மத்திய அரசு மௌனம் கலைத்து, சிங்களப் பேரினவாதத்துக்கு கடிவாளம் போடும் வகையிலும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் வேல் முருகன் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து நேற்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,"இலங்கையில் 2009ஆம் ஆண்டு ஒன்றரை இலட்சம்ஈழத்தமிழர்படுகொலை செய்யப்பட்டு 6 ஆண்டுகளுக்குப் பின்னரும் தமிழருக்கு எதிரான மௌன யுத்தம் நீடிக்கிறது என்று அமெரிக்காவின் ஆக்லாந்து கல்வி நிறுவன வல்லுநர்கள் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

ஆக்லாந்து கல்வி நிறுவனத்தின் அறிக்கையில் இலங்கையில் இன்னமும் ஈழத் தமிழர்கள் எவ்வாறெல்லாம் ஒடுக்குமுறைக்குள்ளாகி வருகிறார்கள் என்பது அம்பலப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழர் தாயகப் பிரதேசங்களில் 6 பேருக்கு ஒரு சிங்கள இராணுவ சிப்பாய் நிறுத்தப்பட்டுள்ளதையும் தமிழர் பிரதேசங்களில் வலுக்கட்டாயமாக சிங்கள குடியேற்றங்கள் அமைக்கப்பட்டுள்ளதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தமிழரது பாரம்பரிய கலாசார சின்னங்கள் சூறையாடப்பட்டு சிங்கள பேரினவாத அடையாளங்களான பௌத்த விகாரைகள் நிறுவப்பட்டு வருவதையும் அந்த அறிக்கை வெளிப்படுத்தியுள்ளது.

அத்துடன் மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள் தொடர்பாக நட்வடிக்கை எடுப்போம் என்று கூறிக் கொண்டே தற்போதைய இலங்கை ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன, சர்வதேச சமூகத்தை எப்படியெல்லாம் ஏமாற்றுகிறார் என்பதையும் ஆக்லாந்து நிறுவன ஆய்வறிக்கை பட்டவர்த்தனமாக போட்டுடைத்துள்ளது.

உச்சக்கட்டமாக இலங்கையில் தமிழர் உள்ளிட்ட சிறுபான்மையினருக்கு எதிரான மௌன யுத்தம் தொடர்கிறது என்றே ஆக்லாந்து கல்வி நிறுவன வல்லுநர்கள் பகிரங்கமாக குற்றம்சாட்டியுள்ளனர்.

அமெரிக்காவின் கல்வி நிறுவன ஆய்வாளர்கள் உட்பட சர்வதேச சமூகத்தின் மனச்சாட்சி கொண்ட மனித நேயம் மிக்க மனித உரிமை ஆர்வலர்கள் அனைவருமே இலங்கையில் 2009ஆம் ஆண்டுக்கு பின்னர் யுத்தம் என்ற ஒன்றுதான் நடைபெறவில்லையே தவிர மற்ற அனைத்து ஒடுக்குமுறைகளும் அப்படியே நீடிப்பதாகவே கூறிவருகின்றனர்.

ஆனால் இந்தியப் பேரரசு மட்டுமே இலங்கையிலே அமைதி திரும்பிவிட்டது. ஈழத் தமிழருக்கு சுபீட்சம் கிடைத்துவிட்டது என்று பொய் பிரசாரங்களை கட்டவிழ்த்து விட்டு உலகத் தமிழினத்தை ஏமாற்றி வருகிறது.

இத்தகைய தமிழினத் துரோகத்தையும் ஈழத் தமிழர் நிலை தொடர்பான கள்ள மௌனத்தையும் கலைத்துவிட்டு இலங்கைத் தமிழ் மண்ணில் சிங்களப் பேரினவாதம் தொடர்ந்து அரங்கேற்றி வரும் ஒடுக்குமுறைகளை வன்மையாகக் கண்டிக்கும் வகையிலும் சிங்களப் பேரினவாதத்துக்கு கடிவாளம் போடும் வகையிலும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்" என்று வேல்முருகன் தெரிவித்துள்ளார். (இ-5)

# புலம்பெயர்ந்து சென்ற 727 பேரை கைதுசெய்த மியன்மார் கடற்படை



நடுக்கடலில் படகின் மூலம் புலம்பெயர்ந்து சென்று கொண்டிருந்த 727 பேரை மியன்மார் கடற்படை கைது செய்துள்ளது.

மியன்மாரில் இருந்து ரோகிங்யா முஸ்லிம் இனத்தவர்கள் இந்தோனேசியா மற்றும் மலேசியாவிற்கு கடல் வழியாக குடிபெயர்ந்து செல்கிறார்கள். அவ்வாறு செல்லும் நபர்களை அகதிகளாக ஏற்க அந்த நாடுகள் மறுக்கிறது. இதனால் அதில் உள்ள மக்கள் உணவு, குடிநீர் இன்றி நடுக்கடலிலேயே சாகும் நிலைக்கு தள்ளப்படுகிறார்கள். இவ்வாறு சுமார் 3500 பேர் நடுக்கடலில் தத்தளித்து வருவதாக கூறப்படுகிறது.

இவர்களை மீட்க மலேசியா மற்றும் இந்தோனேசியா அரசுகள் முடிவு செய்து நடுக்கடலில் கப்பல் மூலம் தேடிவருகிறார்கள். இவர்களுடன் மியன்மார் கடற்படையும் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டு வருகிறது.

இவர்கள் நேற்று முன்தினம் காலை சுமார் 727 பேர் நடுக்கடலில் சென்று கொண்டிருந்ததை பார்த்து உடனே கைது செய்தனர். இவர்கள் அனைவரும் மியன்மாரின் வடக்குப் பகுதியில் உள்ள ரஹினே மாநிலத்தைச் சேர்ந்த ரோகிங்கியா முஸ்லிம் இனத்தவர்கள் அல்லது வறுமையின் காரணமாக பங்களாதேசில் இருந்து வந்தவர்களாக இருக்கலாம் எனக் கூறப்படுகிறது.

727 பேர்களில் 608 ஆண்களும், 74 பெண்களும், 45 குழந்தைகளும் அடங்குவர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரே ஒரு சட்டம்தான் உண்டு. தன்னை உணர்ந்து கடமை உணர்வுடன் ஒவ்வொருவரும் வாழ்வதே உண்மையான சட்டம். – சத்யசாயிபாபா

வலம்புரி

T.P : 021 567 1530

website : www.valampurii.lk

# புங்குடுதீவில் பொலிஸ் நிலையத்தை அமைக்க முடியாதது ஏன்?

புங்குடுதீவில் மாணவி வித்தியா படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை அடுத்து புங்குடுதீவில் பொலிஸ் நிலையம் அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலுத்து வருகிறது.

புங்குடுதீவில் ஏதாவது பிரச்சினை இடம்பெற்றால் அந்தப் பிரச்சினை தொடர்பில் நடவடிக்கை எடுக்க ஊர்காவற்றுறையில் இருக்கின்ற பொலிஸாரே வரவேண்டும். புங்குடுதீவுக்கும் ஊர்காவற்றுறைக்கும் குறைந்தது 25 கிலோ மீற்றர் தூரம் இருக்கும்.

25 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள பொலிஸாரிடம் சென்று முறையிடுவது என்பது மிகக் கடினமான காரியம். பொலிஸ் சேவை என்பது மக்களுக்கு உடனடியாகக் கிடைக்க வேண்டும். அப்போது தான் பிரச்சினைகளிலிருந்து மக்களைக் காப்பாற்ற முடியும். ஆனால் புங்குடுதீவைப் பொறுத்தவரை பொலிஸாரின் சேவையைப் பெறுவது கடினமானது என்ற உண்மை மாணவி வித்தியாவின் கொலையுடன் தெரியவந்துள்ளது.

அதிலும் தீவகம் மிக நீண்ட இடப்பெயர்வுக்குப் பின்னர் மீளக்குடியமரப்பட்ட பிரதேசம். அடிப்படை வசதிகளை அரசு இன்னமும் செய்து கொடுக்கவில்லை. இந் நிலையில் அங்கு மீளக்குடியமர்ந்த மக்களின் பாதுகாப்பு என்பது கேள்விக்குறியாகியுள்ளது.

மாணவி வித்தியாவின் படுகொலைக்கு முன்னதாக புங்குடுதீவில் சாரதாம்பாள், தர்சினி, நகுலா என்ற இளம் பெண்களும் மர்மமான முறையில் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

நிலைமை இதுவாக இருக்கையில், புங்குடுதீவில் பொலிஸ் நிலையத்தை தற்போது அமைக்க முடியாது என வடக்கு மாகாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் லலித் ஏ.ஜயசிங்க கூறியுள்ளார்.

புங்குடுதீவில் சட்டத்தை மதிக்காத மிக மோசமான கும்பல் ஒன்று உள்ளது. இந்தக் கும்பல் பொலிஸாரையும் தாக்கியுள்ளது. எனவே புங்குடுதீவில் பொலிஸ் நிலையத்தை அமைக்க முடியாது என சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கூறியிருப்பது இங்கு வேடிக்கைக்குரியது. எந்த இடத்தில் சட்டத்தை மதிக்காத கும்பல் இருக்கிறதோ அங்குதான் பொலிஸ் நிலையம் இருக்க வேண்டும்.

சட்டத்தை மதிக்காத கும்பல்களை அடக்குவது தான் பொலிஸாரின் பணி. இதை விடுத்து புங்குடுதீவில் சட்டத்தை மதிக்காத கும்பல் ஒன்று உள்ளது. அதனால் இப்போது புங்குடுதீவில் பொலிஸ் நிலையத்தை ஆரம்பிக்க முடியாது எனக் கூறுவது, எந்தளவு தூரம் நியாயமானது என்பதை பொலிஸ் மேலாண்மை தான் உணர்ந்து கொள்ள வேண்டும்.

சட்டத்தை மதிக்காத கும்பல்கள் இருக்கின்ற இடங்களில் வாழ்கின்ற மக்கள் எவ்வளவு கஷ்டங்களை எதிர்நோக்குவர் என்பதை உணராமல், பொறுப்பான பதவியில் இருப்பவர்கள் பொறுப்பற்றுக் கதைப்பது அவ்வளவு நல்லதல்ல.

முன்பும் ஒரு தடவை புங்குடுதீவு விடயத்தில் வடக்குமாகாண சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தான் பொய் சொன்னதாக தெரிவித்திருந்தார். பொது மக்களுக்கு உத்தரவாதம் வழங்கிவிட்டு சந்தர்ப்பத்திற்குப் பொய் சொன்னேன் என்று கூறினால் இன்னொரு தடவை பொலிஸ் அத்தியட்சகரின் உறுதி மொழியை பொதுமக்கள் நம்புவரா என்ன?

எனவே புங்குடுதீவில் பொலிஸ் நிலையம் கட்டாயமாக அமைக்கப்பட வேண்டும். இது தொடர்பில் வடக்கு மாகாண அரசு ஜனாதிபதி மைத்திரியுடன் தொடர்புகொண்டு நடவடிக்கை எடுப்பது அவசியம்.

# மகிந்த தலைமையில் 3 ஆவது அணி தேர்தலில் போட்டியிடத் திட்டம்

(கொழும்பு)

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் மூன்றாவது அணியொன்றை போட்டியிட வைக்க தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அத்துடன், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் பெருமளவான நாடாளுமன்ற உறுப்பினர்களை இந்த அணியில் இணைத்துக் கொள்ளவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக இத்தகவல்கள் குறிப்பிடுகின்றன.

அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் பலமான கூட்டணியாக போட்டியிடும் நோக்கில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்கள், ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆகியோருடன் கடந்த தினங்களில் பேச்சுக்களை நடத்தியிருந்தனர்.

இந்நிலையில் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவை பிரதான வேட்பாளராக களமிறக்குவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உடன்படாத நிலையிலேயே, மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவான அணியினர் இந்த முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளில் பெரும்பான்மையான கட்சிகள் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை ஆதரித்து வரும் நிலையில், அவர்களின் தலைமையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் பலரையும் ஒன்றிணைத்து மூன்றாவது அணியாக நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்வது தொடர்பிலேயே இந்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

முன்னாள் ஜானதிபதி மகிந்த ராஜபக்ஷவை அவரின் ஆதரவு அணியினர் நேற்று முன்தினம் அபயராம விகாரையில் வைத்து சந்தித்த போதே இதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டதாக கூறப்படுகின்றது.

இவ்விடயம் தொடர்பில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் மூத்த தலைவர்களும் உறுதிப்படுத்தியதாக கொழும்பு ஊடக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (எ-11)

# மீள்குடியேற்றப் பகுதிக்குச் செல்ல சம்பூர் மக்களுக்கு தடை விதிப்பு

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டம் சம்பூர் பிரதேசத்தில் மீள்குடியேற்றத்திற்காக விடுவிக்கப்பட்டதாக கூறப்படும் காணிகளுக்குள் வெளியார் நுழைவதற்கு பொலிஸாரால் தடை விதிக்கப்பட்டுள்ளது.

தமது மீள்குடியேற்றத்தை எதிர்பார்த்து தமது காணிகளை துப்புரவு செய்த காணிகளின் உரிமையாளர்களும் தற்காலிக கொட்டில்களை அமைத்து அங்கு தங்கியிருந்தவர்களும் வெளியேற்றப்பட்டுள்ளார்கள்.

குறித்த காணி தொடர்பான வழக்கொன்று உயர் நீதிமன்றத்தில் தற்போது விசாரணையில் இருப்பதே இதற்கு காரணம் என கூறப்படுகின்றது.

காணிக்குள் நடமாடும் வெளியாரை வெளியேற்றுமாறு நீதிமன்ற அறிவித்தல் தங்களுக்கு கிடைத்துள்ளதாக தெரிவித்தே பொலிஸார் வெளி யேறுமாறு கேட்டுக்கொண்டதாக சம்பூர் மக்கள் கூறுகின்றார்கள்.

இதன் காரணமாக கடந்த ஒரு வார காலமாக அந்தப் பகுதிக்குள் துப்புரவு பணிகளில் ஈடுபட்டிருந்தவர்களும் தற்காலிக கொட்டில்களில் தங்கியிருந்தவர்களும் அங்கிருந்து வெளியேறிவிட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பதவிக் காலத்தில் இவர்களது குடியிருப்பு காணிகள் உட்பட அந்த பிரதேசத்திலுள்ள சுமார் ஆயிரத்து 100 ஏக்கர் நிலம் அரச முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்திற்காகவும் கடற்படை பயிற்சி முகாமிற்கும் சுவீகரிக்கப்பட்டிருந்தது.

குறித்த காணிகளில் முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்திற்கு சுவீகரிக்கப்பட்டிருந்த 818 ஏக்கர் நிலம் மீள்குடியேற்றத்திற்காக ஜனாதிபதியினால் இம்மாதம் வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தலின் பேரில் விடுவிக்கப்பட்டிருந்தது.

குறித்த காணிகள் இதுவரை அதிகாரபூர்வமாக அரசாங்கத்தினால் காணிகளின் உரிமையாளர்களிடம் கையளிக்கப்படவில்லை.

இருந்த போதிலும் காணிகளின் உரிமையாளர்கள் விரைவாக மீள்குடியேற்றம் இடம்பெறும் என்ற நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் கொண்டு, சுயமாகவே சென்று காணிகளை துப்புரவு செய்யும் பணிகளில் ஈடுபட்ட அதே வேளை, சிலர் தற்காலிக கொட்டில்கள் அமைத்து தங்கியும் இருந்தனர்.

முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தில் முதலீடு செய்வதற்கு தயாராகவிருந்த நிறுவனமொன்று இதற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனு எதிர்வரும் 16-ம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (எ-11)

# 9 ஆண்டுகளில் 5626 படையினருக்கு நீதிமன்றம் ஊடாக தண்டனை விதிப்பு

(கொழும்பு)

கடந்த ஒன்பது வருடங்களில் 5 ஆயிரத்து 626 படையினருக்கு இராணுவ நீதிமன்றின் ஊடாக தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

2006-ம் ஆண்டு முதல் 2015-ம் ஆண்டு வரையிலான காலப் பகுதியில் பல்வேறு ஒழுக்க மீறல்களில் ஈடுபட்டவர்களுக்கு இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.


இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டவர்களில் படைத்தரப்பைச் சேர்ந்த 421 உயர் அதிகாரிகளும் உள்ளடங்குகின்றனர்.

குறித்த காலப்பகுதியில் இராணுவ நீதிமன்றின் ஊடாக 5 ஆயிரத்து 205 படைச் சிப்பாய்கள் தண்டிக்கப்பட்டுள்ளனர்.

இறுதிக் கட்ட யுத்தம் இடம் பெற்ற 2009ம் ஆண்டில் 184 அதிகாரிகள் தண்டிக்கப்பட்டுள்ளனர்.

2006-ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 18-ம் திகதி காலி துறைமுகம் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலை முறியடிக்கத் தவறிய குற்றச்சாட்டின் பேரில் அப்போதைய உயர் கடற்படை அதிகாரி [illegible]டிஸிற்கும் இராணுவ நீதிமன்றின் ஊடாக தண்டனை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## ஸ்ரீஜெயநீராவி வீரகத்தி விநாயகர் ஆலயம்
## (நீராவியடி-யாழ்ப்பாணம்)



ஒன்பதாம் நாள் (சப்பறம்)

சப்பறத்திலே எழுந்தருளி வரும் ஞானமுதல்வனே!
உனைக்காண வேண்டும் கோடி கண்கள்!
விக்கினங்கள் போக்கி வைக்கும் நீராவி விநாயகனே!
வேதனைகள் நீக்கியே அருள்புரிய வேண்டுமையா!
ஆறுமுகனின் அண்ணனே! சங்கரன் மகனே!
வேண்டும் வரம் தந்திடுவாய் ஆனைமுகனே!
உனைநாடி வந்தோமே சப்பறக் காட்சி கண்டிட
கணபதியே கரிமுகனே கருணை காட்டும் ஐயனே!

பீ.இராகுலன்
பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திரபோலின் சாதனையை தடுத்த மேற்கிந்திய கிரிக்கெட் சபை




உலகிலேயே கிரிக்கெட் ஆரம்பித்த காலத்தில் சர்வதேச கிரிக்கெட்டினை தனது கட்டுப் பாட்டுக் குள் வைத்திருந்த ஜாம்பவான்கள் யார் என்று கேட்டால் நிச்சயம் மேற்கிந்திய தீவு அணியினர் என்று சொன்னால் அதனை யாராலும் மறுக்கவே முடியாது.

உலக கிண்ண கிரிக்கெட் முதல் முதலில் 1975 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட் டுள்ளது. உலகக்கிண்ண கிரிக்கெட் ஆரம் பிக்கப் பட்ட முதல் இரண்டு உலகக் கிண்ணத்தி னையும் மேற்கிந் திய தீவுகள் அணி யினரே கைப் பற்றினர். 1975 மற்றும் 1979 ஆம் ஆண்டுகளில் கிளைவ் லொயிட் தலைமையில் அக் கிண்ணத்தினை கைப்பற்றினர்.

கிரிக்கெட்டின் தாயகம் இங்கி லாந்தாக இருந்தாலும் மேற்கிந்திய தீவுகளே உலக கிரிக்கெட்டினை ஒரு காலத்தில் கட்டியாண்டனர். கால மாற்றத்தில் மேற்கிந்திய தீவுகளின் ஆட்டமும்களை இழந்தது.

ஒருவாறாக 8 ஆவது ஐ.பி.எல். தொடரும் முடிவுக்கு வர தற்போது உலகக் கிண்ண கிரிக்கெட் அரங்கில் அனைவராலும் பேசப்பட்டு வரும் ஒன்று சிவநராயண் சந்திரபோலின் ஓய்வு பற்றித்தான்.

## யார் இந்த சந்திர போல்?

21 ஆண்டுகளாக மேற்கிந்திய கிரிக்கெட்டுக்கு தடுப்புச் சுவராக விளங்கியவர்தான் இந்த சந்திரபோல்.

அவுஸ்திரேலிய கிரிக்கெட்-அணி மேற்கிந்திய தீவு களில் சுற்றுப்பய ணம் மேற்கொண் டுள்ளது.

ஜூன் மாதம் 3 ஆம் திகதி முதல் டெஸ்ட் போட்டி ஆரம்பமாகின்றது.

மேற்கிந்திய தீவுகள் அணியில் இடம் கிடைக்கும் என அந்த அணியின் முன்னணி வீரர் சிவநராயண் சந்திரபோல் நம்பி இருந்தார்.ஆனால் கிளைவ் வாயிட் தலைமையிலான மேற் கிந்திய தீவுகளின் கிரிக் கெட் தேர்வுக் குழுவினர் சந்திர போலை தேர்வு செய்யவில்லை. கிளைவ் வாயிட் இது குறித்து சந்திரபோலுக்கு தெரிவிக்கையில்,

நீங்கள் கடைசியாக விளையாடிய தென்னாபிரிக்கா, இங்கிலாந்து அணிகளுக்கு எதிரான 6 டெஸ்ட்களில் 183 ஓட்டங்கள் எடுத்துள்ளதால் தங்களுடைய நிலை கருதி உங்களை அணியில் சேர்க்க இயலவில்லை. அணியின் எதிர்கால நலனை கருத்தில் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இளம் வீரர்களுக்கு வாய்ப்பளி க்கவேண்டிய அவசியம் எங்களுக்கு இருக்கின்றது என்று தெரிவித்துள்ளார்.

மேற்கிந்திய தீவு அணிக்காக டெஸ்ட்போட்டியில் அதிக ஓட்டங்கள் குவித்த வீரர்களில் லாரா முதலி டத்திலுள்ளார்.

இவர் 11 ஆயிரத்து 953 ஓட்டங்கள் குவித்துள்ளார்.

சந்திரபோல் மேற்கிந்திய தீவுகள் அணிக்காக டெஸ்ட்போட்டியில் அதிக ஓட்டங்கள் குவித்த வீரர் என்ற பெருமையை பெற வெறும் 86 ஓட்டங்களே தேவை.

இந்நிலையில் இவர் மேற்கிந்திய தீவுகள் அணியில் சேர்க்கப்படாமை பெரும் சர்ச்சையாக மாறியுள்ளது.

சந்திரபோல் லாராவின் சாத னையை தகர்க்க கூடாது என்பதற் காகத்தான் மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டதாக பல உலகக் கிண்ண கிரிக் கெட் வர்ணனையாளர்களால் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

சந்திரபோல் இந்திய வம்சா வளியை சேர் ந்தவர். ஆகவே தான் மேற்படி நடவடி க்கை எடுத்த தாகவும் தெரிகின்றது.

21 ஆண்டுகளாக மேற்கிந்திய கிரிக்கெட்டுக்கு அயராது பங்களிப்பு செய்த சந்திரபோலை அணியி லிருந்து நீக்கப்பட்டதற்கு லாராவும் தனது கண்டனத்தை தெரி வித்துள்ளார்.

அவுஸ்திரேலியா வுக்கு எதிரான தொடருடன் முடித்துக் கொள்ளும் எனது முடிப்பு அதிகபடியான கோரிக்கை அல்ல, உள்நாட்டில் என்னுடைய ரசிகர்களுக்கு நான் நன்றி சொல்லும் வாய்ப்பை கேட்கிறேன்.

மேலும் மேற்கிந்திய கிரிக்கெட் டுக்கு எனது பங்களிப்புக்காக மேற் கிந்திய கிரிக்கெட் வாரியம் எனக்கு பிரியாவிடை அளிக்கும் சாத்தியமும் இதில் உள்ளது.

என்னை ஓய்வு முடிவுக்கு தள் ளக்கூடாது எனது சொந்த மண்ணில் நான் கடைசி டெஸ்ட் போட்டியை விளையாட ரசிகர்களும் விரும் புகின்றனர். மக்கள் எனக்கு ஆதர வாக இருக்கின்றனர் என்பதை உறுதியாக நான் நம்புகிறேன் என சந்திரபோல் மேற்கிந்திய கிரிக்கெட் வாரியத்திடம் தனது கோரிக்கையை முன்வைத்தார்.

**இந்திய வம்சாவழியை சேர்ந்த சந்திர போல் மேற்கிந்தீவுகளின் சாதனை தக ர்க்க கூடாது என்ப தற்காகவே அவரை அணியில் சேர்க்கவில்லை.**

ஆனால் மேற்கிந்திய கிரிக்கெட் சபையோ தனது மறுப்பில் உங்கள் சேவை அங்கீகரிக்கப்படுகின்றது. ஆனால் இவ்வளவு ஆண்டுகள் விளையாடியது என்ற சேவைக் காலம் அணித்தேர்வுக்கான அளவு கோலாக இருக்க முடியாது.

ரசிகர்கள் மற்றும் பொதுக்கருத்து உங்களுக்கு ஆதரவாக இருக்க லாம். ஆனால் அணித் தேர்வு க்கு ஒரு அளவு கோல் இருக்கு மானால் நீங்கள் 50 வயது வரை கூட ஆட முடியும்.

ஆனால் துரதிர்ஷ் டவசமாக அதனை நாம் அளவு கோலாகஏற்றுக் கொள்ள முடியாது.

**சந்திரபோல் ஓய்வு பெறுகிறார் என்பது சந்திரபோல் அணியில் தேர்வு செய்யப்படவில்லை என்ப தனை விட மதிப்பு மிக்கது தானே?** என்று கூறியுள்ளார்

சிவநராயன் சந்திரபோல் இது வரைக்கும் மேற்கிந்திய தீவுகள் அணிக்காக 164 டெஸ்ட் போட்டி களில் விளையாடி இதுவரைக்கும் 11 ஆயிரத்து 867 ஓட்டங்கள் குவித் துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

க.மதீசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கின் நீலங்களின் சமர் கிளிநொச்சி இந்து வெற்றி




வடக்கின் நீலங்களின் சமர் கிரிக்கெட் போட்டியில் கிளிநொச்சி மத்திய கல்லூரியை வீழ்த்தி கிளிநொச்சி இந்துக் கல்லூரி சம்பியனாகியது.

வடக்கின் நீலங்களின் சமர் 2015 கடந்த 29 ஆம் திகதி ஆரம்பமாகியது.

இதில் கிளிநொச்சி இந்துக்கல்லூரி நாணய சுழற்சியில் வெற்றி பெற்று களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய கிளிநொச்சி மத்திய கல்லூரி அணியினர் 39.1 ஓவரில் 75 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தனர்.

தொடர்ந்தாடிய இந்துக் கல்லூரி அணியினர் 44.2 ஓவரில் 118 ஓட்டங்களை பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தனர்.

தொடர்ந்து நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டத்தில் களமிறங்கிய மத்திய மகா வித்தியாலயம் 21.2 ஓவர்களில் 45 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தனர்.

இதில் மத்திய மகா வித்தியாலயம் சார்பில் பிரதீப் 19 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார்.

இந்துக் கல்லூரி சார்பாக பந்து வீச்சில் பார்த்தீபன் 4 விக்கெட்டுக்களையும், அனுஷன் 4 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள்.

மூன்று ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என களமிறங்கிய இந்துவின் அணியினர் இரண்டு ஓவர்கள் நிறைவில் விக்கெட் இழப்பின்றி வெற்றி இலக்கை அடைந்து இவ்வருட வடக்கின் நீலங்களின் சமர் கிண்ணத்தை சுவீகரித்தனர்.

போட்டியின் ஆட்டநாயகனாகவும், சிறந்த பந்து வீச்சாளராகவும் கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் அனுஷனும், சிறந்த பந்து வீச்சாளராக கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் பிரதீபனும், சிறந்த களத்தடுப்பாளராக கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் கயானும் தெரிவாகினர்.

இவ் இறுதிநாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.சத்தியசீலன் கலந்து வெற்றிக்கிண்ணத்தை இந்துவின் அணித்தலைவரான செல்வன் அ.டினேஸ் அவர்களுக்கு வழங்கி கௌரவித்திருந்ததுடன், சிறப்பு விருந்தினர்களாக கே.முருகவேல், கல்விப்பணிப்பாளர், வலயக்கல்வி பணிமனை, கிளிநொச்சி மற்றும் ஆர்.நிசாந்தன், உதவி ஆணையாளர், கமநல சேவைகள் திணைக்களம் யாழ்ப்பாணம்.

மற்றும் றோய் பிரதீபன், வட மாகாண வியாபார முகாமையாளர். ஏர்டெல் நிறுவனம் மற்றும் ஏ.கேதீஸ்வரன் உதவி திட்டமிடல் பணிப்பாளர் கிளிநொச்சி மாவட்டம் போன்றோரும் கலந்து சிறப்பித்தனர். (க)
















## சாரதி விடுதலை

(கரணவாய்)

பருத்தித்துறைப் பகுதியில் இடம்பெற்ற மணற்கொள்ளை தொடர்பாககைது செய்யப்பட்ட சாரதி நேற்று பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

நேற்றையதினம் பிரஸ்தாப சாரதியை பொலிஸார் நீதிவான் மா.கணேசராஜாவின் வீட்டில் ஆஜர் படுத்தினர்.

அதன்போது நீதிவான் குற்றவாளியை பத்தாயிரம் ரூபாய் சரீரப் பிணையிலும் நாளை நீதிமன்றில் ஆஜராக வேண்டும் என்ற நிபந்தனையுடனும் விடுதலை செய்தார்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு 8.00 மணியளவில் கற்கோவளம் பகுதியில் சட்டவிரோத மணற் கொள்ளையில் ஈடுபட்ட சாரதியையும், உழவு இயந்திரத்தையும் பிரதேச இளைஞரும், சிவில் பாதுகாப்பு குழுவினரும் இணைந்து மடக்கிப் பிடித்து பருத் தித்துறை பொலிஸாரிடம் ஒப்படைத் தமை குறிப்பிடத்தக்கது. (எ-60)

## ரணிலுக்கு...

நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்படுகிறது.

எனினும் நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி மைத்திரிபாலவுக்கு பெரும்பான்மை ஆதரவு இருப்பதால் பிரதமருக்கு எதிராக கொண்டு வரப்படும் பிரேரணை 20-வது திருத்தத்தை பாதிக்காது என்று பீரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய வங்கியின் முறிக்கொள்வனவில் ஏற்பட்ட பிரச்சினைக்கு ரணில் விக்கிரமசிங்கவே முழுப் பொறுப்பையும் ஏற்கவேண்டும் என்ற அடிப்படையிலேயே இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்படவுள்ளது.

இலங்கையின் அரசியலமைப்பின் கீழ் அர்ஜுன மகேந்திரனை ரணில் விக்கிரசிங்கவினால் மத்திய வங்கியின் ஆளுநராக நியமிக்கமுடியாது என்றும் பீரிஸ் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

## பாடசாலை...

அமைச்சுக்கு தகவல்கள் கிடைத்துள்ளதாக அவர் பிபிசியிடம் கூறினார்.

இந்த விடயங்கள் குறித்து தாம் பொலிஸாருடனும், மாகாண கல்வி அமைச்சுடனும் சேர்ந்து நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார். (எ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழில் வன்முறைகளில்...

நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணை மேற்கொண்டு வரும் பொலிஸார், சம்பவத்துடன் தொடர்புடைய ஏனையவர்களையும் கைது செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். இதற்காக வர்த்தக நிலைய உரிமையாளர்கள் மற்றும் வங்கிகளில் பதிவான சி.சி.ரிவி.கமராவின் உதவியுடன் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (எ-11)

## கட்சி மாறும்...

க்கத்தை ஏற்படுத்திக் கொண்டுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் நாட்டின் வரலாற்றில் முதல் முறையாக இணைந்து அமைத்த அரசாங்கத்தின் மூலம் மக்களுக்கு பாரிய பணிகளை செய்ய முடிந்துள்ளதாக இரண்டு கட்சிகளின் பேச்சாளர்கள் சிலர் கூறியுள்ளனர்.

இதனால், அணி மாறுவதற்கு இடமளித்தால், இந்த ஒத்துழைப்புக்கு பங்கம் ஏற்படும் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இரண்டு பிரதான அரசியல் கட்சிகளை சேர்ந்த பலர் கட்சி மாறுவதற்கு தயாராக இருக்கின்றனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் தற்போது நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த கட்சி தாவும் விடயம் தொடர்பில் அறிந்து கொண்டதை அடுத்து இரு கட்சிகளின் தலைவர்களும் இது குறித்து விரிவாக கலந்துரையாடிய பின்னர் மேற்படி இணக்கத்திற்கு வந்துள்ளனர். (எ-11)

## பிளவுபட்டுள்ளது...

கட்சியில் தற்போது ஏற்பட்டுள்ள பிளவானது அந்தளவுக்கு பாரதூரமானதல்ல எனவும் முன்னாள் ஜனாதிபதி கூறியுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மைத்திரி - சந்திரிகா மற்றும் மகிந்த ராஜபக்ஷ அணி என இரண்டாக பிளவுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. எதிர்வரும் பொதுத் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவை பிரதமர் வேட்பாளராக நிறுத்த வேண்டும் என அவரது அணியினர் கட்சியின் தலைமைக்கு பிற கட்சியினர் ஊடாக அழுத்தங்களை கொடுத்து வருகின்றனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆகியோர் மகிந்தவை பிரதமர் வேட்பாளராக நிறுத்த முடியாது என்ற திட்டவட்டமான முடிவில் இருக்கின்றனர்.(எ-11)

## மகிந்தவுக்கு...

மர் வேட்பாளரை அறிவிக்கப்படுவதை நிராகரித்துள்ளார்.

ஜனாதிபதியுடனான சந்திப்புக்கு பின்னர் மறுநாள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவர்கள், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்து இது குறித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் போட்டியிட தான் விரும்புவதாக முன்னாள் ஜனாதிபதி இதன் போது கூறியுள்ளார்.

இதனடிப்படையில், மகிந்த ராஜபக்ஷ ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கீழ் எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிட வேண்டும் என முன்னணியின் நிறைவேற்றுச் சபையின் பெரும்பாலான உறுப்பினர்கள் தீர்மானித்தால், மகிந்த ராஜபக்ஷ கட்டாயம் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கீழ் போட்டியிடுவார் என ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக இருமுறை பதவி வகித்து அதிகார பலத்தை ருசி பார்த்தவர். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்த அவருக்கு முன்னாள் ஜனாதிபதி என்ற வகையில் பாதுகாப்பு உட்பட பல சிறப்பு சலுகைகள் வழங்க ப்பட்டுள்ளன.

இந்த நிலையில், அவர் பொதுத் தேர்தலில் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவானால், இரண்டு பொலிஸாரின் பாதுகாப்பு மட்டுமே வழங்கப்படும். முன்னாள் ஜனாதிபதிக்கு வழங்கப்பட வேண்டிய பாதுகாப்பு உட்பட சிறப்பு சலுகைகளை அவர் இழக்க நேரிடும்

இதனால், மகிந்த ராஜபக்ஷ அதிகாரத்திற்கு ஆசைப்பட்டு இருக்கும் சலுகைகளை இழக்க நினைப்பாரா அல்லது அவர் பிரதமராக வரவேண்டும் என்ற அவரது ஆதரவு அரசியல் வாதிகளின் எண்ணம் நிறைவேறுமா என்பதை பொறுத்திரு[ந்து]தான் பார்க்க வேண்டும் என அரசியல் [அவ]தானிகள் கூறியுள்ளனர். இந்த நிலை[யில்] நாட்டின் ஜனாதிபதியாக இருந்த மகிந்தவு[க்கு] இரண்டு பொலிஸாரின் பாதுகாப்புடன் எ[...] கட்சி நாடாளுமன்ற உறுப்பினராக இருக்[கும்] அளவுக்கு அவரது மூளையில் கோளாறு இருப்பதாக தான் எண்ணவில்லை என சுகா[தார] அமைச்சர் ராஜித சேனாரத்ன அண்மை[யில்] கூறியிருந்தார். அத்துடன் மகிந்த ராஜபக்[ஷ] எதிர்வரும் தேர்தலில் போட்டியிட மாட்[டார்] எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார். (எ[-11])


### க.பொ.த உயர்தரப் பரீட்சை நோக்கிலான வழிகாட்டல் செயலமர்வு

2016, 2017 க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் வர்த்தகப் பிரிவைச் சார்ந்த மாணவர்களிற்கு "தாங்கள் க.பொ.த உயர்தர பரீட்சையில் அகில இலங்கை ரீதியாக முதல் 100 இடங்களுக்கு வருவதற்கான தந்திரோபாயங்கள்" தொடர்பான இலவச வழிகாட்டல் செயலமர்வு.

இடம்:-Spectra Skills
19, Stanley Road, (Peoples Bank 2nd Floor)
Jaffna.
Tel:021 222 1422
Mob:0767520940

காலம்:02.06.2015 (செவ்வாய்க்கிழமை)
நேரம்:9 மணி தொடக்கம் 12 மணி வரை
பதிவுகளுக்கு:01.06.2015 இற்கு முன்னர் உங்கள் பெயர், பாடசாலை, தேசிய அடையாள அட்டை இலக்கம் என்பவற்றை 0767520940 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு SMS செய்யுங்கள். முதலில் பதிவு செய்யும் 100 பேருக்கு மட்டுமே ஆசனம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (சி-1119)

### Dutch, Deutsch, French



தூதரக பரீட்சைக்கான ஜேர்மன் - Deutsch (டொச்) மற்றும் நெதர்லாந்து - Dutch (டச்) உட்பட அனைத்து புதிய பிரிவுகளும்ஆரம்பமாகின்றது.

* French, Italian, English (A-1 Exam) வகுப்புகளும் நடைபெறுகின்றன.
* வடமாகாணத்தில் அரசாங்க அங்கீகாரம் பெற்று ஜேர்மன் கலாசார நிலையத்தின் அனுசரணையுடன் இயங்கும் ஒரே வெளிநாட்டு மொழிக் கல்வி நிறுவனம் எங்களுடையதே.
* Dutch மற்றும் Deutsch தூதரக பரீட்சைகளில் நீங்கள் சித்தியடைவதை தற்பொழுது நாம் 100% உத்தரவாதப்படுத்துகின்றோம்.
* Audio, Video வசதிகளுடன் குளிரூட்டப்பட்ட வகுப்பறைகள்.

(C-1127)

**Vivekananda Academy**
அனைத்து புதிய வகுப்புக்களும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன
221/1, மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம்.
(Gov. Reg.No: W/A 76795)
Tel: 0213216928, 0774842464 ,0212220393

### மருத்துவ ஆய்வுகூட சேவைகள்

லக்ஸ்மி மருத்துவ ஆய்வுகூடம் யாழ் வீதி மானிப்பாய்
லக்ஸ்மிமெடிகெயார்ஆனைக்கோட்டை வீதி நவாலி
CLINDIAG-SA-20-2014-Belgium தயாரிப்பு Bio Chemistry Analyzer - மூலம் துல்லியமான ஆய்வுகள், அனுபவம் மிக்க MLT விரைவான சேவை, மனிதாபிமான கட்டணங்கள். (613)
7.00A.M - 7.30 P.M CALL :0217904444, Mobile:0774444180

### தங்குமிடவசதி

வெள்ளவத்தையில் A/C, Non A/C உடனான தனி அறைகள் வாடகைக்குப் பெற்றுக்கொள்ள இன்றே அழையுங்கள். யாழ்.மகால் Rest
தொடர்புகளுக்கு :- 19/1, சுவி சித்தாரா றோட், வெள்ளவத்தை, கொழும்பு-06 (065)
T.P :- 0113158398, 0770260180, 0773074477

### நாய்க்குட்டி விற்பனைக்கு

45 நாள் நிரம்பிய Labrador Pure Breed இன நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. (617)
தொடர்புகளுக்கு:-0777181386

### வேலையாட்கள் தேவை

ஸ்ரீ சரவணபவன் சைவ உணவகத்திற்கு றொட்டி, சமையல், அப்பம் செய்யக் கூடிய வேலையாட்கள் தேவை.
259, கோவில் வீதி, நல்லூர். (620)
தொடர்புகளுக்கு:-0775241182

### வேலையாள் தேவை

யாழ்ப்பாணம் நல்லூரில் அமைந்துள்ள வியாபார ஸ்தாபனம் ஒன்றுக்கு பொறுப்பாக நடத்தக் கூடிய ஆணொருவர் தேவை. (அ-1113)
தொடர்புகளுக்கு:-0770256640

### உடனடி வேலைவாய்ப்பு

Optimo International Pvt (Ltd) எமது நிறுவனத்தில் 10 உ[...] பதவி வெற்றிடங்களுக்கு நிரந்தர ஊழியர்கள் இணைக்கப்[பட] உள்ளனர். ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொண்டு உங்களுடை[ய] தகவல்களை அளித்து நேர்முகத் தேர்வு நேரத்தினை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

- பயிற்சியுடன் வேலைவாய்ப்பு என்பதால் முன் அனுபவம் அவசியமில்லை
- பயிற்சிக் காலத்திலும் 15,000-25,000 வரை ஊக்குவிப்பு தொகையும் உண்டு.
- O/L தகுதி உடையவர்களுக்கு விசேட வாய்ப்புகள் உண்டு.
- வெளிமாவட்டத்தினருக்கு தங்குமிட வசதி செய்து தரப்படும்.


இறுதி திக[தி] 05.06.20[15]

தொ.பே:-0771908997, 0779660885, 0770771[...]

### VANAKKAM PHONE CIT[Y]

SAMSUNG HUAWEI INTE[X]

- Mobile Phone & Accessories Sales
- Repairing
- Unlocking



வெளிநாடுகளிலிருந்து கொண்டுவரப்படும் அனைத்துவகையான தொலைபேசிகளும் குறைந்த கட்டணத்தில் **Unlock** செய்து தரப்படும்.

SAMSUNG, HUAWEI, INTEX ஆகிய கைபேசிகளுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:
வணக்கம் போன் சிற்[றி]
இல.07, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பா[ணம்]
(அன்னை நாகா பூட் சிற்றிக்கு முன்பா[க])
077 659 0399/077 222 96[...]

### வெளிநாட்டு உயர்கல்வி[...]

பகுதி நேர வேலைவாய்ப்புட[ன்]
ஹோட்டல் முகாமைத்துவம் சிங்கப்பூ[ர்] மலேசியா
ஆகக்கூடிய கல்வித் தகைமைகள் O/L
* மாதாந்த பகுதிநேரக்கொடுப்பனவு 100,000/=
* சிறந்த கற்கையுடன் கூடிய பயிற்சி

100% விசா உத்தரவாதம் வழங்கப்படும்
Hotline: 077 3013060
Hospitality Management Programme with Global Recognition



Study in Australia, Newzealand, UK, USA, Latvia, Swiss, Cyprus

iCS Study Overseas
77, மணிக்கட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்
(பெருமாள் கோயிலுக்கு அருகாமை[யில்])
077-3013060,021-7306000

### SPEED LANKA EXPRESS



வெளிநாடுகளுக்கான தபால் பொதி விநியோக சேவை

- உங்கள் இல்லங்களில் இருந்தவாறே அனுப்பும் வசதி
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்

Speed Lanka Express (Pvt) Ltd
135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே - 0776217926


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,[...] யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.05.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்[டது]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரி

# சங்குநாதம்

Sankunatham

வள்ளுவர் ஆண்டு 2046 31.05.2015 தொலைபேசி : 021 222 3378

நாதம் 17



# தமிழுரை நெகிழவைத்த ஜனாதிபதி மைத்திரி



உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களை நெகிழவைத்த ஜனாதிபதி மைத்திரியின் யாழ்ப்பாண விஜயம்


குருஷேத்திரம்

புங்குடுதீவு மாணவி வித்தியாவின் படுகொலை ஏற்படுத்திய அதிர்ச்சி தமிழர்தாயகம் எங்கும் விஸ்வரூபமெடுக்கலாயிற்று. மிக நீண்ட காலத்திற்குப் பின்னர் தமிழர் தாயகத்தில் நடந்த ஹர்த்தால் வித்தியாவுக்கானது என்பது இங்கு நோக்குதற்குரியது.

மாணவி வித்தியாவின் படுகொலை, கூட்டுவன் புணர்வு என்பவற்றுக்கெதிராக- குற்றவாளிகளுக்கு மரண தண்டனை கொடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்துவதாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் பூரண ஹர்த்தால் இடம்பெற்றாலும் அதற்குள் பல்வேறு விடயங்களை மக்கள் சொல்ல முற்படுவது தெரிகிறது.

அதிலும் குறிப்பாக வடபகுதியில்- யாழ்ப்பாணத்தில் நடந்த ஆர்ப்பாட்டத்தின் போது இளைஞர்கள் கொண்ட வேகம் யார் மீதோ அவர்களுக்குக் கோபம் இருப்பதைக் காட்டிநிற்கிறது. அந்த வகையில் மாணவி வித்தியாவின் படுகொலைக்கு எதிராக நடந்த ஹர்த்தால் போராட்ம் தமிழர் தாயகத்தில் பொலிஸாரின் பணி போதுமானதல்ல, பொலிஸார் இலஞ்சம் வாங்கிக்கொண்டு தங்கள் கடமைகளை ஒழுங்காகச் செய்யாமல் விட்டு விடுகின்றனர்.

அடுத்து போதைப்பாவனை, சட்டம் ஒழுங்கு நேர்த்தியாக இல்லை எனப் பல விடயங்களை முன்னிறுத்தியே ஆர்ப்பாட்டம் நடந்துள்ளது என்பது கவனிக்கத்தக்கது.

மாணவி வித்தியாவைக் காணவில்லை என்ற பெற்றோரின் முறைப்பாட்டை எடுக்க மறுத்த ஊர்காவற்றுறைப் பொலிஸாரின் அசமந்தப் போக்கை பொதுமக்கள் கடுமையாக எதிர்க்கின்றனர்.

இத்தகைய மனநிலை உள்ள பொலிஸாரால் எங்களின் பாதுகாப்பை எப்படி உறுதிசெய்யமுடியும் என்ற கேள்விகளை மனதினுள் எழுப்பி ஆர்ப்பாட்டம் நடந்தேறியது.

எதுவாயினும் மக்களின் எதிர்ப்புப் போராட்டம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை யாழ்ப்பாணத்திற்கு வரவைத்தது.

26.05.2015 அன்று ஜனாதிபதி மைத்திரி திடீரென யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்தார். அவரின் வருகை மிகவும் இரகசியமாக வைக்கப்பட்டிருந்தது.

வடக்கின் முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரனுக்கும் அன்று காலையிலேயே தகவல் கொடுக்கப்பட்டது.

ஜனாதிபதி மைத்திரியின் யாழ்ப்பாணம் நோக்கம் மாணவி வித்தியாவின் மரணத்தால் கொதித்துப்போயுள்ள வடபுலத்தை ஆற்றுப்படுத்துவது; இதற்காக யாழ்.மாவட்டப் பாடசாலை மாணவிகளைச் சந்தித்துக் கதைப்பது; வித்தியாவின் பெற்றோரைச் சந்தித்து அனுதாபம் தெரிவிப்பது இந்த இரண்டு விடயங்களுக்குமாகவே ஜனாதிபதி இங்கு வந்திருந்தார்.



தமிழ்மாணவி ஒருவர் கொல்லப்பட்டதற்கு இந்த நாட்டின் ஜனாதிபதி நேரில் வந்து மாணவியின் பெற்றோரைச் சந்தித்து ஆறுதல் கூறியதோடு இழப்பீட்டுத் தொகையும் வசிப்பதற்கு வீடும் தரமுடியும் என்று உறுதியளித்தமை தமிழ் மக்களை நெகிழவைத்து விட்டது.

இலங்கையின் வரலாற்றில் தமிழர் தரப்பின் இழப்பிற்காக ஜனாதிபதி ஒருவர் யாழ்ப்பாணம் வந்தமை இதற்கு முன்பு ஒருபோதும் நடந்ததில்லை என்பதற்கு ஜனாதிபதி மைத்திரியின் மனிதநேயம் தெரிவதுதான்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்மக்கள் ஒரு மனிதனுக்கு வாக்களித்தனர் என்ற திருப்தியையும் தந்துள்ளது. அதேநேரம் மாணவி வித்தியாவின் தாய், தமையன் ஆகியோரைச் சந்தித்த ஜனாதிபதி மைத்திரி வித்தியாவின் தாயைக் கண்டு இருகரம் கூப்பினார். தனது கவலையை அவர் உள்ளார்த்தமாக வெளிப்படுத்தியமை கண்டு தமிழ்மக்களை நெகிழவைத்துப் போயிற்று.

மாணவி வித்தியாவின் இழப்பிற்கு ஆறுதல் கூறுவதற்கு எங்கள் அரசியல் பிரமுகர்களில் பலர் இன்னமும் வித்தியாவின் வீட்டிற்குச் செல்லாத நிலைமை இருக்கையில், வித்தியாவின் கொலையில் அரசியல் இலாபம் தேட எங்கள் அரசியல்வாதிகள் முயற்சி செய்கையில், ஜனாதிபதி மைத்திரி வித்தியாவின் குடும்பத்திற்கு ஆறுதல் கூறுவதற்காகவே யாழ்ப்பாணம் வந்தார் என்றால் இந்த நாட்டில் மைத்திரியின் காலத்தில் இன ஒற்றுமை ஏற்பட்டால் மட்டுமே உண்டு என்று சொல்லமுடியும்.

அதேநேரம் தமிழ் இனத்தில் நடந்த ஒரு கொலைக்காக ஜனாதிபதி நேரில் வந்து அந்தக் குடும்பத்திற்கு நிதியுதவியும் வீட்டு வசதியும் செய்து தருவதாகக் கூறிய வரலாறு முன் எப்போதும் உண்டா? என்றால் இல்லவே இல்லை.

தென்பகுதியில் குண்டு வெடித்து அதில் தென்பகுதி மக்கள் இறந்தால், உடன் செலவும் இழப்பீட்டுத் தொகையும் வழங்கப்படும் என்று அறிவித்த இலங்கை ஆட்சியாளர்கள் தமிழர் தாயகத்தில் குண்டு வெடித்து அதில் பொதுமக்கள் இறந்தபோது, பயங்கரவாதிகளே கொல்லப்பட்டனர் என்று கூறியதுடன் இறந்தவர் புலிப்போராளி என்று கையெழுத்திட்டாலே இறந்தவரின் உடலைப் பெற்றோரிடம், உறவுகளிடம் ஒப்படைக்க முடியும் என்றும் உத்தரவிட்டனர்.

இப்படியான ஒரு அக்கிரம ஆட்சி நடந்த காலம் போய்; தமிழ் மாணவியின் படுகொலைக்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவிக்க யாழ்ப்பாணம் வந்த மைத்திரி எவ்வளவோ மேல் எனலாம்.

யாழ்ப்பாணம் வந்த ஜனாதிபதி மைத்திரி யாழ். மாவட்டத்தைச்சேர்ந்த பாடசாலை மாணவிகளை வேம்படிப் பெண்கள் உயர்தரப் பாடசாலையில் சந்தித்தார். அதில் மாணவி வித்தியா கல்வி கற்ற புங்குடுதீவு மகா வித்தியாலயப் பாடசாலை மாணவிகளும் பங்குபற்றியிருந்தனர். ஒரு தந்தை தன் பிள்ளைக்கு ஆறுதலும் அறிவுரையும் கூறுவது போல அந்தச் சந்திப்பு நடந்தது. இத்தகைய மனிதநேயத்தையே தமிழர்கள் எதிர்பார்க்கின்றனர்.



ஜனாதிபதி மைத்திரி யாழ்ப்பாணத்திற்கு வந்தார் என்ற செய்தி அறிந்ததும் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன் விரைந்து சென்று அவரைச் சந்தித்தார் என்பதற்குள் பிரதமர் ரணில் தோற்றுப் போவது தெரிகிறது.

ஒரு நாட்டின் பிரதமர் என்ற பொறுப்பான பதவியில் இருந்து கொண்டு வடக்கின் முதலமைச்சர் விக்கினேஸ்வரனை சந்திக்கமாட்டேன் என்று ரணில் விக்கிரமசிங்க கூறியதற்குள் அவர் எதனைச் சாதித்துவிட்டார்.

இதேவேளை முதலமைச்சரைச் சந்திக்கமாட்டேன் என்ற பிரதமர் ரணிலோடு ஒட்டி நின்று புகைப்படம் எடுத்த தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களால்தான் எதைச் சாதிக்க முடிந்தது. தகுதியான- தரமான தலைவர் வரும்போது உண்மையான- தகைமையான தலைவருக்கு உரிய மதிப்பு வழங்குவார் என்பதையும் ஜனாதிபதி மைத்திரியின் யாழ்ப்பாண விஜயமும் முதலமைச்சர் விக்கினேஸ்வரனுடனான சந்திப்பும் உறுதி செய்திருக்கிறது.

இவையாவற்றுக்கும் மேலாக ஜனாதிபதி மைத்திரியின் யாழ்ப்பாண விஜயம் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் போக்கிரித்தனத்தை அடியோடு வெட்டிச் சரிக்கவும் செய்தது என்பது இங்கு ஈண்டு கவனிக்கத்தக்கது.

விதுரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு



## யாழ்ப்பாணத்து கந்தபுராண கலாசாரம் எங்கே?

ஆலடிப்பிள்ளையார் கோயில் திருவிழாவில் பண்டிதர் பரமலிங்கம் தெய்வீக சொற்பொழிவாற்றுகிறார். கந்தபுராணக் கலாசாரம் என்பது பண்டிதர் ஆற்றும் தெய்வீக உரையின் கருப்பொருள்.

அன்பர்களே! எங்கள் யாழ்ப்பாணக் கலாசாரத்தை கந்தபுராணக் கலாசாரம் என்று பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை கூறுவார். அவர் கூறுவதற்குள் நிறைந்த அர்த்தம் உண்டு.

கந்தபுராணம் சூரசம்ஹாரத்தோடு சம்பந்தப்பட்டது. ஆறுநாள் விரதமிருந்து முருகப்பெருமானை அனுஷ்டிக்கின்ற மிகக்கடுமையான விரதம். ஆறாவது நாள் முருகன் ஆலயங்களில் சூரன் போர் நடக்கும்.

தெய்வீகத்திற்கும் ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலத்திற்கும் இடையே நடக்கிற போர் தான் அது.

ஈற்றில் சூரன் அடங்குகிறான். ஆறுநாள் விரதம் இருந்து முருகனை வழிபட எங்களிடம் இருக்கக்கூடிய ஆணவம் கன்மம் மாயை அடங்கி விடுகிறது. மும்மலம் அடங்கி ஒடுங்கினால் தெய்வீகம் மேலெழும். இன்று எங்கள் மண்ணில் நடக்கின்ற அத்தனைக்கும் தெய்வீகத்தன்மை எங்களிடம் இல்லாமற் போனதே காரணமாகும்.

தெய்வீகத் தன்மையை இழப்போமாயின் மிருகத்தனம் எங்களிடம் குடிகொண்டுவிடும். எனவே தெய்வீகத்தை எங்கள் ஒவ்வொருவரிடமும் வளர்க்க வேண்டும். கந்தபுராணக் கலாசாரத்தின் அடிப்படை அதுவே.

மனிதன் மிருகமானால் அது ஆபத்தானது. விடயம் தெரிந்த- கதைக்கத் தெரிந்த- திட்டமிடத் தெரிந்த மனிதமிருகம் எதுவும் செய்யும். தெய்வீகத்தன்மை பொருந்திய மனிதர்களாலும் அதனோடு கூடி வாழ முடியாது.

ஆகையால் பாடசாலைகள் தோறும் மாணவர்களுக்குத் தெய்வீகத்தின் உயர்வு பற்றி எடுத்துரைத்து மாணவர்களைப் பக்குவப்படுத்த வேண்டும். இல்லையேல் எதிர்காலம் பயங்கரமானதாக அமையும்.

இப்படியாகப் பண்டிதர் தனது சொற்பொழிவை ஆற்றி நிறைவு செய்தார். பண்டிதரின் சொற்பொழிவோடு அன்றைய பகல் திருவிழா நிறைவுபெற மாலைப் பொழுதாயிற்று.

ஆலய திருவிழா நிறைவுற்றதும் பண்டிதர் பரமலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. விதானையார் விசுவலிங்கத்தைத் தவிர மற்றெல்லோரும் மாநாட்டிற்கு வந்திருந்தனர்.

**மூப்பர்:** பண்டிதர் ஐயா விதானையார் விசுவலிங்கத்தார் இரண்டாவது தடவையாக மாநாட்டிற்கு வரவில்லை. அவருக் கேதேனும் சுகயீனமோ.

**பண்டிதர்:** விதானையாருக்கு ஒரு சுகயீனமும் இல்லை. அவரின் பெடியன் அல்லோ அநுராதபுரம் சிறையில அடைபட்டிருக்கிறான்.

**மூப்பர்:** ஏன்? என்ன நடந்தது?

**பண்டிதர்:** யாழ்ப்பாண நீதிமன்றத்திற்குக் கல் எறிந்த குற்றச்சாட்டில 130 பேர் கைதாகி அநுராதபுரத்தில உள்ள சிறையில தடுத்து வைக்கப்பட்டிருக்கினமல்லோ. அதில விதானையாரின் பெடியனும் ஒருத்தன்.

**கங்காணி:** விதானையாரின் எத்தனையாவது பெடியன் பண்டிதர்.

**பண்டிதர்:** அவன்தான் கடைசிப்பெடியன். யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராவில் படித்துக்கொண்டிருக்கிறான்.

**மூப்பர்:** நாசமறுக்க இவனேன் அங்க போனவன்.

**பண்டிதர்:** அவன் அங்க போகவில்ல. விதானையாரின் மாமன் அதுதான் பெடியன்ர அம்மப்பா யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையில வருத்தமா இருக்கிறார்.

இவன் பெடியன் கடந்த 20 ஆம் திகதி அந்த மனுசனுக்குச் சாப்பாடு கொண்டுபோய் கொடுத்திட்டு கே.கே.எஸ் வீதியால வரக்க வண்ணார் பண்ணைச் சிவன் கோவிலடியில வைச்சு இவனைப் பொலிஸார் பிடிச்சதாகக் கேள்வி.

இப்ப விதானையார் அநுராதபுரத்துக்கு அலைஞ்சு திரியிறார்.

**கங்காணி:** கடவுளே! எங்கட 130 பெடியளையும் அங்க இருக்கிற சிங்களக் கைதியள் அடிச்சு நொருக்கிப் போடுவாங்களே!

**வாத்தியார்:** அதுமட்டுமோ அந்தச் சிறைகளில குடுப்பாவனையும் இருக்காம். பாவம் எங்கட பிள்ளையள்...

வயது போன நேரத்தில விதானையாருக்கும் அலையிற பலன். ஏதோ நடக்கிறத இருந்து பாப்பம்.

**வாத்தியார்:** எனக்குத் தெரிந்த ஒருவரின் மகன்ர மோட்டார்சைக்கிள் காற்றுப்போக அந்த மோட்டார் சைக்கிளை யாழ்ப்பாணப் பொலிஸ் ஸ்ரேசன் பக்கமாக நிறுத்திப் போட்டு சில்லைக் கழற்றிக் கொண்டு காற்றடிக்கப் போயிருக்கிறார்.

காற்றடிச்சுப்போட்டு சில்லோடு பொலிஸ் ஸ்ரேசன் பக்கம் வர, ரயர் எரிக்க வாறான் என்ற நினைப்பில பொலிஸார் அந்தப் பெடியனையும் கைது செய்து அநுராதபுரம் சிறைக்கு அனுப்ப, ஒரு சில்லு இல்லாமல் விட்ட இடத்தில அந்த மோட்டார்சைக்கிள் இப்பவும் கிடக்குதாம்.

**கங்காணி:** எல்லாம் காலப்பிழை. மோட்டார் சைக்கிளுக்குக் காற்றுப் போனதால அந்தப் பெடியன் அநுராதபுரத்திற்குப் போகவேண்டியதாய்ப் போச்சு. என்ன செய்யிறது. விதி எங்கட தமிழ் இளைஞர்களில தான் விளையாடுது.

சண்டை முடிந்தாலும் எங்கட இளைஞர்கள் சிறையில் அடைபடுவதைத் தடுக்க முடியாமல் இருக்கு.

**பண்டிதர்:** சீதையைச் சிறை வைத்த நாடல்லோ இது. இங்க எப்பவும் சிறைவைப்புத் தொடர்ந்துகொண்டுதான் இருக்கும்.

குற்றவாளிகளை சிறையில அடைக்கிறது எல்லா நாடுகளிலும் நடக்கிற காரியம். ஆனால் எங்கட நாட்டில குற்றம் செய்யாதவர்களும் சிறையில அடைபடுவதுதான் துன்பம்.

அதிலும் குற்றம் செய்யாத தமிழ் இளைஞர்களை சிறையில அடைத்து அவர்களின்ர வாழ்க்கையை நாசமாக்கின வரலாறு தான் இந்த நாட்டில இருக்கிற அநேகமான சிறைச்சாலைகளுக்கு உண்டு.

**வாத்தியார்:** அது சரி பண்டிதர். ஆர்ப்பாட்டம், ஹர்த்தால் நடக்கிறது வழக்கம். அதற்காக வீதிகளில ரயர் போட்டு எரிக்கிறது எந்தளவுதூரம் நியாயமானது.

**பண்டிதர்:** எங்கட பிள்ளையளுக்கு பொதுச் சொத்தைப் பாதுகாக்கிற மனநிலை இல்லை. அருமந்த காப்பெற் வீதியில ரயரைப் போட்டு எரித்தால எரிபட்ட இடம் அப்படியே பழுதாப் போச்சு. எவ்வளவோ கஷ்டப்பட்டுப் போடப்பட்ட காப்பெற் வீதியில ரயரைப் போட்டு எரித்து நாசமாக்கிப்போட்டினம்.

**கங்காணி:** முதலில பொதுச்சொத்துகளைப் பாதுகாப்பதன் அவசியம் பற்றிய எங்கட இளைஞர்களுக்கு நாங்கள் சொல்லிக்கொடுக்கவேணும். இல்லையெண்டால் வீதியில ரயர் போட்டு எரிக்கிற கலாசாரம் தொடரத்தான் செய்யும்.

(கங்காணி இப்படிக் கூறும்போது பிள்ளையார் கோயில் மணியும் ஒலிக்க ஆலடி மாநாட்டில இருந்தவர்கள் எழுந்து பிள்ளையாரை வழிபடச் சென்றனர்)

> அன்பு வாசகர்களே!
> ஆலடி மாநாட்டில் ஆராய வேண்டிய விடயங்களை நீங்களும் அனுப்பி வைக்கலாம்.
> (ஆ-ர்)

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிறுவர் அரங்கம்

## புலவரை வென்ற தெனாலி

ஒரு சமயம் விஜய நகரத்துக்கு வித்தியாசாகர் என்ற ஒருவர், வந்திருந்தார். அவர் சகல சாஸ்திரங்களையும் அறிந்த புலவர். தம்மைப்போல யாரும் புலமை பெற்றவர் இருக்க முடியாது என ஆணவம் கொண்டவர். அதனால், ஒவ்வொரு ஊராகச் சென்று அங்குள்ள புலவர்களையெல்லாம் வாதத்திற்கு அழைத்து வெற்றி பெற்று, பெருமையாக திரிந்து கொண்டிருந்தார். அவ்வாறே ஒரு நாள் விஜய நகரத்துக்கும் வந்தார்.

அவர் மன்னரின் அவைக்கு வந்து தன் திறமையை வெளிப்படுத்தனார். அந்த அவையில் பெத்தண்ணா, சூரண்ணா, திம்மண்ணா போன்ற புலவர்கள் இருந்தனர். அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறையில் வல்லவர்கள். அவர்கள்கூட வித்தியாசகரை கண்டு அஞ்சி பின்வாங்கினர். தன்னிடம் வாதிடயாரும் முன் வராதது கண்ட வித்தியாசாகர் ஆணவ முற்றார். தன் அவையில் சிறந்தவர்கள் இல்லையோ என மன்னருக்கோ வருத்தம்.

அந்தச் சமயத்தல் தெனாலி இராமன், அவை முன் வந்து "பண்டிதரே உம்மிடம் வாதம் புரிய நான் தயார். இன்று போய் நாளை வாருங்கள்" என்றான்.

இதைக் கேட்டதும் மன்னருக்கும், ஏனைய புலவர்களுக்கும் உற்சாகமாக இருந்தது. அவர்கள் இராமனை வெகுவாகப் பாராட்டினார்கள். இருந்தாலும் மறுநாள், வித்தியாசாகரை இராமனால் வெல்ல முடியுமா? என்ற சந்தேகம் அனைவருக்கும் இருந்தது.

இராமனை ஆஸ்தான பண்டிதரைப் போன்ற விலையுயர்ந்த ஆபரணங்களால் அலங்கரித்து, அவைக்கு அழைத்து வந்தனர். இராமன் தன் கையில் பட்டுத் துணியால் சுற்றப்பட்ட ஒரு பொதி வைத்திருந்தான்.

வாதம் ஆரம்பமாகியது. வித்தியாசாகர் இராமனின் கையில் இருந்த பொதியைப் பார்த்தார். அது என்னவாக இருக்கும்? என்று அவரால் ஊகிக்க முடியவில்லை. எனவே "ஐயா! கையில் வைத்திருக்கிறீர்களே! அது என்ன?" என்று கேட்டார்.

இராமன் அவரை அலட்சியாகப் பார்த்து, கம்பீரமாக "இது திலாஷ்ட மகிஷ பந்தனம் என்னும் நூல். இதைக் கொண்டுதான் உம்மிடம் வாதிடப்போகிறேன்!" என்றான்.

வித்தியாசாகருக்கு குளப்பம் மேலிட்டது. அவர், இதுவரை எத்தைனயோ நூல்களைப் படித்திருக்கிறார். கேட்டிருக்கிறார். ஆனால், இராமன் கூறியது போல் ஒரு நூலைப்பற்றி இதுவரை



கேள்விப்படவில்லை. அந்த நூலில் என்ன கூறியிருக்குமோ? அதற்கு தம்மால் பதில் சொல்ல முடியுமோ? முடியாதோ? என்ற பயம் ஏற்பட்டது. அதனால், நயமாக "வாதத்தை நாளை வைத்துக்கொள்வோம்". என்று சொல்லிவிட்டு சென்றார்.

அன்றிரவு வித்தியாசாகர், பலவாறு சிந்தித்துப் பார்த்தார். இராமன் கூறிய நூல் புரிந்துகொள்ள முடியாத நூலாக இருந்தது. இதுவரை தோல்வியே கண்டிராத அவர், இராமனிடம் தோல்வி அடைய விரும்பவில்லை. ஆகவே, அந்த இரவே சொல்லிக்கொள்ளாமல் ஊரை விட்டே ஓடிவிட்டார்.

மறுநாள் அனைவரும் வந்து கூடினர். ஆனால், வித்தியாசாகர் வரவில்லை. விசாரித்த பொழுது அவர் இரவே ஊரைவிட்டு ஓடிவிட்டார் என்ற செய்தி தான் கிடைத்தது. வெகு சுலபமாக அவரை வென்ற இராமனை அனைவரும் பாராட்டினர்.

மன்னர் இராமனிடம் "இராமா! நீ வைத்திருக்கும் திலகாஷ்ட மகிஷ பந்தன என்ற நூலைப்பற்றி நானும் இதுவரை கேள்விப்பட்டதேயில்லை. அதை எங்களுக்கு காட்டு!" என்றார்.

இராமன், பொதியை மூடியிருந்த துணியை விலக்கினான். ஏடுகள் எதுவும் காணப்படவில்லை. அதற்குப் பதிலாக எள், விறகு, எருமையை கட்டிப் போடும் கயிறு இருந்தது. அதைக் கண்டதும் எல்லாரும் வியப்புற்றனர். இராமன் "அரசே! திலகம் என்றால் எள், காஷ்டம் என்றால் விறகு, மகிஷ பந்தனம் என்றால் எருமை கட்டும் கயிறு. இதன் உட்பொருளை வைத்துத்தான், திலகாஷ்ட மகிஷ பந்தனம் என்று சொன்னேன் இதைப் புரிந்துகொள்ளாத புலவர் பயந்து ஓடிவிட்டார்." என்று கூறிச் சிரித்தான். மன்னர் இராமனை பாராட்டி பரிசளித்தார்.

## படைப்பீர் புதிய உலகத்தை!



முன்னைப்போர்கள் இனிவேண்டாம்
முயன்று கொணர்வோம் நல்லுறவை
அன்னை தெரசா அடியொற்றி
அணைப்போம் அன்பால் அகிலத்தை

முதுமையை என்றும் இகழாதீர்
முன்னோர் சொற்களைத் தள்ளாதீர்
அக்கறை அவர்மேல் கொண்டிடுவீர்.
அன்பாய் அவர்களைப் புரிந்திடுவீர்.

வீரம் மட்டும் நெஞ்சினிலே
இருந்தால் மட்டும் போதாது
ஈரம் அதிலே சுரக்கட்டும்.
இரக்கத்தால் அது நிரம்பட்டும்

ஏழையர் தம்மை எந்நாளும்
அணைத்திட வேண்டும் அன்போடு.
கீழாய் எவரையும் நடத்தாதே.
மானுடர் யாவரும் சரிசமமே.

வியர்வை சிந்தி பெறப்பட்ட
ஒவ்வொரு பொருளும் வைரம்தான்.
ஆர்வத்துடனே உழைப்பதனால்
ஆயிரம் சாதனைப் பூப்பூக்கும்.

மூடப்பழக்கம் ஒழித்திடுவீர்;
முட்டாள்தனத்தை மாய்த்திடுவீர்.
பகுத்து அறிவீர் என்றென்றும்;
படைப்பீர் புதிய உலகத்தை.



க. பிரியங்கா,
தரம் 6
யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

## உலகின் முதலாவது- வெப்பக் குருதி மீன்




ஒப்பா அல்லது *மூன்பிஸ்* என்று அழைக்கப்படும் இந்த மீன் தனது உடல் வெப்பநிலையை தானே கட்டுப்படுத்தக் கூடிய விசேட இயல்பைக் கொண்டது. இந்த மீனின் விஞ் ஞானப் பெயர்: lampris guttatus இவை மிகக் குளிரான நீரில் நீந்துகின்ற போதும் தமது குருதி,உடல் வெப்ப நிலையை அதனிலும் உயர்ந்த நிலையில் வைத்திருக்கக் கூடியன.

சாதாரண மீன்கள் சூழல் வெப்பக் குருதியைக் கொண்டிருக்கும் -குளிரான குருதியைக் கொண்டிருக்கும் என்பதை மாணவர் அறிந்திருப்பர். விலங்குகள் பறவைகள் இளஞ்சூட்டுக் குருதியைக் கொண்டிருக்கின்றன என்றும் அறிந்திருப்பர். மேலும் விலங்குகள் பறவைகள் நிலையான வெப்பத்தைக் கொண்டிருக் கின்றன. இந்த மீன் நிலையான வெப்பத்தைக் கொண்டிருக்கவில்லையாயினும் தனது உடலின் வெப்ப நிலையை கட்டுப்படுத்தும் திறன் கொண்டதாக-சூடான குருதியைக் கொண்டதாக காணப் படுகிறது. சில சுறாக்களும் வேறுசில மீன்களும் தமது கண் மூளை ஆகியனவற்றை வெப்பமாக வைத்திருக்கும் இயல்பு கொண்டவையாக அறியப்பட்டுள்ளன. ஆயினும் குளிர்ந்த நீரில் தனது உடல் வெப்நிலையை குறைந்தது 5 °Cஉயர்த்தக்கூடியதாக இது உள்ளது. இத்தகைய சிறப்பம்சத்துக்குக் காரணம், அதன் சுவாச அங்கமான பூ ஆனது விசேட தோற்றம் கொண்டதாக, அமைப்புக் கொண்டதாக உள்ளது. இதன் பூக்களில் தடிப்பான -குருதிநாளங்களின் வலை காணப் படுகின்றது. இது குருதியின் வெப்பத்தை அதிகரிக்கிறது- இந்த வெப்ப மானது மீனின் முக்கியமாக மார்புத் தசைகளில் இருந்து பெறப்பட்டு, பூகளின் குருதிநாளங்களின் வலைகளில் குளிரான குருதிக்கு கடத்தப்படுகிறது



இதனால் சூடான குருதிச்சுற்றோட்டம் உருவாக்கப் படுகிறது. இந்த மீனின் மார்புத் தசையானது வெப்பத்தை உற்பத்திசெய்யும் இடமாகக் காணப் படுவதும் இதன் சிறப்பம்சமாகும். இதுவே உலகில் கண்டுபிடிக்கப்பட்ட முதலாவது வெப்பக் குருதியுள்ள மீன ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








## வித்தியாவின் கொலையை அடுத்து ஜனாதிபதியின் திடீர் யாழ் விஜயம் பற்றி?

## சுவிஸ்குமாரை என்ன செய்யலாம்?

## ஐ.பி.எல். இறுதிப் போட்டியில் சென்னை தோற்றதற்கு காரணம்?

**விதுர்சன் — ஆடை**

**மாடுகளில் சிறந்தது பசுவா? நாம்பனா?**

கண்ட இடத்தில் மேயும் நாம்பன்களை விட கட்டிய இடத்தில் நிற்கும் பசுக்கள் எவ்வளவோ மேல்.

**வரதன் — நல்லூர்**

**தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் பற்றி?**

அவையை அடக்குவாரோ இல்லையோ அவைக்கு - அம்மாக்கு அடங்கிவிடுவார்.

**அனு — வரணி**

**வித்தியாவின் கொலையுடன் தொடர்பு பட்டவர்களுக்கு தண்டனை கிடைக்குமா?**

கிடைக்கும். கிடைக்க வேண்டும். இது ஒவ்வொரு தாய், தந்தை, சகோதரி, சகோதரன் மனங்களிலும் குமுறிக் கொண்டிருக்கும் விடயம்.

**குகன் — யாழ்ப்பாணம்**

**தத்துவம் ஒன்று சொல்லுங்களேன் பிளீஸ்?**

வகுப்பறையில் மாணவனை ஆசிரியர் திட்டுகிறார். **இப்படி கல்லுப் போல் நிற்கிறாயே?** என்று. **அவனோ தன்னை கடவுளாய் உணர்கிறான்.**

**அபி — வயாவிளான்**

**பெண்கள் சின்ன விடயத்துக்கே பயப்படுகிறார்களே?**

சிறிய கரப்பான் பூச்சியைக் கண்டதும் கத்தி ஊரைக் கூட்டும் பெண்கள் பெரிய கரடி பொம்மையை கட்டிப் பிடித்துக்கொண்டு நித்திரை கொள்கிறார்களே என்ன செய்ய?

**சகாதேவன் — யாழ்ப்பாணம்**

**பாலியல் பற்றி உங்கள் கருத்து?**

பேசுவது முதல் படிப்பதுவரை மறைத்து மறைத்து வைத்து இன்று அது சார்ந்த குற்றங்களை குறைக்க முடியாமல் திணறிக் கொண்டிருக்கிறோம். அவ்வளவுதான்.



**ஜானினி மேனன் — கொற்றாவத்தை**

**வித்தியாவின் கொலையை அடுத்து ஜனாதிபதியின் திடீர் யாழ். விஜயம் பற்றி?**

நிச்சயம் அவர் அரசியல் நோக்கத்துடன் வரவில்லை. ஏனென்றால் இன்னொரு முறை ஜனாதிபதி தேர்தலில் தோற்றப்போவதில்லை என்பதை உறுதியாக கூறிவிட்டார். மைத்திரி ஒரு நல்ல மனிதர் என்பதை மீண்டும் நிரூபித்து விட்டார்.

எங்கள் தமிழ் அரசியல்வாதிகள் யாருடனும் ஒப்பிட்டுப் பார்க்க இயலாத ஒருவர். ஏனென்றால் மரண வீட்டில் அரசியல் நடத்தும் எண்ணம் அவருக்கு இல்லை. ஒவ்வொரு தமிழ் மகனின் மனதிலும் பிறேம்போட்டு அமர்ந்த முதலாவது சிங்களத் தலைவர் என்கின்ற பெருமையும் அவருக்கே.




**சந்திரன் — தெல்லிப்பழை**

**கேவலமான செயல்களைச் செய்பவர்களை படிப்பறிவு இல்லாதவர்கள் என்று சொல்லலாமா?**

'இங்கே குப்பை கொட்டாதீர்கள்.' 'இங்கே சிறுநீர் கழிக்காதீர்கள்'. ' ஆலயம் ஆதலால் புனிதம் பேணுங்கள் என அனைத்தும் படித்தவர்களுக்காகத்தானே எழுதப்பட்டிருக்கிறது. இப்போது சொல்லுங்கள் கேவலமான செயலைச் செய்பவர்கள் படித்தவர்களா? படிக்காதவர்களா?

**ரி.நகுனன் — சுழிபுரம்**

**எந்திரன் 2 வெளிவருமா? அது வெல்லுமா?**

அப்படி ஒரு பேச்சுவார்த்தை நடந்தது தான். ஆனால் இப்போது ரஜினி வேறு பட வேலையில் இருக்கிறார். சங்கர் வேறு பட வேலையில் இருக்கிறார். ஒன்று சேர்ந்தால் வெற்றி நிச்சயம்.

**சுபீதன் — யாழ்**

**வித்தியாவின் படுகொலைக்குக் காரணமான அந்த பாவிகளை மக்கள் கையில் கொடுத்தால் என்ன?**

நம் நாடு ஒன்றும் சவுதி அரேபியா இல்லையே?

**குகன் — யாழ்ப்பாணம்**

**அம்மாவின் அன்பு எப்படிப்பட்டது?**

அம்மாவுக்குத் திருப்தி சமைத்து முடிப்பதில் இல்லை. தன் பிள்ளை சாப்பிட்டு முடிப்பதில் தான் இருக்கிறது.

**பிரியா — நெல்லியடி**

**சுவிஸ்குமாரை என்ன செய்யலாம்?**

தண்டனைகளை சட்டம் பார்த்துக் கொள்ளும்.

**தனு — அல்வாய்**

**ஐ.பி.எல். இறுதிப் போட்டியில் சென்னை தோற்றதற்கு காரணம்?**

டோனியின் பீல்டிங் (f) பெஸ்ட் முடிவு.

**கலஸ்னா செல்வா — கோப்பாய்**

**மரணம் என்றால் என்ன?**

திருமணம் செய்து பாருங்களேன் புரியும்.

**வேல்நந்தன் — புலோலி**

**தனிமனித வசைபாடும் இலக்கியப் படைப்புக்கள் பற்றி என்ன நினைக்கிறீர்?**

மன்னிக்க வேண்டும் வேல்நந்தன் நான் ஒப்பாரிகளை வாசிப்பதில்லை.

**வாணி — புன்னாலைக்கட்டுவன்**

**தற்போது உண்மைக்கும் நேர்மைக்கும் மதிப்பில்லாது போய்விட்டதே?**

உண்மைக்கும் நேர்மைக்கும் எப்போது மதிப்பிருந்தது. பணம் பந்தியிலே குணம் குப்பையிலே என்று எப்போதே கண்ணதாசன் பாடிவிட்டானே?

**தேவி — நெல்லியடி**

**ஆண்களை அடக்கியாளும் பெண்களைப் பற்றி?**

ஆட்சியை கொஞ்சம் அவர்கள் கையிலும் கொடுங்களேன். ஆண்தான் ஆளவேண்டும் என்ற சட்டம் ஒன்றும் இல்லையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கவிதைக் கலசம்

## இமயம் தொட

ஆபத்தொன்று வரும்போது
உன் நகங்களை
ஆயுதமாக்கு- என்றார்
மகாத்மாகாந்தி
பெண்ணே...
உனக்கொரு கொடுமையெனில்
அவன் கதை முடி
நீ ஓடினால் நிழல் தொடரும்
எதிர்த்து நின்றால் அது முடியும்

மாவை. நா.கஜேந்திரன்

## போய் வருக பொன்மகளே

கூற்றுவனே வருக எம் மகளைக்
குதறிக் குதூகலித்த கயவர்களின்
குடலுருவி மாலையாக்கி அவர்களின்
சாற்றைப் பருக கூற்றுவனே வருக
நேற்றைவரை வசந்தம்
வாழ்ந்திருந்த
எம்மகளின்உயிர் ஊற்றடைத்த
பாவியரைப் பலியெடுக்க
கூற்றுவனே வருக
வித்தியா எனும் விருப்பு
நிறை மாணவியே
சத்தியமாய்ச் சொல்லுகிறோம்
சாவிலும் உன்வாழ்வு
சாத்தியமாயிற்று
ஊரெல்லாம் உறவைத்
தேடித்தந்தது உன்மரணம்
கண்சொருகி மெய் இறுகி
கலைத்துதிர்ந்து நின்ற வேளை
என்ன நினைத்தாயே எம்மகளே
மண்மீது மல்லாந்து
மரணிக்கும் வேளையிலே
எனை மீட்க யாரும் வருவார்கள்
என்று நீ நினைத்தாயோ
எண்ணிலாப் பாவியர்கள் நின்னை
வஞ்சித்த வேளையிலே
கெஞ்சித்தான் பார்த்தாயோ
என்ன செய்தாய் எம்மகளே
அன்புச் சோதரியே உன்னை
அஞ்சலிப்பதற்கே ஆயிரம் பேரிடம்
அனுமதிபெறவேண்டும்
என்றாயிற்று எம் நிலைமை
சிங்களச் சோதரரும்
இஸ்லாமியத் தமிழர்களும்
சினந்தெழுந்து
அங்கம் கொதித்தவேளை
இங்கிருக்கும் நாமோ
சுற்று நிருபங்களுக்குள்
சுதந்திரத்தைத் தொலைத்துவிட்டு
வெற்று வார்த்தைகளில்
கரைக்கின்றோம் காலத்தை
போய்வருக பொன்மகளே
நீலவிழி தோய்த்தபடி
விடைகொடுப்போம் நாம்
போய் வருக
சாவு ஒன்றே தமிழர்க்கு
சாத்தியமானது என்பதனை
பூ உதிர்ந்த மாதிரியாய்
போய் முடிந்த உன் மரணம்
உணர்த்தியது
போய்வருக பொன்மகளே

ரிஷிகுமரன்

## அக்காலமும் இக்காலமும்

புதுயுகம் பிறந்ததுபுதுமை கண்டு
வியந்த மனிதன்
அழிவு கண்டு அச்சப்பட்டான்
பல்லுடைக்கும் பழம் பாட்டின்
பழச்சுவை பெற்ற நாம்
டண்டனங்கா பாடலில்
நெஞ்சு பதைபதைத்தது
கிழங்கும் பச்சை சம்பலும்
உண்ட நமக்கு நோய் வந்ததில்லை அப்போது
சலரோக வருத்தம் சாவிலும் வந்ததில்லை
சீனிபோடா சாயமும்ஒரு கையளவு சோறும்
வீட்டிலே ஜிம் செற்றும்இருந்தும் எட்டிப் பார்த்தது இறப்பு
வைத்தியம் படித்த தம்பியும்
கலப்பையுடன் வயலுக்கு போனான்
ஒன்பது படித்த தம்பியோ
வெளிநாடு போனான் இப்போது
நாரிப்பிடிப்பும் நெஞ்சுக்குத்தும்
கையுளைவு காலுளைவுவந்ததில்லை அப்போது
கொத்துரொட்டியும் பரோட்டாவும்
போததற்கு பீட்சாவும் உண்ட நமக்கு
பலதேசம் கடந்து நடைவண்டில் நாம் சென்ற
நாட்கள் இனிமையானது
ஆக்கங்கள் பல தந்த இக்காலம்
அக்கால சுகத்தை தர மறந்து விட்டது
ஏன் மறந்து விட்டது?

நி.கவியழகன்

## புதியவராய் பிறந்திடுவீர்

பருவமின்றிப் பெய்யும் மழை
தருமத்தை தள்ளிய வாழ்க்கை
உழைக்காத புல்மீது பனி வியர்வை
கருமமின்றி காசுக்காக வேலை
வியர்வை காய்ந்தும் வராத கூலி
சுரண்டி பிழைக்கின்ற சுகம்
விடுதலையை விளங்காத விபரீதம்
வாளோடு தோன்றிய குணக்கேடு
பெண்களை அச்சுறுத்தும் பேயாட்டம்
கண்கெட்ட பின்னோ சூரிய வணக்கம்
போதையேறிப் பேதையராய் போனவரே
பாதைமாறி ஊர் போய் சேருவீரோ
வாழவும் வாழவிடவும் கற்றிடுவீர்
மீளவும் புதியவராய் பிறந்திடுவீர்

சு.சிவராசா
நாவற்குழி



## நாங்கள் சிறுவர்கள்

எங்கள் விழிகளில் வேண்டாம்
கண்ணீர்த்துளிகள்
புரிந்து கொள்ளுங்கள்
நாங்கள் சிறுவர்கள்
நூல் அற்ற மெழுகுவர்த்தியாய்
நாங்கள் எரிந்து
கொண்டிருக்கின்றோம்
நாங்கள் ஒளிரவேண்டும்
புரிந்து கொள்ளுங்கள்
முதுமைகளே உண்மை கொண்டு
திறந்து பாருங்கள் உங்கள்
இளைய பருவமதை
புரிந்து கொள்ளுங்கள்
நாங்கள் சிறுவர்கள்

கு.குயின்ரா
மு/ மல்லாவி ம.க

## வாழ்வின் தேடல்

முள்ளிவாய்க்கால் போரில்
தாய்தந்தை
உறவுகளை இழந்த
இளைஞர் யுவதிகளுக்கு
நாதிநாடுமில்லை
வரையறையான
வேலைவாய்ப்புமில்லை
அரவணைக்க
யாருமில்லை ஆதலால்
போகிறார்கள் என்று தெரிகிறது
எங்கே என்றுதான்
தெரியவில்லை

இரா.ஜெ.துஷ்யந்தா
அளவாவோடையூர்

# மௌனத்தின் தேடல்- 250

## ஏழையின் உறவுப் பயணம்

எங்கள் பிஞ்சுப் பசியை
போக்கும் என்
தந்தையை இழந்தேன்
தாங்க முடியாத ஏக்கத்தால்
நான் அழுதேன் துடித்தேன்
வயிற்றுப் பசியையும் என்
உடன்பிறப்பின்
உயிரையும் காக்க எண்ணி
அத்தனை சுமைகளையும் நானே
சுமந்து கொண்டு என் உறவு வழி
பயணம் தொடர்கின்றது...

செ.பேபிசாளினி
மட்டுவில் தெற்கு

## உடன் பிறப்புக்களுக்காய்...!

பள்ளி செல்லும் வயதிலே–நான்
ரிக்சா ஓட்டும் காரணம்– என்
தந்தையோ போதைக்கு
அடிமையாகி– அன்றாடம்
பிழைப்பதைத் தான் செலவு செய்ய
என்னைப் பெற்ற அன்னையோ
நாட்டில் நடக்கும் பெண்
வதையால் வீதியில்
வர அஞ்சுகிறாள்
நானோ என்படிப்பை விட்டு
என் உடன்பிறப்பின்
நல்வாழ்விற்காய் ரிக்சா
ஓட்டுகிறேன்...!

யே.சிவலோஜினி
வயாவிளான்

## குளிர்ச்சி

பிறரிடம் நாம் கையேந்துவதை
கேவலம் என்று நினைத்து
சொந்த உழைப்பில்
சோறு உண்ணவேண்டும்
என்ற உறுதியுடன்
அறுவடை செய்யப்பட்ட
உப்பட்டியினை
அ(த)ள்ளிக் கொண்டு
செல்லும் சிறுவா
நீ சிந்தும் வியர்வைத்துளி
மழையாகப் பொழியட்டும்
அப்போதுதான் வரண்டபூமி
குளிர்ச்சியடையும்

பா.சஜிதன்,
கரணவாய் மத்தி

## மாறிடுங்கள்

நாகரிகம் என்ற போர்வையில்
உயிர் கொல்லும் பல்சரில்
உழைப்பின்றி வெட்டியாய்
ஊர் சுற்றும் இளசுகளே...!
நீங்கள் மாறிடுங்கள்
தன்னம்பிக்கையோடு
சொந்தக்காலிலே நின்று
வாழ்வில் உயர்ந்திட
அத்திபாரம் இடும்
இச்சிறுசுகளைப் பார்த்து

த.தனுஜா, அல்வாய்

## வாழ்க்கைப்பயணம்

வாட்டும் வறுமையால் என் பள்ளிக்
கல்விக்கு வைத்தாச்சு முற்றுப்புள்ளி
சிறுவன் நான் தினமும
இந்த வண்டியை ஓட்டியே
என் வாழ்க்கைப் பயணத்திற்கு
வழிதேடுகின்றேன்

சு.ஜெயரூபன்
பருத்தித்துறை

## உன்னை மாற்றிடு

இளமையில் கல்வி
சிலையில் எழுத்து
என்ற பழமொழியை
ஏட்டில் மட்டுமே பதித்து
மனதில் பதிக்காது
திரியும் சிறுவர்களே!
நீங்கள் கல்வியை
மறந்ததற்குக் காரணம்
உங்கள் வீட்டுச் சூழ்நிலையோ
அல்லது நாட்டின் சீர்கேடா
நானறியேன்– ஆயினும்
உங்கள் உழைப்பின் மகிழ்ச்சியை
போலவே–உங்கள் கல்வி
மேலோங்குமாயின் உங்கள்
எதிர்காலம் ஒளிமயமாவது திண்ணமே!

ம.அ.மரியஜெனிற்றா
சாவகச்சேரி

# மௌனத்தின் தேடல் –251



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 03.06.2015ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞன் என்பவன் யார்?

**தேசத்தில் பற்றும் தீ தன் சட்டையில் பற்றும் வரை எவனும் சப்தமி டுவதில்லை. ஆனால் இளைஞன் என்பவன் தன் தேசத்துக்காக தன்னுடைய சட்டைக்குத் தீ வைத்துக் கொள்பவன்**



யாழ்.தர்ஷி

நண்பா! தற்காலத்தின் பேசுபொருளாக நீ இருப்பதில் தவறொன்றும் இல்லை. ஆனாலும் நீ எப்படிப் பேசப் படுகின்றாய்? எந்தவிடயத்தில் நீ சரியாக இருக்கின்றாய்? எங்கெல்லாம் நீ பிரசன்னமாகின்றாய்? உன் தேசம், உன் மக்களுக்காக நீ என்ன செய்கின்றாய். "என்ன எதற்கெடுத் தாலும் இளைஞர்கள் பக்கம் திசை திருப்புகின்றீர்கள்? என்றெல்லாம் நீ ஆக்ரோஷப் படுவது கேட்காமலில்லை.

அந்த இளம் பெடியன் அவன் எங்கள் நாடு யுத்த காலத்தில் பல்வேறு பாதிப்புக்குள்ளான போது தன் மக்களுக்காக தனித்து நின்று உதவிகள் புரிந்தவன். அவர்களை தாங்கிக் கொண்டு வந்து பத்திரமாகச் சேர்த்தவன். இன்றும் எங்கள் மக்களுக்கு ஒன்றென்றால் தனித்து நின்று குரல் கொடுப்பவன். தன்னிடம் இருக்கின்ற திறமைகளை சுயநலத்துக்காக விற்காதவன். சொந்தக் காலில் நிற்கப் பேரவா கொண்டவன். தன்னுடைய சமூகத்தில் நடக்கின்ற தவறான செயல்களுக்கு குரல் கொடுப்பவன். நம்பிக்கையைக் கைவிடாதவன். தவறுகள் அறியாதவன். எப்போதும் ஏதாவதொரு அறிவுத் தேடலில் ஈடுபடுபவன். சுதந்திரமாக நியாயமாக நீதியாகச் செயற்படுபவன். எந்தவொரு விடயத்திலும் பின்வாங்காதவன். கஷ்டங்கள் வரும்போது தன்னம்பிக்கை எனும் செல்வத்தை அள்ளித் தெளிப்பவன். அவன் தன் இளமைக் காலத்தில் எதையாவது சாதிக்க வேண்டும் என்று அலைந்து திரிபவன். சிலவேளைகளில் அவன் உணவுண்ண மறக்கின்றான், உறவுகளைத் தேட மறக்கின்றான். குளிக்க மறக்கின்றான். எதையோ தேடுகின்றான். அவனைத் தேடி அறிவாளிகள் பின் தொடர்கின்றனர். அவனுடைய தொலைபேசி அநேகமாக மூடியே வைக்கப்பட்டிருக்கும். அத்தகைய இளைஞன் நம் மண்ணில் தற்போதும் வாழ்ந்து கொண்டிருக்கின்றான். அவன் ஒரு சிறந்த முன்மாதிரி இளைஞன்.

மற்றொருவன்: அவன் சற்று வித்தியாசமானவன், அவன் ஒரு முற்கோபி. ஆனாலும் எங்காவது தவறுகள் நடந்தால் அவனது முற்கோபம் எங்கு செல்லும் என்றே சொல்ல முடியாது. அவன் பேசமாட்டான். எழுதித் தள்ளிவிடுவான். தீ போன்ற அவன் எழுத்துக்கு முன்பு யாரும் நிற்க முடியாது. அவன் நினைக்கின்றான் தான் எழுதும் எழுத்துக்கள், கவிகள், இந்த சமூகத்தில் ஏதாவது ஒரு மாற்றத்தைக் கொண்டு வரும். அத்தனை வலிமை கொண்டது அவனது எழுத்துக்கள். தன்னுடைய இளம் நண்பர்களுக்காக அவன் எழுதிக் கொண்டிருக்கின்றான். அறிவாளிகள் நிறைந்த சபையில் அவன் கேட்கும் கேள்விகள் சபையை மௌனியாக்கும் சந்தர்ப்பங்கள் அதிகம். அவனால் மனச்சாட்சிகளின் பக்கமிருந்து ஆதரவைப் பெற்றுக் கொள்ள முடியும். அதேநேரம் நியாயம் நிறைந்த ஒரு பகுதியினர் அவனின் பக்கத்தில் எப்போதும் இருப்பார்கள். கற்பனைத்திறன் வாய்ந்த அவனிடம் ஆணித்தரமாகக் கருத்துக்களைத் தெரிவிக்கும் அற்புதமான தலைமைத்துவம் அவனிடம் இருக்கின்றது. அவன் கடவுளை நம்புவான் அவனுக்கு தெரியும் நல்லதை விதைத்தால் நல்லதே விளையும் என்று.

வேறொருவன்: இவன் அறிவுப் பயிரை இந்தச்சிறு வயதிலேயே உண்டு ஏப்பம் விட்டுவிட்டான். அறிவுப்பேராசை மிகுந்தவன் என்றால் அவன் தான். ஒரே நேரத்தில் நிறையக் கற்க வேண்டும் என்ற ஆர்வமும் கொண்டவன், அதே நேரம் தான் நிறையக் கற்றவன் என்ற ஆணவமும் அற்றவன். அவன் தன் அழகின் மீதோ அக்கறையற்றவன். ஏனென்றால் அவனுடைய பண்புகள் கொடுக்கும் அழகை அதிகம் நம்புபவன்.

ஓடி ஓடிக் கற்றுக் கொண்டிருக்கின்றான். மொழித் தேர்ச்சி அதிகம் நிறைந்த இவன் ஆற்றலைக் கண்டு மூத்த அறிவாளிகள் வியக்கின்றனர். மற்றவர்களிடமிருந்து தான் கற்றுக் கொண்டேயிருக்கின்றேன் என்று எளிமையாகக் கூறுகின்ற அவனின் கண்கள் எப்போதும் கூரிய பார்வையுடன் இருக்கும். திறந்த அக மனதுடன் இருப்பான் அவன். இச்சிறு வயதிலேயே அவனுக்கு சரியான பாதை எதுவென்று புரிந்து விட்டது. அவனுக்கு இப்போதுதான் 22 வயது. ஆனால் அவன் தன்வயதுக்கு மீறிய அறிவு முதிர்ச்சியைக் கொண்டிருக்கின்றான். அவனும் நமது ஊரில் தான் இருக்கின்றான்.

இந்த இளைஞர்களுக் கெல்லாம் வாழ்க்கையின் முடிவில் தாங்கள் எதையாவது சாதிக்க வேண்டும் என்ற எண்ணமும், நல்ல விடயம் ஒன்றைச் செய்து முடிக்க வேண்டும் என்ற எண்ணமும் மட்டுமே மேலோங்கி நிற்கின்றது. இவர்கள் இன்றும் இருக்கின்றார்கள். எங்கள் சமுதாயத்தில் இவ்வாறான இளைஞர்கள் ஏராளம் பேர் இருக்கின்றார்கள். அவர்களைப் பேசுபொருளாகக் கொண்டால் நாமெல்லாம் உயரத்திலிருக்கலாம். இளைஞன் என்பவன் பேசப்படுகின்ற சந்தர்ப்பங்களைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டும். எத்தனையோ பேரலைகள் உருவாகுவதற்கு சிறுதுளி வெள்ளம் உதவியது என்னமோ நாம் ஏற்றுக் கொள்ள வேண்டிய உண்மை தான். அதே போன்று சமுதாயத்தின் களைகளைப் பிடுங்கியெறிவதற்குக் கட்டாயம் நம்முடைய இளைஞர்களின் நேரிய பார்வை முக்கியமானதே.




இளைஞர்கள் எல்லோரும் ஏதோ ஓர் சரியான இடத்தில் சங்கமிக்க வேண்டும். அங்கு அவர்களின் பாதைகள் சரியான வழியில் கட்டமைக்கப்பட வேண்டும். அதுதான் உண்மையான வெற்றியை நிலைநாட்டும். நாட்டில் வாழும் புத்திஜீவிகள் இவ்விடயத்தில் மிகவும் கவனம் செலுத்த வேண்டும் என்பதே இங்கு முக்கியமான விடயமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மதுபாவனை தனிமனித, குடும்ப, சமூகப் பிரச்சினையை ஏற்படுத்துவதாக இருந்தாலும் சிலர் மனதுக்கு நிம்மதி தருவதற்காக குடிப்பதாகக் கூறுகின்றனர். அவ்வாறு செய்வது சரியா தவறாஎன்பது புரியவேண்டும். இங்கு அவ்வாறான தொரு உண்மைச் சம்பவ விபரிப்பு வெளிவருகின்றது.**

மனவெளி

## குடிச்சாத்தான் நித்திரையே வருது...

காலையில் அடித்த கோயில் மணி கணீரென்று கேட்டது சந்திரனுக்கு.

*அவருக்கு தெரியும். அப்போது காலை நான்குமணி என்பது.* விரைவாக எழுந்து படுக்கையறை, சமையலறை என்று ஒன்றாக இருந்த தனது சிறியவீட்டின், ஒருபக்கத்தில் அடுப்பை மூட்டி விரைவாக சமையலைத் தொடங்கினார்.

*“ராசாத்தி எண்டால் இந்நேரம் சமையலையே முடிச்சிருப்பாள்.”*

நினைவு முழுவதும் ராசாத்தியே இருந்தாள். வேகமாகச் சமையலை முடித்தஅவர், பிள்ளைகளைத் தட்டியெழுப்பிவிட்டு,

*“வேகமாக் குளிச்சிட்டு, பள்ளிக்கூட உடுப்பெல்லாம் அதிலை மடிச்சு வைச்சுக்கிடக்கு, சாப்பாடும் போட்டுவைச்சுக் கிடக்கு, சாப்பிட்டுட்டு வெளிக்கிடுங்கோ. நான் கொஞ்ச விறகு கொத்தவேணும் மத்தியானச் சமையலுக்கு. போகேக்குள்ளை மறக்காமல் அம்மாவுக்கு போயிட்டுவாறன் சொல்லிப் போட்டுப் போங்கோ.”*

விரைந்து எல்லா வேலைகளையும் செய்து கொண்டிருந்த அப்பாவைப் பார்த்தபடியே இருந்த தமிழினி, தனக்குள் பெருமூச்சொன்றை விட்டுக்கொண்டு பாடசாலைக்குச் செல்ல ஆயத்தமானாள்.

*“அப்பா பாவம் எவ்வளவு வெள்ளண எழும்பி எல்லா வேலையும் செய்யுறார்எனக்கென்னமோகாலமை பாக்கிற அப்பாவைத்தான் பிடிக்கும், அப்பா விடிய எவ்வளவு நல்லா எல்லாம் செய்து தாறார். பின்னேரம் ஆனால் அடியோடை மாறிப்போறார். மனதுக்குள் எல்லாத்தையும் நினைக்க நினைக்க அவளுக்கு வருத்தமாக இருந்தது.”*

தம்பி தங்கச்சியாக்களைக் கூட்டிக் கொண்டு பாடசாலைக்கு வெளிக்கிட்டாள். இண்டைக்கும் அப்பா வழமைபோல மாறிவிடக் கூடாது மனதுக்குள் கும்பிட்டுக் கொண்டாள்.

சந்திரன் மறுபடியும் பிள்ளையளுக்கு மதியச் சாப்பாடு செய்து வைத்துவிட்டு தானும் கொஞ்சம் சாப்பிட்டுவிட்டு, முத்தத்திலை நிண்ட நித்தியகல்யாணிப் பூவிலை கொஞ்சத்தை புடுங்கினார். *“என்ரை மனிசிக்கு இந்த வெள்ளைப் பூக்கள் எண்டால் நல்ல விருப்பம்,”* மனதுக்குள் நினைத்துக் கொண்டார். நன்றாகக் கழுவி, கையிலை எடுத்துக் கொண்டு வீட்டுக்குள் போனார். மாலையும் கழுத்து மாக, பிரேம் போட்டு வைக்கப்பட்டிருந்த படத்தில் ராசாத்தி சிரித்துக் கொண்டிருந்தாள். படத்தட்டில் பூக்களை வைத்த சந்திரனால் விம்மலை அடக்கமுடியவில்லை. *“ராசாத்தி... நீ என்னை விட்டுட்டுப் போயிட்டியே!! நான் தனிய எவ்வளவு பாடுபடுகின்றேன், உனக்குத் தெரியும் தானேயடி உன்னை விட்டுட்டு என்னாலை இருக்க முடியாதென்று...”*

சந்திரனுக்கு அழுகையை அடக்கமுடியவில்லை. ஓவென்று கத்தியழத் தொடங்கினார். பழைய நினைவுகள் வேகமாகவரத் தொடங்கின. தலை கிறுகிறுக்கத் தொடங்கி



யது. ராசாத்தியம்மாவின் நினைவு அவரைவாட்டத் தொடங்கியது. கோபம், அழுகை, குழப்பம் என்று அவரின் மனம் குழம்பத் தொடங்கியது.

அன்றைய சம்பவம் நினைவுக்கு வந்தது. ஆறு வருடங்களுக்கு முன்னம் நடந்தாலும் ஆறாமல் அவர் மனதைச் சுட்டுக் கொண்டிருந்தது. சண்டைநல்லா மூர்க்கமா நடக்கத் தொடங்கிட்டுது.

“நாங்கள் எல்லாரும் மூட்டை முடிச்சுக்களோடை சனத்தோடை சனமாக வந்து கொண்டிருந்தோம். முள்ளிவாய்க்கால் ஆஸ்பத்திரியிலை நிறையச் சனம் இருந்ததுகள். கனக்கப்பேர் இருந்தால்ஷெல் அடிக்க மாட்டாங்கள் எண்டு நினைச்சிட்டு எல்லாரும் ஒண்டா நிண்டம். எங்களை எப்பிடியாவது யாராவது வந்து காப்பாத்திக் கொண்டு போயிடுவினம். எண்டு அடிமனம் சொல்லியது. திடீரென்று ஷெல்லடிக்கத் தொடங்கிட்டாங்கள். நான் பிள்ளையள் எல்லாரையும் பக்கத்திலை கூப்பிட்டு எல்லோரும் நிலத்திலை குப்பிறப்படுங்கோ எண்டு கத்திக் கொண்டே ராசாத்தியம்மாவைத் தேடினன். பிள்ளை அம்மா எங்கை? பெரிய சத்தமாக் கத்தினன்.

*“அப்பா, அம்மா அந்தக் கிணத்திலை கொஞ்சம் தண்ணியள்ள வெண்டுபோனவா... இப்ப என்னத்துக்குத் தண்ணியள்ளப் போனவள்... கடவுளே கிபீர் சுத்துது... நீங்கள் ஒருத்தரும் எழும்ப வேண்டாம், படுங்கோநான் பாத்திட்டு வாறேன்.*

*“அப்பா போகாதையுங்கோ”* எண்டு பிள்ளையள் கத்தக் கத்த, நான் இரண்டடி எடுத்து வைச்சிருப்பன், காதுகிழிந்த மாதிரி பெரிய சத்தம் கேட்டுது. எனக்கு விளங்கிட்டுது ஆஸ்பத்திரிக்குள்ளை ஷெல் விழுந்திட்டுது. ஆனா எங்களுக்கு பக்கத்திலையில்லை. கொஞ்சம் தள்ளித்தான். எனக்கு நெஞ்சுக்குள்ளை நடுக்கமா இருந்திச்சு.

*“ஐயோ! ராசாத்தி கடவுளே அவளுக்குஒண்டும் ஆகியிருக்கக் கூடாது.”*

கிணத்தடியிலை ஒரே புகை மண்டலமா இருந்திச்சு..நான், *“ராசாத்தி ராசத்தி...”* எண்டு கத்து கத்தெண்டு கத்தினேன். தொண்டையிலயிருந்து சத்தம் வரமாட்டேன் எண்டுட்டுது. எனக்கு ஏதோ நடந்திட்டுஎண்டு விளங்கிட்டுது.

*“கடவுளே நாகதம்பிரானே! ராசாத்திக்கு மட்டும் ஒண்டும் நடக்கக் கூடாது.”*

மனம் கடவுளிடம் மடிப்பிச்சை கேட்கத் தொடங்கியது. கிணத்தடியிலை ஒரே புகை மண்டலம்... எங்கடை தண்ணியள்ளுற பெரல் அதிலை விழுந்து கிடந்தது. இரத்த வெள்ளம் ஓடிக் கொண்டிருந்தது... அந்தக் காட்சியை கற்பனையிலை நினைச்சாலே செத்துப் போடுவம். அங்கங்கே சிதறிக் கிடந்த சதைக் கும்பலில்ராசாத்தி இருக்கக்கூடாது எண்டுமனம் சொன்னாலும் கண்ணில் அவளின் சட்டையின் துணியுடன் சதைக் கும்பல் சிதறியிருந்தது. அங்கங்கே மனித இரத்தம் ஆறாகப் பாய்ந்துகொண்டிருந்தது. மனம் ஒருகணம் எந்தச் சிந்தனையும் இல்லாமல் வெறுமையாகி திரும்பவந்தது.

*ஐயோ!ஐயோ!* என்று கத்தினேன். யாருமில்லாமல் காட்டில் நின்று கத்துவது போலவிருந்தது. பாய்ந்து என்னுடைய மனைவியின் உடலைத் தேடினேன். அள்ளிக் கூட்டிய குப்பையாக இருந்த அவளின் உடலை கட்டியணைத்து சற்றுநேரம் அழுதேன். தொடர்ந்து குண்டுகள் விழத் தொடங்கிவிட்டன. அவ்விடத்தில் நிற்கமுடியவில்லை. வேகமாகப் பக்கத்தில் இருந்தகிடங்கைக் கிண்டி அவளின் உடலைப் பொறுக்கிபோட்டு மூடி விட்டேன். கணநேரத்தில் நடந்து முடிந்த சம்பவத்தில் என்னையும் ஷெல் கொண்டு போய்விடவேண்டும் என்றுதான் மனம் கத்தத் தொடங்கியது. ஆனாலும் என்னுடைய பிள்ளையள்.

*ஐயோ,கடவுளே!*சோர்ந்துபோய் மீண்டும் பிள்ளையளுக்குப் பக்கத்திலை போயிருந்தன். எங்களைக் குடும்பத்தோடை ஷெல் கொண்டுபோகட்டும் எண்டு பேசாமல் இருந்தேன். *அம்மா எங்கை?* எண்டுபிள்ளையள் கேட்ட கேள்விக்கு என்னால் அழுகையை மட்டும் தான் வெளிப்படுத்த முடிஞ்சுது. அதுகளுக்கு விளங்கிட்டுது. மூத்தவள் கொஞ்சம் கெட்டிக்காரி. அவள் தான் மற்றப் பிள்ளையளையும் என்னையும் அங்கையிருந்து கூட்டிக் கொண்டு வந்தவள்.

*“அப்பா போவம் போவம்”* எண்டு அவள் கத்தியது இப்பவும் எனக்கு நினைவிருக்கு.

ராசாத்தியின் நினைவில் எனக்கு உடம்பெல்லாம் நடுங்கத் தொடங்கியது. கால் தானாகவே கள்ளுக்கொட்டிலைநோக்கிபோகத் தொடங்கியது. கள்ளைக் குடிச்சாத்தான் எல்லாம் மறந்து போகும். *“முந்தியெல்லாம்பத்து பதினைஞ்சு போத்தில் குடிச்சனான்.” இப்ப இரண்டு போத்திலெண்டாலும் வேணும். நல்லாக் குடிச்சுப் போட்டு,வந்துபேசாமல் படுத்தால் மனதுக்கு ஆறுதலாயிருக்கும். “அது இல்லாமல் நான் இருக்க மாட்டன்.”* சந்திரனின் வாயிலிருந்து உதிர்த்த வார்த்தைகள் இவை.

*“அப்பா முந்திக் குடிக்கிறேல்லை. அம்மா செத்ததோடை பழகிட்டார், ஆனால் குடிச்சால் ஒண்டுமே கதைக்கமாட்டார், சத்தம் போடமாட்டார், தானும் தன்ரை பாடும் என்றுபோய் படுத்திடுவார். அப்பாவாலை எங்களுக்கு ஒரு கரைச்சலும் இல்லை. எங்களுக்கு எல்லாம் செய்துதருவார். அம்மாவைத்தான் நினைச்சு அழுவார். முந்தியெல்லாம் கோயில் திருவிழா எண்டால் முன்னுக்கு நிப்பார், இப்ப எல்லாச் சாமியையும் திட்டித் தீர்த்துப் போடுவார். ஆறுவருசமாக் கோயில் ஒண்டுக்குமே போறேல்லை.”* இது பிள்ளைகளின் வார்த்தைகள்.

மீண்டும் காலை எழுந்து எல்லா வேலைகளையும் செய்து விட்டு, மாலை கள்ளுக் கொட்டிலுக்குப் போவதற்கான நேரத்தை எதிர் பார்த்துக் கொண்டிருக்கின்றார் சந்திரன்.

வாசகர்களிடமிருந்து கேள்விகள், கருத்துக்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. தரமானவை துறைசார்ந்த நிபுணர்களின் பதில்களுடன் வலம்புரியில் வெளியாகும்.

**அனுப்பவேண்டிய முகவரி : சாந்திகம் ஊடகக்குழு, 8, 8/1 கற்பகவிநாயகர் ஒழுங்கை, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.**

மின்னஞ்சல் மூலமாக அனுப்பப்படும் கேள்விகளும் கருத்துக்களும் ஏற்றுக்கொள்ளப்படும்:

Email: psych@sltnet.lk Face book : Shanthiham

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடிவைநோக்கிய பாதையில் எமக்கான நிறுவன அமைப்புகளின் உருவாக்கம் அவசியம்



ஈழத்தமிழரின் வாழ்வில் பல விடயங்களை அடிப்படையிலிருந்தும் ஆரம்பத்திலிருந்தும் தொடங்க வேண்டியுள்ளன. ஈழத்தமிழரின் விடுதலைக்கான அடிப்படை நிறுவன கட்டமைப்புக்கள் பற்றி இங்கு ஆராயப்படகிறது.

உதிரியாகவும் எதிரும் புதிருமாகவும் நாம் செயற்படுவதன் மூலம் மரத்தின் கிளையில் அமர்ந்துகொண்டு அக்கிளையை வெட்டுவதுபோல் எமக்கு நாமே தீங்கை தேடிக்கொண்டிருக்கிறோம். சரியான கருத்தாக்கமும் அதனை செயற்படுத்துவதற்கான நிறுவன அமைப்புக்களும் இருக்குமேயானால் இத்தகைய தவறுகள் தோன்ற இடம் இருக்காது.

எல்லாவற்றிற்கும் மேலாக எம்மிடம் சரியான கருத்து மண்டலம் இருக்க வேண்டும். அவ்வாறான கருத்து மண்டலத்தை உருவாக்குவது என்பது இலகுவான காரியமல்ல. ஏற்கனவே எம்மிடம் இருக்கும் கருத்து மண்டலம் எமது விடுதலைக்கு ஏற்றதாக அமையவில்லை என்பதை வரலாற்று நடைமுறைகள் மெய்ப்பித்து நிற்கின்றன.

விடுதலைக்கான திறப்புக் கோவையாக தேசிய அறிவியல் பணியகம் அமைக்கப்பட வேண்டும். இக்கோவை யில் சிந்தனையாளர் குழாம், தகவல் மையம் (Information Centre), இராஜ தந்திர அணி (The Diplomatic Corps), மொழிபெயர்புப் பிரிவு (Translation Bureau), கலை-இலக்கியத்திற்கான தேசிய அறிவகம் (National Academy for Art and Literature) என்பன பிரதான அங்கங்களாக அமையமுடியும். அவற்றின் முக்கியத்துவம் பற்றி இங்கு விரிவாக:

தமிழ்த்தேசிய அறிவியல் பணியகம் (Tamil National Science Bureau):

இன்றைய பொருளாதாரத்தை Knowledge Economy என அழைப்பர். அதாவது அறிவார்ந்த பொருளாதாரம் என்பதன் பொருள்: உற்பத்தி, விநி யோகம்-நுகர்வு என்பன அறிவியலை முதலீடாகக் கொண்ட பொருளாதார செயற்பாடாகும். மேலும் தொழிலாளர்கள், பணியாளர்கள், விளம்பரதாரர்கள் என்போர் அறிவியல் தரம் கொண்டவர்களாய் அமைய வேண்டும் என்பதுமாகும். இவ்வகையில் பொருளாதார நடத்தைக்கு பிரதானமாக அறிவியலை முதலீடாகக் கருதும் ஒரு முறைமையேயாகும் இது.

இது பொருளாதாரத்துக்கு மட்டுமல்ல சமூகத்திற்கும் அரசியலுக்கும் மொத்தத்தில் மனித நடத்தை அனைத்துக்குமே பொருந்தும்.

இன்று மனிதகுலத்தின் தலைவிதியை நிர்ணயிக்கும் தலைமை பாத்திரத்தை அறிவு, வகிக்கத் தொடங்கிவிட்டது. இந்த வகையில் ஆள்வோரும் ஆதிக்கம் செலுத்தும் சக்திகளும் அதற்கான பிரதான கருவியாக அறிவியலை ஆயுதமாக கொண்டு செயற்படுகின்றனர்.

விடுதலைக்கான பயணத்தை மேற்கொண்டிருக்கும் நாம் இதற்கான அறிவியல் ஆயுதத்தை முதலில் கையில் ஏந்த வேண்டும். அறிவியல் ஆயுதத்தை கையில் ஏந்துவதற்கு அறிவியல் அமைபபுக்கள் அவசியம். அறிவியல் அமைப்புக்கள் இன்றி எமக்கு வேண்டிய அளவில் நாம் அறிவியல் ஆயுதங்களை பெறமுடியாது.

இத்தகைய மையம் அறிவியல்பூர்வமாக அதாவது, விஞ்ஞான பூர்வமாக ஒரு பிரச்சனையை எடுத்துரைக்க ஏதுவாக அமையும். எம்மத்தியில் குழுவாதங் களையும், கருத்து பேதங்களையும் இலகு வாக களைய இது உதவக்கூடியதாக அமைவதுடன் ஒரு சரியான வழியிலும் செல்வதற்கான ஊன்றுகோலாய் அமைய முடியும்.

சிந்தனையாளர் குழாம் (Think Tank):

அரசியல், போராட்டம், கொள்கை வகுப்பு, பொருளாதாரம், வரலாறு, பாதுகாப்பு, சமூக பிரச்சனைகள், தேசிய நிர்மாணிப்பு, வெளிவிவகாரம், சுற்றுச்சூழல், தொழில்நுட்பம் போன்ற முக்கிய விடயங்களைப் பற்றி முற்றிலும் விஞ்ஞானபூர்மான திட்ட அறிக்கைகளை தயாரிக்கும் குழாமாக இச்சிந்தனையாளர் குழாம் அமையவேண்டியதுடன் இதுசார்ந்த அறிவியல் விடயங்களில் பொறுப்பேற்கவும், பொறுப்புக்கூறவும் வல்ல சிந்தனையாளர் குழாமாக இது அமையமுடடியும்

பொதுவாக இது கூட்டுப்பொறுப்புடன் செயற்படக்கூடியதாக இருப்பதுடன் அவசியமான இடங்களில் ஒருவரின் தனித்துவமான அறிக்கை சமர்ப்பிப்பிற்கும் இதில் இடம் இருக்கவேண்டும். கூட்டுப்பொறுப்பும் அதேவேளை ஒருவர் தற்துணிவுடன் தனித்துவமான ஒரு கருத்தை சொல்லவும் இதில் இடம் இருக்கவேண்டும். இறுதி அர்த்தத்தில் ஒருவரின் தனித்துவமான அறிக்கையானது செயல்வடிவம் பெறவேண்டிய இடத்து அது கூட்டுப்பொறுப்பான தீர்மானத்திற்கு கீழ்பட்டதாகவே அமையமுடியும். இச்சிந்தனையாளர் குழாம் கருத்தியியல் வடிவத்தில் தமிழீழ விடுதலைக்கான விஞ்ஞான பூர்வ வழிகாட்டி நெறியாக அமையமுடியும்.

தகவல் மையம் (Information centre):

இன்றைய உலகில் தகவல் ஆக்கத்திற்கும் ஆதிக்கத்திற்குமான காவு வாகனமாக அமைகிறது.

ஆதிக்க சக்திகளும் ஆளும் உயர்குழாமும் தாம் வரும்புகின்ற வடிவில் இந்த உலகத்தை படைக்க விரும்புகிறது. அதற்கு தகவலையே ஆயுதமாக கொள்கிறது. இவ்வாதிக்கச் சக்திகள் தமது விருப்பத்தை மக்களின் விருப்பமாக்குவதற்கு பெயரே தகவல் ஆதிக்கமாகும். அதாவது தமது சொந்தத் தேவைகளையும் விருப்பங்களையும் மக்களின் விருப்பங்களாக அவர்கள் வடிவமைத்து காட்டுவதுடன் மக்களை தமது நலன்களுக்கான பண்டங்களாக்கி விடுகிறார்கள். அதாவது தமது தேவைக்கேற்ப வாழும் பொருட்களாக, பயன்படுத்தக்தக்க பண்டங்களாக மக்களை அவர்கள் தமது தகவல் ஆதிக்கத்தின் மூலம் வடிவமைத்து விடுகிறார்கள். இது அரசியல், பொருளாதாரம், வாழ்நிலை, போராட்டம் என்ற அனைத்திற்கும் பொருந்தும். ஒடுக்கும் சிங்கள அரசும் ஆளும் குழாமும் ஒடுக்கு முறைக்கு பொருத்தமாக கருத்துலகத்தை உருவாக்கி அதற்கேற்ப தமது சிங்கள மக்களை வடிவமைத்து அதன்வழி தமிழ்மக்களை ஒடுக்குவதில் வெற்றிபெறுகிறார்கள். அதேவேளை சிங்கள அரசு தகவல் ஆதிக்கத்தால் உள்நாட்டு வெளிநாட்டு ரீதியில் தமிழ்மக்களை ஒடுக்குவதற்கான அரசியல், இராணுவ, இராஜதந்திர மற்றும் கருத்துலக இயந்திர அமைப்பை உருவாக்கி அந்த இயந்திரத்தால் ஒடுக்குமுறையை வெற்றிகரமாக்குகிறார்கள். இந்தவகையில் தகவல் ஆதிக்கத்தை சரிவர புரிந்து அதனை எதிர்கொள்ளவல்ல ஒரு கருவியாக ஈழத்தமிழர்கள் ஒரு தகவல் மையத்தை உருவாக்க வேண்டும்.

தமிழர் போராட்டமானது, எதிர்நிலை கருத்தாக்கத் தகவலால் சுற்றி மூடிக்கட்டப்பட்டுள்ளது. இத்தகைய தவறான எதிர்நிலைத் தகவல் வலையமைப்பை தகர்த்தெறியாமல்நம் விடுதலை சாத்தியப்படாது. உண்மையில் பெரும் இழப்புகளுக்கும் அழிப்புகளுக்கும் உள்ளாகியிருக்கும் மக்கள் அரும்பெரம் தியாகங்களைச் செய்துள்ள போதும் உலக அரங்கில் எதிரணியாகவே பார்க்கப்படுகின்றனர்.எம்பக்கம் நீதியும் ஞாயமும் உண்மையும் உண்டு.ஆனால் அது சரியான கருத்து ஆக்கத்தையோ பொருத்தமான தகவல் வலையமைப்பையோ பெறவில்லை.

இராஜதந்திர அணி (The Diplomatic Corps):

சுமாராக ஐந்து நூற்றாண்டுகளாக அரச பராம்பரியத்தை இழந்த மக்களாக உள்ளோம். ஆதலால் தொழில்சார் இராஜதந்திர மரபு எம்மிடம் இல்லை. அதேவேளை பொதுவாக எமது பாரம்பரிய அரசியல் தலைவர்கள்கூட முழுநேர அரசியல்வாதிகளாக அல்லாமல் பகுதிநேர அரசியல்வாதிகளாக காணப்பட்டமையால் இராஜதந்திர கலாச்சாரம்உருப்பெறமுடியாதுபோய்விட்டது.

எமது பாரம்பரிய அரசியல் தலைவர்களின் செயற்பாட்டில் அரசியல் சார்ந்த நிர்வாக நிறுவன அமைப்புக்கள், அதற்கான அதிகாரிகள் அமைப்புக்கள் என்பன தோன்றவில்லை. இதனால் இராஜதந்திர அணி உருப்பெறுவது சாத்தியமற்றுப் போனது. அதேவேளை அறிவியல் அர்த்தத்தில் பன்னாட்டு உறவுகள், மற்றும் சர்வதேச அரசியல் சார்ந்த கற்கை நெறிகளில் பொதுவாக தமிழ்த்தரப்பு ஈடுபட்டது அரிது. [illegible] சிங்கள அரசு சார்ந்து இத்துறைகளுக்கான நலன்கள் காணப் பட்டமையால் தமிழ்த்தரப்பு இதில் ஈடுபடு வது சாத்தியமற்று இருந்தது அல்லது இத்தகைய கற்கை நெறிகளில் ஈடுபடுவ தினால் வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார நலன்கள் தமிழ்த்தரப்புக்கு கிடைக்க முடியாது என்பதனால் ஆரம்பத்திலிருந்தே தமிழ்த்தரப்பால் இத்துறை பெருமளவு புறக்கணிக்கப்பட்ட ஒன்றாகவே உள்ளது.

ஆனால் இரத்தம்தோய்ந்த, பெரும் தியாகம் நிறைந்த விடுதலைப் போராட்டத்தின் பின் இத்துறையின் அவசியம் பெரிதும் உணரப்படுகிறது. இதற்கு துறைசார்ந்த நிபுணர்களை உணர்வுபூர்வமாக உருவாக்க வேண்டியுள்ளது.

மொழிபெயர்ப்பு பிரிவு (Translation Bureau):

ஈழத்தமிழர்கள் தமக்கான நீதி, நியாயம், உண்மைகளை வெளி உலகதிற்கு சொல்வதற்கும் தமக்கு பொருத்தமான -பிறமொழியில்உள்ள சிந்தனைகளை தமிழில்படிப்பதற்கும்ஒரு மொழிபெயர்ப்புப் பிரிவு அவசியம். இப்பிரிவானது தமிழில் இருந்து ஆங்கிலம், இந்தி, மலையாளம், பிரஞ்சு, டொச்சு ஆகிய மொழிகளில் முதலும் பின்பு சாத்தியமான அவசியமான மொழிகளிலும் மொழிபெயர்ப்பு செய்வதற்கான ஓர் அமைப்பாக இருக்கமுடியும். கூடவே பிறமொழிகளில் இருந்து தமிழுக்கு சிறந்த சிந்தனைகளை மொழியாக்கம் செய்ய வேண்டும். இத்துடன் ஒரு வெளியீட்டுப் பிரிவும் இணைந்து செயற்படுதல் நன்மை பயக்கும்.

கலை இலக்கியத்திற்கான Njrpa mwptfk; (National Academy for Art and Literature)

ஈழத்தமிழர்கள் உலக நாகரிகத்திற்கும் மனிதநேயத்திற்கும், விடுதலை மற்றும் ஜனநாயக விழுமியங்களுக்கும் மிகப்பெரும் பங்களிப்பைச் செய்யவல்ல பொக்கிஷமான அனுபவத்தை இரத்தமும் தசையுமாக கொண்டுள்ளனர். இதனை கலை, இலக்கிய படைப்புக்களாக்கி உலகளாவிய மனித நாகரீகத்திற்கு பங்களிப்புச் செய்யவேண்டிய, செய்யக்கூடிய நிலையிலும் பொறுப்பிலும் ஈழத்தமிழர் உள்ளனர். அதற்கான அறிவார்ந்த அமைப்பாக இதனை கட்டியெழுப்ப வேண்டும்.

மேற்கூறிய அனைத்தின் பொருட்டும் உணர்வுபூர்வமாகவும், விசுவாசமாகவும், புத்திபூர்வமாகவும் நாம் செயற்படத்தவறினால் எம் மக்களின் எதிர்காலம் இப்போது இருப்பதைிட மிகமோசமான நிலையை அடைவதை யாராலும்தவிர்க்க முடியாது.

நன்றி இணையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மரணவீடொன்று அந்த ஊரையே அமளிப்படுத்திக் கொண்டிருந்தது. வீட்டிலிருந்து சுடுகாடுவரை பச்சைத்தோரணங்களும் வாழைகளுமென தெருவின் இருமருங்குகளும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. இடையிடையே ஒலிபெருக்கிகளும் கட்டப்பட்டு சோக கீதம் அதில் ஒலித்துக்கொண்டிருந்தது.

கமாலாம்பிகை, தன் இறுதி மூச்சை விட்டு இன்றோடு ஏழுநாட்களாகிவிட்டன. இன்றுதான் அவளது வெற்றுடல் தகனமாகப்போகிறது. ஏறக்குறைய வளவு முழுவதிலுமே தற்காலிகப் பந்தல்கள் போடப்பட்டு நிரையாக இருக்கைகள் வைக்கப்பட்டிருந்தன. தெரிந்தவர்கள், உற்றவர்கள், உறவுகள் என பலதரப்பட்டோரும் அங்கு பிரசன்னமாகியிருந்தனர். அந்த ஆடம்பரமான மரணச் சடங்கைக் கண்ணுறுவதில் அவர்களுக்கு அத்தனை ஆர்வம் இருந்ததில் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை.

காலை பத்துமணிக்கு மரணச் சடங்குகள் ஆரம்பமாகி பகல் பன்னிரண்டு மணிக்கு இறுதி ஊர்வலம் ஆரம்பமாகும் என யாழ்.குடாவிலிருந்து பிரசுரமாகும் அத்தனை பத்திரிகைகளிலும் மரண அறிவித்தல் வெளியாகியிருந்தது. ஒலிபெருக்கியில் ஆணும் பெண்ணுமாக இருவர், மாறி மாறி உருக்கமான கவிதைகளை வாசித்துக் கொண்டிருந்தனர். அதிலும் அந்தப் பெண்குரல், விம்மி விம்மி வாசித்தபோது, இளகிய உள்ளம் கொண்டவர்கள் தம்மை அறியாமலே துளிர்க்கும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டனர். மற்றவர்கள் வாயைப் பிளந்து அதிசயித்தவர்களாய் அந்த மரணநிகழ்வை விமர்சிப்பதில் ஈடுபட்டனர்.

"என்ன இருந்தாலும் கமலா கொடுத்து வைத்தவள்தான். பெத்தவள் செத்துப்போனாள் என்றதும் பிறநாட்டிலிருந்து ஓடிவந்து தாய்க்கு கடமை செய்யவேணுமெண்டு நினைக்கிறவை எத்தனைபேர்."

"சரியாய்ச் சொன்னாய்போ. போனமாசம் உவர் கடைக்கார கந்தசாமி அண்ணை செத்ததுக்கு பெத்ததுகள் ஒண்டும் வெளிநாட்டிலேயிருந்து வரேயில்லை. ...பிறகு அந்தாளின்ரை பெறாமேனெல்லே கொள்ளி வச்சது. இந்தக் காலத்தில பெத்ததுகளுக்கு வந்து கடமை செய்வினம் எண்டு எதிர்பார்க்கிறது வீண் கண்டியோ."

"ம் ...! எல்லாம் கலியுமகமாய்ப் போய்ச்சுது. என்னதான் பாசத்தைக் கொட்டி வளர்த்தாலும் சிலதுகள் தங்களுக்கென்று ஒரு வாழ்க்கை வந்ததும் பெத்ததுகளை மறந்து போயிடுதுகள்."

"இவன் ரூபன் தகப்பனில்லாமல் வளர்ந்தவன். தாய்க்கு ஒரே பிள்ளை. ஏன் கொஞ்ச நாள் கமலாக்காவையும் கூட்டிக்கொண்டுபோய் தன்னோட வைச்சிருந்தவன். அவதான் அங்கத்தைக் குளிரில தன்னால இருக்க முடியாதெண்டு சொல்லி இஞ்சை ஓடி வந்திட்டா."

"ஓ ... எனக்கு அது தெரியும்தானே. கமலா என்ணட்ட சொன்னவள். இஞ்சை மாதிரி அங்கை விட்டுவீதியாய் உலாவித்திரிய ஏலேதாம். வீட்டுக்கை அடையுண்டு கிடக்க தனக்குப் பிடிக்கேல்லையாம். எண்டாலும் ரூபன் மாதம் மாதம் காசு அனுப்பிறவன் தெரியுமோ."

"மனுசி பெடியனைப் பாடுபட்டு வளர்த்ததுக்கு நல்ல பலனை அனுபவிச்சுப் போட்டுது. இருக்கேக்கயும் சரி, செதத்பிறகும் சரி. எணை! உந்த வெத்திலத்தட்டத்தை ஒருக்கா இஞ்சால எடுத்துத்தா."

தட்டத்திலிருந்த வெற்றிலை ஒன்று, காம்பு கிள்ளப்பட்டு சீவல்பாக்குடன் சுண்ணாம்பு தடவப்பட்டு சுருட்டி வாய்க்குள் திணிக்கப்படுகிறது. மென்று அசைபோட்டதால் சிறிது நேரம் பேச்சும் தடைப்பட்டது.

இதற்கிடையில் பாட்டுக்காரர்களின் வருகையால் அங்கு சற்று அமைதி நிலவியது. தேவாரங்கள் ஒலிக்கத் தொடங்கின. கவிதைகள் ஓய்ந்து போய்விட்டன.

நட்டநடு ஹாலில் கமலாம்பிகையின் உடல், காண முடியாதவாறு கறுத்துப் போய் விலையுயர்ந்த பெட்டிக்குள் அடைக்கலமாகிக் கிடந்தது. உயிரற்ற அந்த மேனியைச் சுற்றிலும் வண்ண நிறங்களுடைய உயிர்ப் பூக்கள் அலங்கரித்தன. கண்டியிலிருந்து அந்தப்பூக்களை வரவழைத்ததாக அங்குள்ளவர்கள் பேசிக்கொண்டனர்.

பெண்கள், வெற்றிலையை மெல்லவதும், அங்கு காணும் காட்சிகளை வியந்து கதையளப்பதுமாக ஒரு புறமிருக்க, ஆண்கள் வெளியே போடப்பட்டிருந்த பந்தலுக்குள் அமர்ந்து அளவளாவிக்கொண்டிருந்தனர். ஏறத்தாழ அனைவரதும் வாய்களிலும் அங்கு வைக்கப்பட்டிருந்த உயர்ரக சிகரெட் புகைந்துகொண்டிருந்தது. புகை மூட்டத்துக்குள் மூழ்கி இருந்த அவர்களில் ஓரிருவர் இருமியவாறிருந்தனர். வழமையாக சுருட்டு பிடிப்பவர்களும் ஓசியில் கிடைத்த அந்த உயர்ரக புகையை ஒருதரம் இழுத்துப் பார்த்து விடலாம் என்ற நப்பாசையுடன் செயலில் இறங்கிவிட்டனர்.

சரியாகப் பத்துமணிக்கு மரணச்சடங்குகள் ஆரம்பமாகின. ரூபன், மாறுகரை வேட்டியும் சால்வையும் அணிந்து தாய்க்கு கிரியைகள் செய்ய ஆயத்தமானான் ... அவுஸ்திரேலியாவில் அவனுடைய மனைவி அன்புக்கரசியும் பிள்ளைகளும் அவர்களது சுற்றத்தவரும் கணினித் திரையில் ஸ்கைப் மூலம் நேரிடையாக இங்கு நடந்துகொண்டிருந்த கிரியைகளைப் பார்த்துக்கொண்டிருந்தனர்.

கிரியைகள் அனைத்தும் முடிந்து வாய்க்கரிசி போடும் தருணம் வந்தது.. சில்லறைக் காசுக்குப் பதிலாக ஆயிரம், ஐந்நூறு நூறு, நூறு எனத் தாள்கள், நெருங்கிய உறவினர்களிடம் கொடுக்கப்பட்டன. அவர்களுள் சிலர், மெதுவாக காசைக் கைக்குள் பொத்திக் கொண்டே வாய்க்கரிசி போடாமலே சுருட்டிக்கொண்டு வந்துவிட்டனர். இதை எவரும் கவனித்ததாகத் தெரியவில்லை. தப்பு அவர்களிடமில்லை. தாளாகக் கொடுத்தால் எவருக்குத்தான் சபலம் ஏற்படாது.

ஒருவாறு இறுதி ஊர்வலம் புறப்படத் தயாராகிவிட்டது. நன்கு அலங்கரிக்கப்பட்ட தண்டிகையில் உடலம் அடங்கிய பெட்டி வைக்கப்பட்டு ரூபனின் நண்பர்கள் சகிதம் உறவினர்கள் சிலருமாக அதனைக் காவியவாறு நடக்க ஊர்வலம் ஆரம்பமாகியது. வீட்டிலிருந்து சுடுகாடுவரை வெள்ளை விரிக்கப்பட்டு அதன்மேல் நடந்து சென்றனர். எல்லாம் ரூபனது நண்பர்களின் ஏற்பாடுதான்.

பட்டாசுகளின் வெடியோசை வானைப்பிளந்தது மட்டுமல்லாமல், தெருவெங்கும் புகை [illegible] தோடு, சுவாசிப்பதற்கும் சிரமத்தை ஏற்படுத்தியது.

பறை, பாண்ட் வாத்தியங்களால் விண்ணதிர்ந்தது சமர்க்களத்தைப்போல.

தெருவில் நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த மூதாட்டியொருத்தி சொல்லிக்கொண்டிருந்தாள்... "அநியாமாய் வெடியைக் கொளுத்தி காசை நாசமாக்கிறவங்கள், ஏழை எளியதுகளுக்கு குடுத்திருந்தாலும் புண்ணியமாயப் போயிருக்குமே!" அவளது வயித்தெரிச்சல் ஞாயமானதுதான். அவளும் வயிற்றுப்பாட்டுக்கு அன்றாடம் அல்லற்படுபவள்தான். மரணவீட்டில் பரிமாறப்பட்ட சோடாவை ஒரு கைபார்த்துவிட்டதில் அவளுக்கு வயிற்றுக்குள் கடமுடத்தது. இனியும் வேடிக்கை பார்க்க முடியாது என்ற கட்டத்தில் வீட்டை நோக்கி நடையைக் கட்டினாள்.

வாசல் வரை பிரேதத்தைப் பின் தொடர்ந்து வந்த பெண்கள், இருவர், மூவராகப் பிரிந்து தங்களுக்குள் குசுகுசுக்கத் தொடங்கினர்.

மங்களக்கா! ...மெதுவாக மங்களக்காவின் அருகில் சென்றாள் ஒருத்தி. மங்களக்காவின் காதருகே கிசுகிசுத்தாள் ... "கமலா மாமி ... தொண்டைக்குத் தண்ணி ஊத்த ஆளில்லாமல் ... தவிச்சுப்போய்க் கிடந்துதான போறா...!" இப்ப பாத்தியே... ஆரவாரத்தையும் ஆடம்பரத்தையும்...!

சொன்னவள் நாடியை தோள்ப்பட்டையில் இடித்துக் கொண்டாள்.

என்னடி பிள்ள, என்ன சொல்லுறாய் நீ.

"பின்னையென்ன சம்பளத்துக்கு ஆள் வைச்செல்லே கடைசி நேரத்துல அவவைப் பாத்தவை. விடியப்புறம் போல- சம்பளத்துக்கு நிண்டவள், வேலிக்குள்ளால எட்டி என்னைக் கூப்பிட்டாள். 'அக்கா ஒருக்கா வந்து பாருங்கோ. [illegible] மனுசி பேச்சு மூச்சில்லாமல் கிடக்குது' எண்டு. பின்ன ... நானும் போய் எட்டிப்பாத்தன். மனுசி எப்பவோ செத்து உடம்பு விறைச்சுப்போய்க் கிடக்குது. கண்ணுக்குள்ள எறும்பு கூட மொய்க்கத் தொடங்கீட்டுதெண்டாப் பாரென்."

"மெய்தானே சங்கதி. மனுசிக்குக் கடுவல் எண்டு அறிஞ்ச உடனேயாவது பிள்ளைகள் வந்து பக்கத்தில் இருந்து பாத்திருக்கலாமே. பிறகேன் உந்த ஆடம்பரங்கள் ...!"

"எணை அக்கா! உப்பிடிச் சொல்லாத. நாளைக்கு எங்களுக்கும் என்னென்ன கதியோ. ஆர்கண்டது."

யாரோ அவளை அழைக்கவும் அவள் கதையை துண்டித்துவிட்டு விட்டுக்குள் போய்விட்டாள்.

அன்றைய இரவு ரூபனும் நண்பர்களும் அசதியைக் கலைக்க உறக்கத்தில் மூழ்கிப் போயிருந்தார்கள். தலைமாட்டில் கிடந்த கைபேசி கிணுகிணுத்தது. அவனது மனைவி அன்புக்கரசி, எடுத்திருந்தாள். அனுக்கத்துடன் புரண்டவன், கைபேசியை எடுத்து "ஹலோ" சொன்னான்.

என்னப்பா செய்யிறியள்?

"சாமத்தில என்ன செய்ய முடியும், நித்திரைதான் கொண்டனான். ஏன் இப்ப எடுத்தநீர்?"

"எப்ப வெளிக்கிடுறியள் எண்டு கேக்கத்தான்."

"நாளைக்கு அம்மாவின்ரை எட்டுச் செலவை முடித்துக் கொண்டு வாறன். என்ன!"

"அள்ளிச் செலவழிக்காமல் எட்டுச் செலவையாவது சுருக்கமாய்ச் செய்யுங்கோ. இஞ்சை தவணை சொல்லி வாங்கின கடன் கொடுக்கவேணும்."

"எப்பன் அடக்கி வாசியும். என்ரை பிரண்ட்ஸ் பக்கத்தில படுத்திருக்கிறாங்கள். கேட்டிடப்போகுது."

"சரிசரி. கெதியாய் வந்து சேருங்கோ. இஞ்சை உங்களுக்கு ஓடர்ஸ் ரெண்டு-மூண்டு வந்திருக்குது. உங்களை கேக்காமல் நான் என்னெண்டு எடுக்கிறது. அதுதான் கேப்பமெண்டு எடுத்தனான்."

"எப்படியும் பத்தாந்திகதி அங்கை நிப்பன். நீர் அந்த டேற்றுக்குப் பிறகு வாற ஓடர்ஸை எடும். நான் வந்திட்டால் சமாளிப்பன்தானே."

"சரியப்பா நான் வைக்கிறன்."

"வைச்சிடாதையும். அவசரப்பட்டான் ரூபன். கைபேசியுடன் எழுந்து முற்றத்துக்கு வந்தான். இஞ்சாரும் அன்பு...! எப்படியாவது கொஞ்சக்காசு மாறி, என்ரை நம்பருக்கு போட்டுவிடும். நாளைக்கு செலவுக்கு சாமான்கள் வாங்க காசு பத்தாமலிருக்கு."

"ம் ..நான் ஆரிட்டவாங்கிறது... ஆ ... எதுக்கும் யோசிக்காதையுங்கோ ... நான் தெண்டிச்சு போட்டு விடுறன்."

ரூபன், நிம்மதிப் பெருமூச்சுவிட்டான். அந்த நிம்மதியிலும் ... ஓர் நெருடல்...! உண்மையான நிம்மதி ... வாழ்வின் நிம்மதி...! அது எப்ப கிடைக்கும்? ... எங்கே கிடைக்கும்...?

**மலரன்னை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திட்டமிடாத குற்றச்செயலானாலும்

# குற்றம் குற்றமே!

இலங்கையில் இடம்பெற்ற யுத்தம் தமிழினத்திற்கு பேரழிவை ஏற்படுத்தியிருந்தது என்பதை உலகநாடுகள் நன்கு அறிந்திருந்ததால் யுத்தக்குற்றச்சாட்டுகள் தொடர்பில் சர்வதேச விசாரணையை முன்னெடுக்க தீர்மானித்திருந்தன.

மகிந்த அரசு சர்வதேச விசாரணைக்கு உடன்பாடு தெரிவிக்காத நிலையில் ஐக்கிய நாடுகள் சபை அமெரிக்கா போன்ற நாடுகளின் வழிநடத்தல்களுக்கு அமைவாக சர்வதேச ரீதியாக விசாரணைகளை மேற்கொள்ளவென ஆணைக்குழுவினையும் அமைத்திருந்தது.

போரில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள், மனிதகுலத்துக்கு எதிரான வன்முறைகள் குறித்து சர்வதேச விசாரணை மூலமே உண்மையைக் கண்டறிய முடியும் என்று தமிழர் தரப்பு முழுமையாக நம்பிக்கை கொண்டதனாலும் உள்ளகப் பொறிமுறையில் நம்பிக்கையீனம் உள்ளதாலும் சர்வதேச விசாரணை வேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்றது.

ஐக்கிய நாடுகள் சபைவரை தமிழரின் நியாயமான கோரிக்கை எதிரொலித்ததன் பயனாக இலங்கை அரசிற்கு எதிராக யுத்தத்திற்குப் பின் பிரேரணைகள் கொண்டுவரப்பட்டிருந்தன. இன்னும் கொண்டுவரப்படும் என்ற நம்பிக்கையினையும் சர்வதேசம் ஏற்படுத்தியுள்ளது.

போரில் கொல்லப்பட்டவர்கள் தொடர்பான உண்மைகளைக்கூட மறைக்கும் தரப்பாக இலங்கை அரசு உள்ளதால் யுத்தக்குற்றச்சாட்டுக்கள் குறித்த சர்வதேச விசாரணைக்கு அச்சம் கொண்டுள்ளது. இதனால் தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வருகின்றது.

இந்நிலையில் மகிந்த ஆட்சியில் போரை வழிநடத்திய இராணுவத் தளபதியாகயிருந்த பீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகா அண்மையில் வெளியிட்ட கருத்து பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

“நான் இராணுவத் தளபதியாக கடமையாற்றியகாலத்தில் பாலியல் வன்கொடுமைகள், சித்திரவதைகள் இடம்பெறவில்லை. இருப்பினும் சில குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளமை குறித்து எனக்குத் தெரியும். எனினும் சர்வதேச சமூகத்தின் மீதோ ஊடகங்கள் மீதோ இந்தக் குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் போர் தொடுப்பது நியாயமற்றது. யுத்தத்தின் போது சில குற்றச் செயல்கள் இடம்பெற்றிருக்கலாம். எவ்வாறெனினும் இவை திட்டமிட்ட அடிப்படையில் மேற்கொள்ளப்படவில்லை. இதுவே எனது தெளிவான நிலைப்பாடாகும். அப்போது நாங்கள் குற்றமற்றவர்கள் என்பதனை நிரூபித்துக்காட்ட முடியும். இராணுவத்தினர் ஒட்டுமொத்த குற்றச்செயல்களில் ஈடுபடவில்லை என்பதனை உத்தரவாதத்துடன் குறிப்பிட முடியும்” மேற்கண்டவாறு சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு அண்மையில் அளித்த பேட்டியில் விபரித்துள்ளார் சரத்பொன்சேகா.

இந்த விளக்கம் இலங்கை அரசு யுத்தக்குற்றச் செயல்கள் குறித்து விசாரணையை முன்னெடுக்கத்தயாராகவுள்ளது என்று இன்னும் பல ஆண்டுகளுக்கு கூறிக்கொண்டே இருக்கும் என்பதையும் அவ்வாறு விசாரணை நடத்தப்பட்டாலும் அது உள்ளகப் பொறிமுறையில் இடம்பெறுமே தவிர சர்வதேச விசாரணைக்கு வாய்ப்பில்லை என்பதையும் வெளிப்படுத்தியுள்ளது.

இராணுவத்தினர் போர்க் குற்றங்களில் ஈடுபடவில்லை என்பதை உத்தரவாதத்துடன் குறிப்பிடும் சரத்பொன்சேகா, யுத்தத்தின் போது சில குற்றச்செயல்கள் இடம்பெற்றிருக்கலாம் எவ்வாறெனினும் இவை திட்டமிட்ட அடிப்படையில் மேற்கொள்ளப்படவில்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

திட்டமிட்டு மேற்கொண்டாலும் திட்டமிடாமல் மேற்கொண்டாலும் குற்றம் குற்றமே என்பதை சரத் பொன்சேகா அறிந்திருக்கவில்லையா? இல்லை தமது தரப்பினர் செய்ததால் அதை குற்றச்செயலுக்குள் ளடக்க அவர் விரும்பவில்லையா? அல்லது அதனை பெரிதுபடுத்தி சிக்கலுக்குள் தான் சிக்கிக்கொள்ள விரும்பவில்லையா? என்ற பல கேள்விகளையெழுப்பியுள்ளது.

திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டதா? இல்லையா? என்பதை குற்றம் சாட்டப்பட்ட தரப்பு ஆராய்வது குற்றத்தை மறைக்க மேற்கொள்ளும் நடவடிக்கையாக அமையலாம் எனில் சர்வதேச பக்கச்சார்பற்ற விசாரணை மேற்கொள்ளப்படும் போதுதான் இறுதிப்போரில் நடந்த உண்மைகள். மறைக்கப்பட்ட மனித குலத்திற்கு எதிரான வன்கொடுமைகள் வெளிப்படுமே தவிர சரத் பொன்சேகா கூறுவதைப் போன்ற அல்லது அவர் எதிர்பார்க்கும் விசாரணைகளை முன்னெடுப்பதனால் உண்மையைக் கண்டறியவும் முடியாது. நல்லிணக்கத்தை இலங்கையில் கட்டியெழுப்பவும் முடியாது. தமிழின அழிப்பைத் தடுக்கவும் முடியாது. இதனை சர்வதேச வல்லாதிக்கம்மிக்க நாடுகள் புரிந்துகொள்வது அவசியம்.

இலங்கை அரசு சர்வதேச விசாரணைகளிலிருந்து தப்பிப்பதற்கு அல்லது கால அவகாசத்தை பெற்றுக் கொடுப்பதிலும் வல்லாதிக்கம் மிக்க நாடுகளின் தலையீடுகள் அதிகமாகவேயுள்ளன.

ஆதரவுக்கரம் நீட்டுங்கள் என்று தமிழர் தரப்புக் கோரினாலும் அரசிற்கும் அவகாசம் கொடுக்க வேண்டிய நிலையில் அந்நாடுகள் உள்ளன என்பதை புரிந்து கொண்டு செயற்பட வேண்டிய நிலைக்கு தமிழினம் தள்ளப்பட்டுள்ளது உண்மைதான். அது தமிழினத்தின் விதி என்று ஆதங்கப்படுவதைத் தவிர வேறு மார்க்கங்கள் எதுவுமில்லை.

ஆட்சி மாற்றத்தின் பின்னரும் கூட தமிழினத்தின் விடியல் கானல் நீராகவேயுள்ளது. 100 நாட்கள் திட்டத்தில் மைத்திரி அரசும் தமிழரின் நலனில் அக்கறை காட்டத் தவறிவிட்டது என்ற குற்றச்சாட்டை மறுதலிக்க முடியாது.

100 நாட்கள் திட்டத்திற்குள் யாழ்.வலிகாமம் வடக்குப் பகுதியில் இராணுவத்தினால் உயர்பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்ட தமிழ் மக்களுக்குச் சொந்தமான 6 ஆயிரத்து 500 ஏக்கர் காணியில் வெறும் ஆயிரம் ஏக்கர் காணிகளையே விடுவிக்க அரசு முன் வந்துள்ளது.

நல்லாட்சியின் சமிக்ஞையாக இதைப் பார்க்க வேண்டும் என்று அரசு வலியுறுத்தினாலும் அதை அப்படியே முழுமையாக ஏற்றுக்கொள்ளும் மனநிலையில் தமிழ்மக்கள் இல்லை என்ற உண்மையை மைத்திரி அரசாவது புரிந்துகொள்வது அவசியம்.

காணாமற்போனவர்களின் குடும்பங்களின் அவலநிலைக்கும், இடம்பெயர்ந்த மக்களின் துன்பத்தைப் போக்கவும் ,அரசியல் ரீதியான ஒரு தீர்வினை முன்வைப்பதற்கும் முன்வராமையே மைத்திரி அரசின் மீதும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறு தமிழினத்தின்பால் மத்திய அரசு அதிகளவு கரிசனையைக் காட்டத்தவறிவிட்டது என்ற குற்றச்சாட்டு உறுத்திக் கொண்டிருக்கும் நிலையில் புங்குடுதீவில் மாணவி படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன யாழ்ப்பாணத்திற்கு நேரடியாகவே வந்து ஆராய்ந்து சென்றுள்ளமை தமிழ் மக்களுக்கு ஓரளவுக்கேனும் மன ஆறுதலைக் கொடுத்துள்ளது.

ஜனாதிபதியின் யாழ்.விஜயம் தமிழரைப் பொறுத்தவரை பெரும் வரவேற்பை பெற்றிருந்தது. அதே வேளை தென்னிலங்கையிலுள்ள சிங்கள இனவாதப் பேய்கள் எதிர்த்து அரசியல் செய்யும் சூழ்நிலைக்கும் வழிவகுத்திருந்தது.

ஒரு தமிழ்ப் பெண்ணின் படுகொலை தொடர்பாக உண்மை நிலையை அறியவும் அது தொடர்பாக விசாரணை மேற்கொள்ளவும் ஜனாதிபதி அந்த மாவட்டத்திற்கே செல்லவேண்டுமா? என்றும் இங்கும் பல பெண்கள் வன்புணர்வின் பின் படுகொலை செய்யப்படுகின்றனர். ஏற்கனவே பலர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். ஆனால் இதற்கெல்லாம் ஜனாதிபதி விசேட கவனம் செலுத்தவில்லை. ஏன் யாழ்ப்பாணத்தில் மாணவி படுகொலை செய்யப்பட்டது குறித்து மட்டும் விசேட கவனம் செலுத்துகிறார் என்று கொக்கரித்துக்கொண்டனர்.

மகிந்த ஆட்சியில் தமிழீழத்தில் அரங்கேறிய படுபாதகங்களையெல்லாம் கைகட்டி, வாய் பொத்தி பார்த்து ரசித்த அந்த அரக்கர்களுக்கு வித்தியாவின் கொலை குறித்து ஜனாதிபதி விசேட கவனம் செலுத்துவது அச்சத்தை ஏற்படுத்த வாய்ப்புள்ளது. அதேவேளை மைத்திரி ஆட்சியில் தமிழர் பிரதேசத்தில் நடந்த படுபயங்கரச் சம்பவம் புங்குடுதீவு மாணவியின் படுகொலையே என்பதை அவர்கள் புரிந்துகொள்ளவில்லை.

சிறுபான்மையினம் என்று சிங்கள பௌத்தர்களாலும் இனவாதிகளாலும் அடையாளப்படுத்தப்பட்டு அடக்குமுறைகளுக்குட்படுத்தப்பட்டுவரும் தமிழினம் எவ்வளவு உயிர்த்தியாகங்களை மகிந்த ஆட்சியில் செய்திருந்தது என்பதைக்கணக்கிட முடியாது என்பதனாலும் அவை அனைத்திற்கும் அனுதாபம் தெரிவிக்கக்கூட முடியாத மன நிலையில். ஆணவத்தில் இருந்தவர்களுக்கு ஜனாதிபதி மைத்திரியின் நடவடிக்கை அதிர்ச்சியை ஏற்படுத்தியிருப்பதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

தமிழினம் அழிக்கப்பட்ட போது ஆட்சியாளர்களுக்கு ஆதரவாகச் செயற்பட்ட பொதுபல சேனா போன்ற சிங்கள அமைப்புக்களின் பௌத்த துறவிகள் கூட வித்தியாவின் படுகொலையைக் கண்டிப்பதைவிடுத்து ஜனாதிபதியின் நடவடிக்கையினை சந்தேகக்கண்கொண்டு நோக்கியுள்ளனர். சிங்களவர்களுக்கு எதிரானவர் மைத்திரி என்ற மாயையை ஏற்படுத்தவும் அவர்கள் முயற்சித்துள்ளனர்.

இவற்றுக்கெல்லாம் மைத்திரி அரசு சோரம்போகாமல் வித்தியாவின் படுகொலை குறித்து உண்மைகளை அறிவதோடு இனப்படுகொலை குறித்த சர்வதேச விசாரணைக்கும் இடமளித்து இன்னுமொரு பேரழிவு இலங்கையில் இடம்பெறுவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

காண்டீபன்



## யுத்தக்குற்றச் செயல்கள் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள் ...

படம் : பார்த்திபன் கனவு
பாடியவர்கள் : ஏ.எம்.இராஜா - பி.சுசீலா
இசை : வேதா
இயற்றியவர் : விந்தன்
நடிப்பு : ஜெமினி கணேசன் - வைஜயந்தி மாலா
இயக்குனர் : டி.யோகானந்த்




இதயவானின் உதய நிலவே..
எங்கே போகிறாய்? நீ எங்கே போகிறாய்?..
ஒளியில்லாத உலகம்போல..
உள்ளம் இருளுதே..
என் உள்ளம் இருளுதே..

கண்கள் செய்த பாபம் உன்னைக்
கண்டும் காணாதேங்குதே..
கண்டும் காணாதேங்குதே..
பாய்விரித்து கப்பல் செல்ல..
பாவி நெஞ்சம் துடிக்குதே..
பாவி நெஞ்சம் துடிக்குதே..
இதயவானின் உதய நிலவே..
எங்கே போகிறாய்? நீ எங்கே போகிறாய்?..

இருளகற்றும் ஒளியென்று..
என்னை என்னும் நீ யாரோ?
என்னை என்னும் நீ யாரோ?
இருளகற்றும் ஒளியென்று..
என்னை என்னும் நீ யாரோ?
என்னை என்னும் நீ யாரோ?
கண்டு காணாதேங்கும் கண்கள்
காதல் கண்களோ?
காதல் கண்களோ?
இதயவானின் உதய நிலவே..
எங்கே போகிறேன்? நான் எங்கே போகிறேன்?

ஆசை நெஞ்சின் நேசக்கரங்கள்..
அணைக்க உன்னைத் தேடுதே..
அணைக்க உன்னைத் தேடுதே..
பறந்து வந்து உன்னைத் தழுவ..
பறந்து வந்து உன்னைத் தழுவ..
பாழும் சிறகு இல்லையே?
பாழும் சிறகு இல்லையே?
இதயவானின் உதய நிலவே..
எங்கே போகிறாய்? நீ எங்கே போகிறாய்?

**இப்பாடலை SMS மூலம் விரும்பிக் கேட்டவர்கள்:**

குமணன் கதிரவேலு- சுன்னாகம். மாணிக்கம் மயூரன்- சங்கானை. இராசையா புஸ்பதீபன்- சுழிபுரம். புவனேஸ்வரி கதிரவேலு- சுன்னாகம். அப்பா நல்லதம்பிக்காக. எஸ். சிவா- பருத் தித்துறை. தங்கைக்காக- டிஷாந்த். ஜீவராசா- ஜெயகௌரி. கிசான். நிசானி. சுணா. சங்கானை. இராஜேந்திரம். ராசாத்தி. உதிஸ் டன். துவாரகா. உதயகரசி- மாவிட்டபுரம். கோபிதாஸ். கேதீஸ் வரன். நவநீதன். புஸ்பராசா. பாரதி. கமலா. வினோதினி-மாவிட்டபுரம்.

அன்பு வாசகர்களே !

காலத்தால் அழியாத கானங்கள் பகுதிக்கு. தங்களுக்கு விருப்பமான பழைய பாடல்களின் முதற் பந்தியுடன் அப்பாடலையாருக்காக விரும் பிக் கேக்கிறீர்கள் என்பதையும் குறிப்பிட்டு. உங் கள் பெயர் முகவரி என்பனவற்றை ஆசிரியர். காலத் தால் அழியாத கானங்கள். வலம்புரி - சங்குநாதம். இல.3. 2 ஆம் ஒழுங்கை. பிறவுண் வீதி. யாழ்ப் பாணம் என்னும் முகவரிக்கு அனுப் பிவைங்கள்.

அல்லது 021-5671543 என்ற இலக்கத்திற்கு **SMS** செய்யுங்கள். நீங்கள் விரும்பும் பாடல் இப் பகுதியில் முழுமையாக பிரசுரமாக்கப்படும்.

# ஈழத்து சினிமா

## இலவு- குறும்பட விமர்சனம்




வெளிநாட்டு மாப்பிள்ளை, நல்ல சம்பந்தம் என்ற விம்பத்தில் அவசரமாக திருமணம் செய்யப்பட்டு பிற்பாடு முரண்நகையான அனுபவங்களை எதிர்கொள்ளும் நிலையை விளக்கும் குறும்படமே "இலவு". புலம்பெயர் ஆண்களுக்கு தாயகத்திலுள்ள பெண்களை திருமணம் செய்துகொடுக்க முன் தீவிர விசாரிப்புகள் தேவை என்ப தினை வலியுறுத்தும் கருவை இயக்குநர் வரோதயன் இலவு குறும்படத்தில் முன்வைக்க முற்பட்டுள்ளார்.

மூலக்கதை தெளிவாக இருந்தாலும் சொல்ல எடுத்துக் கொண்ட வடிவம் செய்நேர்த்தியின்றி அபத்தமாக இருக்கின் றது. பாத்திரங்களுக்கு இடையிலான கட்டமைப்புகள் முழு மையில்லாமல் பரிமாணிக்கின்றன. தந்தை மகளோடு அதீதபாசத்தில் இருக்கின்றார், வெறும் புரோக்கரின் வாய்மொழி பேச்சுக்கு ஒத்திசைந்து இயங்கி எந்த சிறிய விசாரிப்புக்களும் இன்றி பையனின் புகைப்படத்தை மகளுக்கு காண்பிக்கிறார். நமது பிரதேச சூழ்நிலையில் இவை யெல்லாம் சாத்தியமா? புரோக்கரிடம் உரையாடும் காட்சிகள் அறிவியல் சித்தரிப்புகள் இன்றி சொல்லப்படும் காட்சிக் கோர்ப்புக்களாக இருக்கின்றன. மாப்பிள்ளையின் குடும்பப் பின்னணியோ, சாதீயம் தொடர்பாகவோ அல்லது வேலை தொடர்பாகவோ பெண்வீட்டாருக்கு நம்பகத்தன்மை யைத் தரும் விடயங்கள் அடிப்படையாகவேயில்லை.

காட்டப்படும் காட்சியின் தொடர்ச்சியில் நம்பகத்தன்மை யதார்த்த சித்தரிப்புக்களின் மையத்தை விட்டுவிலகிக்கொ ண்டே இருக்கின்றன. சரியான விசாரிப்புகள் இன்றி வெளிநாட்டு ஆண்களுக்கு இங்கே உள்ள பெண்களை திருமணம் செய்துவைப்பதில் கவனம்தேவை என்ற விழிப்புணர்வை இயக்குநர் சொல்லவந்தால் அதில் அவரையறியாமலே அவர் தோற்றுள்ளார். மாப்பிள்ளையை விசாரிகின்றார்கள் அப்படியும்மீறி தவறுகள் நடைபெறு கின்றன என்பதினை இயக்குநர்சொல்ல முன்வந்திருந்தால் தர்க்காங்கங்களும் சொல்லவந்த பேசுபொருளும் உவப்பாக இருந்திருக்கும். குறும்படத்தில் விசாரிப்பு என்ற பேசுபொரு ளேயில்லை. தந்தையின் அழைப்பில்லாமல் புரோக்கர் வருகின்றார், பையனைப்பற்றி சொல்கின்றார், மகளின் தகப்பனார் பாடசாலை சென்றுகொண்டிருந்த மகளையும் ஒரேநாளில் தடுத்து திருமணம் செய்துவைப்போம் என்ற முடிவுக்குவருகின்றார். பாசமாக வளர்த்த தகப்பனின் மன எண்ண ஓட்டங்களின் மாற்றம் தொடர்பாக எந்த காட்சி விளக்கமும் இல்லை. படம் ஆரம்பிக்கும்போதே பார்வை யாளன் முடிவினையும் உய்த்தறிந்துகொள்கின்ற சூழல் இங்கேயுண்டு.

பெண் தனது ஆண்நண்பர்களை சந்திக்கும்போது இயல்பாகவே தனது கணவன்தொடர்பான கசப்பான விட யங்களை அறிந்துகொள்கின்றாள். இயல்பான விசாரிப்பிலே இந்த உண்மைகள் வெளிவரும்போது மிகவும் பாசமாக வளர்த்த தந்தையின் விசாரிப்புகள் ஏன் அபத்தமாக இருந்தன என்றகேள்விக்கு விடையில்லை.

ஒளிப்பதிவுகளில் முக்கியமான வசன அமைப்புகளை வெளிக்கொணர க்ளோஸ்-அப் காட்சிகளின் தேவைப்பாடுகள் அதிகமுண்டு. இக்குறும்படத்தில் முக்கியம் முக்கிய மின்மையை வேறுபடுத்தி பிரித்துக்காட்ட ஒளிப்பதிவுச் சட்டங்கள் உதவவில்லை. வெறும் படம்பிடித்துக்காட்டும் ஊடகமாக ஒளிப்பதிவு அமைந்திருக்கின்றது.

மெலிதாக ஒலிக்கும் சோகப்பாடல் உட்பட பின்னணியிசை காட்சிகளுடன் பொருந்த முற்பட்டாலும் இசையின் செறிவுத் தன்மையில் தொழில்நுட்பநேர்த்தியில்லை. காட்சிக்கோர்ப் புக்கள் இன்னும் செம்மைப்படுத்தப்பட்டு இருக்கலாம். செறிவான உள்ளடக்கத்தை உருவாக்கி தகப்பனுக்கும் மகளுக்கும் இடையிலான மன எண்ணவோட்டத்தை யதார்த்தம்மீறாமல் உருவாகியிருந்தால் இக்குறும்படம் கொண்டாடக்கூடிய வடிவத்தில் இருந்திருக்கும். இயக்குநர் இன்னும் பயிற்சியையும் நுண்ணிய அவதானிப்புகளும் அதிகரித்தால் அடுத்த கட்டத்துக்குச் செல்லமுடியும்.

அனோஜன் பாலகிருஷ்ணன்

## துர்க்கா

வார்த்தைகள் கீறும் போதுதான்
வாழ்க்கை இடைவெளி விட்டு நிற்பது
புரிகிறது
சிரிப்புகள் உதிர்ந்து
சத்தங்கள் நின்று
பக்கங்கள் மாறி நிற்கும் நேசங்கள்
தனிமைக்குள் என் இருப்பு வாழ்ந்து கொள்ள
சுயநலங்கள் இனங்காணப்படும் என் அழுகைகளும்
விசும்பல்களாக ஒலி இழந்து போக
சுவாலை விட்டு எரியும் தனிமைக்குள்
எரிந்து கொள்ளட்டும் வாழ்க்கை
உமிழும்
எண்ணெய் படிமங்களில் பற்றிக் கொள்ள
மேஜை மீது உட்கார்ந்திருந்தாள்
நீண்டு விரிந்த விரல்களும்
கனவுகள் நிறைந்த விழிகளும்
அவிழ்ந்து நெழிந்த கூந்தலில்
உயிர்த்திருந்தாள்.
அவன் கைகள் உரசிக் கொள்ள
உயிர்த்தது தீக்குச்சி தலை
நெருடல்கள் இல்லாமலே, நெருங்கினான்
பரவசத்தோடு அவள் தலையில்
பற்றிக் கொண்டது
ஆயுள் தேய்ந்த தீக்குச்சி
அங்குலங்கள் அகலமாகி வெளிச்சம் நிறைய
மௌனமான அலறல்களை மீறி
மிருகங்களின் சிரிப்பொலிகள்

கலையறிய கசங்கியவர்களிடம்
சிதைவதற்காக சிருஷ்டிக்கப்பட்டவள்
எரிந்து கொண்டிருந்தாள்

கரும் பாறைகளின் உச்சங்களை
தொட்டு அழுகின்ற
மோக அலைகளும் அலறுகிறது
கரைகளின் கன்னங்களை
முத்தமிட்டுத் திரும்பும்
ஏமாற்ற அலைகளும்
புரிந்து கொள்கிறது
நாதம் அறுந்து
அபஸ்வரம் பேசுகின்ற
தென்றலும் பாடுகிறது
இதோ! என் கண்ணீரை வாங்கி
கறுத்து நிற்கும்
மேகங்களும் மீண்டும் சொல்லிக் கொள்ளும்
அந்த மரணம் பற்றி
அப்போ நீ புரிந்து கொள்வாய்
பிடுங்கி எறிந்து போன நரம்புகளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சினிமா செய்தி



# மாஸ் திரைவிமர்சனம்







தமிழ் சினிமாவில் பேய் படங்கள் என்றாலே சிறு பட்ஜெட் படங்களாக தான் இருக்கும். ஆனால், இதையே நாம் புதிதாக செய்தால் என்ன? என்று வெங்கட் பிரபுவின் 7-ம் அறிவில் ஒரு மணி அடிக்க, மாஸ் ஹீரோ வான சூர்யாவை வைத்து மாஸ்..இல்ல மாஸி...அதுவும் இல்ல மாசு என்ற படத்தை இயக்கியுள்ளார்.

சூர்யா பேயாக ட்ரைலரில் கலக்க, சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை கண்டிப்பாக இந்த படத்தை முதல் நாளே பார்த்து விட வேண்டும் என்ற ஆர்வத்தை ஏற்படுத்தியது இந்த மாசு. பணமா அதற்காக என்ன வேண்டுமானாலும் செய்யலாம், என மங்காத்தா அஜித் ஸ்டைலில் எண்ட்ரி கொடுத்து, சிறுசிறு திருட்டை வெங்கட் பிரபுவின் டெம்லேட் ப்ரேம்ஜியுடன் சேர்ந்து செய்து வருகிறார். அப்படி ஒரு சம்பவத்தில் அடிதடி ஆகி தப்பிக்கும் போது ஒரு கார் விபத்தில் சூர்யாவிற்கு ஒரு சுப்பர் பவர் கிடைக்கின்றது.

இதன் மூலம் அவர் கண்களுக்கு ஆவிகள் எல்லாம் தெரிய, முதலில் பயந்து ஓட, பின் எதிர்த்து நின்று உங்கள் தேவைகள் என்ன என்று கேட்கின்றார். உங்களுக்கு நான் உதவ வேண்டும் என்றால், நான் சொல்வதை நீங்கள் செய்ய வேண்டும் என்று ஆவிகளுடன் டீல் பேசி பணம் சம்பாதிக்கிறார்.

இப்படி ஒரு வீட்டிற்கு போகும் போது அங்கு ஒரு சூர்யா ஆவியாக வருகிறார், அந்த சூர்யா கதாபாத்திரம் தான் ஈழத்தமிழன். அந்த சூர்யாவும், இவரிடம் உதவி கேட்க, மாஸ் சூர்யா பல பிரச்சினைகளில் மாட்டி கொள்கிறார். ஆவி சூர்யா ஏன் இப்படி செய்கிறார், இவருக்கும் மாஸ் சூர்யாவிற்கும் என்ன சம்மந்தம்? அந்த ஆவிகளின் ஆசைகளை சூர்யா நிறைவேற்றினாரா? என்பது தான் மீதிக்கதை.

## படத்தை பற்றிய அலசல்

எப்போதும் ஸ்மார்ட் லுக்கில் பார்த்து வந்த சூர்யா அயன் படத்திற்கு பிறகு சென்னை இளைஞனாக துறுதுறு என சேட்டை செய்கிறார். படத்தில் கதை இல்லையென்றாலும் என் தம்பி இருப்பான், என கூறும் வெங்கட் பிரபு இதிலும் சூர்யாவின் நண்பராக ப்ரேம்ஜியை Book செய்து விட்டார். அவரும் ஒரு சில இடங்களில் கிச்சுகிச்சு மூட்டுகிறார்.

குழந்தைகளுக்கான சில Graphics கலாட்டாக்களும் உள்ளது. ஈழத்தமிழனாக வரும் சூர்யா கதாபாத்திரம் மிக அழகாக உள்ளது. சூர்யா அப்படியே அந்த அழகு தமிழை பேசி நடித்துள்ளார். கருணாஸ், ஸ்ரீமன் என ஆவிகளாக வரும் அனைவரும் செம்ம கலாட்டா செய்துள்ளனர். படத்தின் இரண்டாம் பாதியை தூக்கி நிறுத்துவதே பார்த்தீபன் அடிக்கும் கவுண்டர் வசனங்கள் தான், அவருக்கே உண்டான ஸ்டைலுடன் தன் ஏரியாவில் கலக்கியுள்ளார்.


RD.ராஜசேகர் ஒளிப்பதிவில் எது வெளிநாடு, எது சென்னை என்று தெரியாத அளவிற்கு Colorfull ஆக உள்ளது. யுவன் பாடல்கள் கேட்கும் ரகம் என்றாலும், பின்னணி இசையில் கலக்கிவிட்டார். விஜய், அஜித் ரசிகர்களும் படத்தில் விசில் அடிக்க பல இடங்கள் உண்டு. அதிலும் ஜெய் வேற சர்ப்ரைஸ் ஏண்ட்ரி கொடுக்கிறார். அட படத்துல நயன்தாரா இருக்காங்க...அப்படின்னு ஒருவர் சொன்னால் தான் நமக்கு தெரியும். சூர்யாவை வழக்கம் போல் காதலிக்கும் கதாபாத்திரம். ப்ரணிதா கெஸ்ட் ரோல் தான் போல.

## க்ளாப்ஸ்

மாஸ், ஷக்தி என இரண்டு கதாபாத்திரத்திலும் செம்ம வித்தியாசம் காட்டியுள்ளார் சூர்யா. இத்தனை அழகாக தமிழை பேசியதற்கே சூர்யாவிற்கு ஒரு சல்யூட். இரண்டாம் பாதியில் வரும் சுவாரசியமான டுவிஸ்டுகள் ரசிக்கும் படி உள்ளது. நீண்ட இடைவேளைக்கும் பிறகு யுவனின் பின்னணி இசை மிரட்டியிருக்கிறார், அதிலும் குறிப்பாக ஆவி சூர்யாவிற்கு வரும் தீம் மியூஸிக் சுப்பர் சார்.

## பல்ப்ஸ்

இது வெங்கட் பிரபு படமா, ஏன் இத்தனை Sentiment என்று திரையரங்கிலேயே சில இடங்களில் கமெண்ட் விழுந்தது, பிறவி பாடலை தவிர வேறு எந்த பாடல்களும் ரசிக்கும் படி இல்லை. மொத்தத்தில் 'மாசு'வில் சூர்யாவுடன், வெங்கட் பிரபு இணைந்து 6 அடிக்க முயற்சி செய்து 4 அடித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகத்திய சம்கிதம் தந்த அறிவியல் பொக்கிசம்

**இற்றைக்கு 3500 ஆண்டுகளுக்கு முன் அகத்தியர் வாழ்ந்ததாக சரித்திர நூல்கள் கூறுகின்றன. ஆகையால், இங்கே *“அகத்திய சம்கிதம்”* தந்த இந்த அரிய அறிவியல் பொக்கிசம், நிச்சயமாக 3500 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழக மூதாதையரின் சாதனையாக இருக்கிறது.**

சுமார் ஒன்பதாயிரம் ஆண்டுகளுக்கு (9000) முன் இந்தியர்கள் கண்ட விமான அறிவியல், வானவியல் சாஸ்திரம் என்ற வரிசையில் இப்போது, சுமார் நான்காயிரம் (4000) ஆண்டுகளுக்கு முன்னர் தமிழன் அறிந்து வைத்திருந்த ஒரு அரிய தொழில் நுட்பத்தைப் பற்றி இக்கட்டுரையில் காண்க. *அகத்திய சம்கிதம்* என்ற அறிவியல் பொக்கிசத்தில் உள்ள சில வரிகள் கீழே.



**“சன்ஸ்தப்ய ம்ரின்மாய பத்ரே
தாம்ரப்பத்ரம் சுசான்ஸ்க்ரிதம்
சாட்யெச்சிகிக்ரிவன் சர்த்ரர்ப்ஹி
கஷ்த்பம்சுப்ஹி
தஸ்தலொஷ்தோ நித்தவ்யாஹ்
பர்தச்சழிதஸ்த்ஹா
சன்யோகஜ்ய்தே தேஜோ
மித்ரவருண சங்கியதம்”**

மேலே எழுதப்பட்ட வரிகள் நம்மால் புரிய முடியாதவையாக இருக்கலாம். ஆனால், இந்த வரிகளை வடித்தவர் புலவர் அகத்திய முனிவர் ஆவார். இது அகத்திய சம்கிதம் என்ற அறிவியல் பொக்கிசத்தின் ஒரு மிகச்சிறிய பகுதி மட்டுமே.

இதற்கான விளக்கத்தை இப்போது பார்ப்போம்.

ஒரு மண்குடுவையை எடுத்து, அதனுள்ளே தாமிர தகடை செலுத்தி சிறிதளவு சிகிக்ரிவம் நிரப்ப வேண்டும். பின்னே அதை ஈரமான மரத்தூள், பாதரசம் மற்றும் துத்தநாகத்தைக் கொண்டு பூசி, இரண்டு கம்பிகளை இணைத்தால் மித்ர வருண சக்தியைப் பெறலாம் என்று இது தெரிவிக்கிறது.


மித்திரவரண சக்தியா அது என்ன? சித்தர்கள் தவமிருந்து பெறும் சக்தியா? இப்படி நீங்கள் நினைத்துக் கொள்ளலாம். ஏனெனில் இது அகத்தியரது நூலில் இருந்து பெறப்பட்டதாச்சே!

இது நவீன விஞ்ஞான உலகத்தில் கண்டுபிடிக்கப்பட்டு இன்று மிகப் பெரிய பயன்பாட்டில் இருக்கும் ஒரு முக்கியமான சக்தியைப் பற்றித் தெரிவிக்கிறது.

அதுபற்றி அறிய மேலும் படியுங்கள்.


Rao Sahep Krishnaji Vajhe (சுருக்கமாக கிருஷ்ணாஜி) 1891 ஆம் ஆண்டு இந்தியாவின் புனேவில் தமது பொறியியல் படிப்பை முடித்துவிட்டு, துறை சார்ந்த விடயங்களை பண்டைய கால படைப்புகளில் தேடலைத் தொடங்கினார்.

அப்போது இந்தியமாகாணமான உஜ்ஜெய்னி மாகாணத்தைச் சேர்ந்த Damodar Tryambak Joshi (சுருக்கமாக ஜோஷி) ஜோஷியிடம் ஒரு சில பண்டைய ஆவணங்களைப் பெற்றுத் தனது ஆய்வுகளைத் தொடங்கினார். அது சுமார் கி.மு. 1550 ஆம் ஆண்டின் ஆவணம். நாம் மேலே பார்த்த அகத்தியரின் அந்த வரிகளைப் படித்தார். அது சமஸ்கிருதத்தில் எழுதப்பட்டிருந்ததால், அதனைப் தெரிந்துகொள்வதற்காக ஒரு சமஸ்கிருத வல்லுனரான Dr.M.C.Sahastra buddhe (சுருக்கமாக புத்தே) அவர்களை அணுகினார். புத்தே அப்போது நாக்புர் என்ற இந்தியப் பல்கலைக்கழக சமஸ்கிருதத் துறைத் தலைவராக இருந்தார். அவர், இதைப் படித்துப் பார்த்ததும் ஆச்சரியத்துடன் அதிர்ந்து போய், இது ஏதோ ஒரு டேனியல் செல்லைப் போன்ற மின்கலத்தின் கட்டுமானத்தைப் போன்று இருக்கிறது என்றார்.



இதை மேலும் ஆராய வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட புத்தே அதை நாக்பூரைச் சேர்ந்த பொறியியல் வல்லுனர் P.P.Hole (ஹோல் ) அவர்களிடம் அதைக் கொடுத்து ஆராயச் சொன்னார். இதைக் கேட்டதும் கிருஷ்ணாஜிக்கு உற்சாகம் பீறிட்டு வர அவரும் களத்தில் குதித்தார்.

ஒவ்வொன்றாய் படித்துப் படித்து அதில் கூறப்பட்டுள்ளதைப் போன்றே தனது மின்கலத்தை வடிவமைத்தார். இந்த பிரயத்தனத்தின் போது கிருஷ்ணாஜிக்கு ஒரு தடங்கல் ஏற்பட்டது. அது என்ன வாயின் *சிகிக்ரிவம்* என்ற சொல். இந்த சொல்லின் சரியான அர்த்தம்- பொருந்தும் படியாக அதைப் புரிந்துகொள்வதில் சிரமம் ஏற்பட்டது.




சமஸ்கிருத அகராதியில் சிகிக்ரிவம் என்பதன் பொருள் *மயிலின் கழுத்துப் பகுதி* என்று இருந்தது.

இதனால் இவர்கள் இருவரும் பக்ஹ் என்ற -ஒரு மயில்களின் சரணாலயத்துக்குச் சென்றார்கள். அங்கே தலைமைப் பொறுப்பதிகாரியாய் இருந்தவரி டம் போய் “ஏதாவது இறந்த மயில் கள் உள்ளதா அல்லது இங்கிருக்கும் மயில்கள் எப்போது சாகும்” என கேட்க, அவருக்கு கோபமே வந்து விட்டது. பிறகு இவ்விருவரும் நிலை மையை விளக்கிக் கூற, உடனே பக்ஹ் சிரிக்க ஆரம்பித்து விட்டார். இரு வரும் திகைப்புடன் அவரை நோக்க, பக்ஹ் சொன்னார்; “அது மயிலின் கழுத்து அல்ல. மயிலின் கழுத்தைப் போன்ற நிறம் உள்ள பொருள்.” இதைக் கேட்ட தும் அவர்களுக்கு சிந்தனை முளைத்தது. ஆஹா! ஆம்! அது தான் அது! மயிலின் கழுத்துநிறம்! அதுதான் காப்பர்(கொப்பர்) சல் பேட்! (செப்பு சல்பேற்) கண்டு பிடித்தாகிவிட்டது.

அடுத்த சில மணிநேரங்களில் மின் கலமும் தயாரானது. அந்த மின் கலத்தை ஒரு *மல்டி மீட்டரை* வைத்து ஆராய்ந்த பொழுது, 1.38 திறந்த சுற்று மின்னழுத்தம் மற்றும் 23 மில்லி அம்பியர் குறுக்குச்சுற்று மின் சாரமும் கிடைக்கப்பெற்றது. ஆமாம்! வெள்ளைக்காரன் Electric Current என்றதை *மின்சாரம்* என்று தமிழில் பயன்படுத்தி வருகிறோமே, அதற்கு நம் மூதாதையர், இட்டிருந்த பெயர் தான், மித்ரவருண சக்தி.

மித்ரவருண சக்தி என்ற பெயருக்குங்கூட விளக்கமுண்டு. வருணன் என்றால் தண்ணீர் என்பதாகும். மித்ரன் என்றால் சூரியன் என்று பொருள். ஆனால், இங்கே ஹைட்ரஜனைக் குறிக்க மித்ரா என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார் அகத்தியர். ஏனெனில் சூரியனின் சக்தி ஹைட்ரஜனில் தான் உள்ளது. அதனால், இங்கே ஹைட்ரஜனைக் குறிக்க மித்ரா என்று குறிப்பிடுகிறார்.

தண்ணீரிலிருந்து ஹைட்ரஜனைப் பிரித்து எடுத்தால், மாபெரும் மித்ரவருண சக்தியை நாம் பெறலாம். எனவே, அவ்வாறு பெறப்பட்ட சக்தியை மித்தரவருண சக்தி என்கிறார் அகத்தியர்.

உண்மையில் இத்தகைய விஞ்ஞான அறிவை-மின்சாரம் பற்றிய அறிவை அந்தக்காலத்தில் நமது சந்ததியினர் பெற்றிருந்தனர் என்பது வியப்பளிக்கிறதல்லாவா!

இதுமட்டுமல்ல, அவர் மேலும் கூறவதாவது, இதுபோல நூறுகலன்களைச் செய்து தண்ணீர்ரப் பயன்படுத்தினால், அது பிராணவாயுவாகவும் ஹைட்ரஜனாகவும் பிரியும் என்கிறார். இந்த ஹைட்ரஜன் மிதக்கும் தன்மையுடையது எனவும் இதை ஒரு பையில் அடைத்தால் பறப்பதற்குப் பயன்படுத்தலாம் எனவும் தெரிவித்திருக்கிறார்.

அது மட்டுமல்லாமல் இதே அகஸ்தியர் சம்கிதாவில், நமது நவீன கால Electroplating என்று சொல்லப்படுகிற அதே முறையை தெள்ளத் தெளிவாக விவரித்து செயற்கையாக தங்கச் சாயம் பூசுவது எப்படி என்றும் குறிப்பிட்டுள்ளார். நம்பமுடிகிறதா? நம்பித்தான் ஆகணும்!

**தொகுப்பு: யாழ்.பாமா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# facebook

# கடவுள் இருக்கவே செய்கிறார்



ராஜேஷ் முடிவெட்டிக் கொள்ள வழக்கமாகச் செல்லும் கடைக்குச் சென்றான். முடிதிருத்துபவர் அவனுக்கு நெருக்கமான நண்பர். இருவரும் பல விடயங்கள் பற்றி மகிழ்ச்சியாக உரையாடுவர்.

அன்றும் அப்படியே பல விடயங்கள் பற்றி பேசினர். இடையில் கடவுளைப் பற்றிப் பேச்சு வந்தது.

முடிதிருத்துபவர், எனக்குக் கடவுள் நம்பிக்கை இல்லை. கடவுள் இருக்கிறார் என்று நான் நம்ப மாட்டேன்! என்றார்.

ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்? என்று கேட்டான் ராஜேஷ்.

காரணம் மிகச் சுலபமானது. தெருவில் போய்ப் பாருங்கள். கடவுள் இருந்தால் நோயால் வாடுபவர்கள் இருப்பார்களா? கடவுள் இருந்தால் கைவிடப்பட்ட குழந்தைகள் தெருவில் அலையுமா? கடவுள் இருந்தால் துன்பமும், வலியும் இராது.

இதையெல்லாம் அனுமதிக்கும் கடவுள் நிச்சயம் இருப்பார் என்று நான் நம்பவில்லை, என்றார் முடிதிருத்துபவர்.

ராஜேஷ் அதற்கு மறுப்பு சொல்லவில்லை. வீணாக விவாதத்தை வளர்க்க வேண்டாம் என்று மௌனமானார்.

முடிதிருத்தும் வேலை முடிந்து, ராஜேஷ் வெளியே போனார்.

அவர் போன சற்று நேரத்தில், வீதியில் நீண்ட தாடியும் அடர்ந்த முடியுமாய், ஒரு ஆள் நிற்பதை கடைக்காரரர் பார்த்தார்.

அந்த ஆளைப் பார்த்தால், முடிதிருத்தும் கடையை மாதக் கணக்கில் எட்டிப் பார்க்காதவர் போலத் தோன்றியது. அவ்வளவு அடர்ந்தும், சடை பிடித்த முடியும் தாடியும் இருந்தன.

அப்போது முன்னால் வந்து போன ராஜேஷ் மீண்டும் கடைக்கு வந்தார்.

என்ன? என்று கேட்டார் முடிதிருத்துபவர்.

ஒரு விடயம்! முடிதிருத்துபவர் யாருமே இல்லை என்று சொல்லலாம், என்று வந்தேன்.

என்ன உளறுகிறீர்? இதோ! நான் இருக்கிறேன். நானும் ஒரு முடிதிருத்துபவன் தானே? அப்படி இருக்க முடிதிருத்துபவரே இல்லை என்று எப்படி நீங்கள் சொல்லலாம்? என்று எரிச்சலாக கேட்டார் முடிதிருத்துபவர் .

இல்லை! முடிதிருத்துபவர் இருப்பது உண்மை என்றால் அதோ தெருவில் நிற்கிற அந்த ஆசாமி இப்படி அலங்கோலமான தலைமுடி, சிக்குப் பிடித்த தாடியுடன் இருப்பானேன்? என்று கேட்டார் ராஜேஷ்.

ஓ! அதுவா? விடயம் என்னவென்றால், அந்த ஆசாமி என்னிடம் வருவதில்லை!" என்றார் முடிதிருத்துபவர்.

சரியாகச் சொன்னீர்கள். அதுதான் விடயம். கடவுளும் இருக்கவே செய்கிறார். ஆனால், என்ன நடக்கிறது என்றால், மக்கள் அவரை அணுகுவதில்லை. அவரைத் தேடிப் போவதில்லை. அதனால் தான் எங்கும் நிறைய துன்பமும், வேதனையும் உலகில் நிறைந்துள்ளன! என்றார் ராஜேஷ். உண்மையை உணர்ந்தார் முடிதிருத்துபவர்.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 387

Search for people, places and things | Nagendram Home

அஜந் குலசிங்கம்




ஐங்கரன் சிவசாந்தன்





அழகோன் கௌத்தம்





மைக்கல் மைக்




ரவிவர்மன் இராஜகோபால்




திவாகரன் திவாகரன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிம்பாவேயை வென்றது பாகிஸ்தான்

சிம்பாவே கிரிக்கெட் அணி பாகிஸ்தானுக்கு சுற்றுப்பயணம் சென்று விளையாடி வருகிறது. 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடர் நடந்து வருகிறது. முதல் போட்டியில் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்றது.

2-வது போட்டி நேற்று லாகூர் நகரில் நடந்தது.

முதலில் விளையாடிய சிம்பாவே அணி 50 ஓவர் முடிவில் 7 விக்கெட் இழப்புக்கு 268 ஓட்டங்களை எடுத்தது.

ஷிக்கந்தர் ரசா (100 ஓட்டங்கள், 85 பந்து, 8 பவுண்டரி, 3 சிக்சர்) சதம் அடித்தார். சிபாபா 99 ஓட்டங்களில் ஆட்டமிழந்து ஒரு ஓட்டத்தில் சதத்தை தவறவிடடார். வகாப் ரியாஸ், யாசிர் ஷா தலா 2 விக்கெட் வீழ்த்தினார்.

269 ஓட்டங்கள் இலக்கை நோக்கி பாகிஸ்தான் விளையாடியது. அணித்தலைவர் அசார் அலி சிறப்பாக விளையாடி சதம் அடித்தார்.

அவர் 102 ஓட்டங்கள் (104 பந்து, 8 பவுண்டரி) எடுத்து ஆட்டமிழந்தார். பாகிஸ்தான் அணி 47.2 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 269 ஓட்டங்கள் எடுத்து 6 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

ஹாரிஸ் சோகைல் 52 ஓட்டங்களிவுலும், சோயிப் மாலி 36 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர். இந்த வெற்றி மூலம் பாகிஸ்தான் ஒரு நாள் போட்டி தொடரை கைப்பற்றியது.

ஏற்கனவே 20 ஓவர் போட்டி தொடரை பாகிஸ்தான் கைப்பற்றி இருந்தது.

17 மாதங்களுக்கு பிறகு பாகிஸ்தான் அணி ஒருநாள் போட்டி தொடரை கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)



# இன்றைய போட்டி

(கரணவாய்)

கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் Kings of Jaffna கிண்ணத்திற்கான மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி இன்று மாலை 3.00 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் திக்கம் இளைஞர் கழகத்தை எதிர்த்து ஞானகலா விளையாட்டுக்கழகமும். மாலை 4.00 மணிக்கு நடைபெற்றவுள்ள போட்டியில் ரெட் றேஞ்சர்ஸ்விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மயிலிட்டி கண்ணகி அணியும் மோதவுள்ளது. (க-60)












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org